விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2050 புரட்டாதி 28 செவ்வாய்க்கிழமை (15.10.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 300

தமிழர்கள் நடந்ததை மறக்க வேண்டாம்

## ஆனால் ஒருவருக்கொருவர் மன்னிப்பளிக்க வேண்டும்

### த இந்து நாளிதழிற்கு பசில் செவ்வி

(கொழும்பு)

நடந்தவற்றை தமிழர்கள் மறக்க வேண்டியதில்லை. ஆனால் ஒருவருக்கொருவர் மன்னிக்க வேண்டும் என்று தெரிவித்துள்ளார் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பசில் ராஜபக்ஷ.

23

தமிழரின் உரிமையை வலியுறுத்தி

## ஐந்து கட்சிகள் கையொப்பமிட்ட ஆவணத்தில் உள்ள விபரங்கள்

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்களின் உரிமையை வலியுறுத்தி யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தால் ஒழுங்கமைக்கப்பட்டு தயாரிக்கப்பட்ட பொது ஆவணத்தில் ஐந்து தமிழ்க் கட்சிகள் கையெழுத்திட்டுள்ளன.

கையொப்பமிட்டுள்ள ஆவணத்தின் முழுமையான விபரம் வருமாறு.

24

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்களின் நிலைப்பாடு

# பொது உடன்படிக்கையில் தமிழ்க் கட்சிகள் கைச்சாத்து

## ஒப்பமிட முன்னணி மறுப்பு

(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்களின் நிலைப்பாடு தொடர்பில் பொது இணக்கப்பாட்டு ஆவணத்தில் 5 தமிழ்க் கட்சிகள் கையொப்பமிட்டுள்ளன. தமிழ் அரசுக் கட்சி, தமிழ் மக்கள் கூட்டணி, ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எவ், புளொட் ஆகிய கட்சிகள் கையெழுத்திட்டுள்ளன. ஒப்பமிட தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மறுத்துள்ளது. (23ஆம் பக்கம் பார்க்க)



இத்தாலியில் விபத்து

## யாழ்.இளைஞன் உயிரிழப்பு

(றோம்)

இத்தாலி - கார்னிக்லியானோ பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் தமிழ் இளைஞன் ஒருவர் பலியானார்.

23

## கோண்டாவிலில் 2 கிளைமோர் மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கோண்டாவிலில் மறைத்து வைக்கப்பட்டிருந்த இரண்டு கிளைமோர்களை கைப்பற்றியுள்ளதாக பொலிஸார் அறிவித்துள்ளனர்.

இரண்டும் 15 கிலோ கிராம் நிறையுள்ள இரண்டு கிளைமோர்கள்.

23

புதைக்கப்பட்ட நிலையில்

## தென்மராட்சியில் குண்டு மீட்பு (8)

(கரணவாய்)

தென்மராட்சி வரணி குடமியன் பகுதியில் பயங்கரவாத ஒழிப்பு பிரிவினர் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையில் கிளைமோர் குண்டு ஒன்று மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

23

யாழ்ப்பாண விமான நிலையத்தில்

## தென்னிலங்கையர்களுக்கே வேலைவாய்ப்பு - சுரேஸ் குற்றச்சாட்டு



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண சர்வதேச விமான நிலையத்தின் பணிகளுக்கு தமிழ் இளைஞர் யுவதிகளுக்கே அதிக முன்னுரிமை கொடுக்க வேண்டும் என ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன்

23

## எங்களை திட்டமிட்டு ஓரங்கட்டி விட்டார்கள்

### கஜேந்திரகுமார் பொன்னம்பலம் குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

ஒற்றையாட்சி அரசியலமைப்புக்கான இடைக்கால யோசனையை தமிழ் தேசிய மக்கள் முன்னணி நிராகரிக்கிறது எனும் குறிப்பையாவது பதிவு செய்யுங்கள், அப்படியானால் நாம் ஆவணத்தில் கைச்சாத்திடுவோம் என வலியுறுத்தினோம். அது நடக்கவில்லை. எங்களை திட்டமிட்டு ஓரங்

23

## மதுவரித்திணைக்களத்தினர் மீது பொலிஸார் துப்பாக்கிச் சூடு

### கிளிநொச்சியில் சம்பவம்; ஒருவர் படுகாயம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி அறிவியல் நகர் பகுதியில் நேற்று அதிகாலை இடம்பெற்ற பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் காயமடைந்து கிளிநொச்சிமாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் கெப்பரிக்கொலா மதுவரித்திணைக்களத்தின் வாடகை வாக

23

## தமிழரின் பிரச்சினைகளுக்கு விரைவாக தீர்வு கிடைக்கும்

### நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன்



(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்களது பிரச்சினைகள் தீர்க்கப்படும் காலம் நெருங்கிவந்திருப்பதாக, வடமாகாண முன்னாள் முதலமைச்சரும், தமிழ் மக்கள் கூட்டணியின் பொதுச்

23

## வாக்குறுதியை நிறைவேற்றுவதற்காக எனது உயிரையும் அர்ப்பணிப்பேன்

### ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸ

(கொழும்பு)

மக்களுக்கு வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்றுதவற்காக எனது உயிரையும் அர்ப்பணிப்பேன் என ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

நேற்று இரத்தினபுரியில் இடம்பெற்ற புதிய ஜனநாயக முன்னணியின் தேர்தல் பிரசாரக்கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். (ம-3)

## தேர்தலை கண்காணிக்க

### வெளிநாட்டு குழுக்கள்

(கொழும்பு)

ஜனாதிபதி தேர்தல்களை கண்காணிப்பதற்காக நான்கு வெளிநாட்டுக்குழுக்கள் இலங்கை வரவுள்ளதாக தேர்தல் கண்காணிப்பகமான பப்ரல் தெரிவித்துள்ளது. (ம-3)

# யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத் திறப்பு விழாவுக்கு

## இந்தியாவிலிருந்து விருந்தினர்கள்

(கொழும்பு)

யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தில் தரையிறங்கவுள்ள முதலாவது விமானத்தில் இந்தியாவில் இருந்து விருந்தினர்கள் அழைத்து வரப்படவுள்ளனர் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

நாளைமறுதினம் வியாழக்கிழமை, யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் இணைந்து திறந்து வைக்கவுள்ளனர்.

இதன்போது, சென்னையில் இருந்து வரும் அலையன்ஸ் எயார் விமானம் ஒன்று தரையிறங்கவுள்ளது.

இந்த விமானத்தில் விமானத்துறையைச் சார்ந்த அழைக்கப்பட்ட விருந்தினர்கள் இந்தியாவில் இருந்து அழைத்து வரப்படவுள்ளனர்.

இவர்களை வரவேற்கும் நிகழ்வில் ஜனாதிபதியும் பிரதமரும் பங்கேற்பார்கள் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையம் திறக்கப்பட்டதும் சென்னை உள்ளிட்ட இந்திய நகரங்களில் இருந்து வாரத்தில் மூன்று சேவைகளை நடத்தவுள்ளதாக அலையன்ஸ் எயார் நிறுவனம் உறுதிப்படுத்தியுள்ளதாக அதிகாரப்பூர்வ வட்டாரங்கள் தெரிவித்தன. (ம-3)

# சோதனைகளற்ற பாதுகாப்பான சூழ்நிலையை மீண்டும் உருவாக்குவேன்

## கோத்தபாய ராஜபக்ஷ தெரிவிப்பு

நாட்டில் லிபரல்வாதிகளும் சர்வதேசத்தின் எண்ணங்களுக்கு அடிபணிகின்ற அரச சார்பற்ற நிறுவனங்களும் இருக்கின்ற வரையில், தேசிய பாதுகாப்புக்கு முன்னுரிமை வழங்கும் நிலைமை இருக்காது என்று ஸ்ரீ லங்கா பொதுஜன முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் வைத்து அவர் இதனைக் கூறியுள்ளார்.

30 வருட கால யுத்தத்தை நிறைவு செய்து, நாட்டில் சோதனைகள் அற்று, அடையாள அட்டையை காண்பிக்காமல் கூட்டங்களில் பங்கேற்கக்கூடிய நிலைமை 2009ல் உருவாக்கப்பட்டது.

ஆனால் இப்போது துரதிர்ஷ்டவசமாக அந்த நிலைமை இல்லாமல் செய்யப்பட்டு விட்டது.

தாம் ஆட்சிக்கு வந்தால் மீண்டும் சோதனைகள் அற்ற பாதுகாப்பான சூழ்நிலையை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று கோத்தபாய ராஜபக்ஷ கூறியுள்ளார்.

அதேநேரம், கல்கமுவையில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் உரையாற்றிய எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ, ஸ்ரீ லங்கா பொதுஜன முன்னணி மீண்டும் ஆட்சி அமைத்த பின்னர், அனைத்து விவசாயிகளுக்கும் உரமானியம் இலவசமாகவே வழங்கப்படும் என்று தெரிவித்தார்.

கடந்த காலங்களில் தாம் விவசாயிகளின் நன்மைக்காக பல நடவடிக்கைகளை எடுத்திருந்தபோதும், தற்போதைய அரசாங்கம் அவற்றை இல்லாமல் செய்திருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

மேலும் வடக்கோ, தெற்கோ அனைத்து விவசாயிகளினதும் பிரச்சினைகள் சமமானவையே என்றும் மகிந்த ராஜபக்ஷ கூறினார். (ம-3)

# அரச சொத்துக்களை மக்கள் மயமாக்குவேன்

## மீண்டும் தெரிவித்தார் அநுர

ஆட்சியாளர்கள் கொள்ளையடித்து தன்வசப்படுத்தியுள்ள அரச சொத்துக்களை எமது ஆட்சியில் மக்கள் மயப்படுத்தி முன்னாள் ஜனாதிபதி, பிரதமர்கள் என அனைவருக்கும் கொடுக்கும் அநாவசிய சலுகைகளை முழுமையாக நிறுத்துவோம் என தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

பத்தரமுல்லயில் நேற்று தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதித் தேர்தலுக்கான பிரசார மக்கள் கூட்டத்தில் பேசியபோதே அவர் இதனைக் கூறினார்.

நாட்டில் சகல பகுதிகளிலும் ஜனாதிபதிக்கான மாளிகைகள் உள்ளன. ஆனால் அதில எவரும் குடியிருப்பதும் இல்லை, ஒரு இரவைக்கூட அங்கிருந்து அனுபவிப்பவர்களா எனத் தெரியவில்லை. ஆனால் இந்த மாளிகைகளை பராமரிக்க கோடிக்கணக்கில் பணம் ஒதுக்கப்படுகின்றது.

மைத்திரிபால சிறிசேன ஓய்வு பெற முன்னரே 800 கோடி ரூபாய் செலவழித்து வீடொன்றை நிர்மாணித்துள்ளார் என அறிந்துகொள்ள முடிந்தது.

எனவே நாம் ஆட்சிக்கு வந்தால் இவ்வாறு முன்னாள் ஜனாதிபதிகள், பிரதமர்களுக்கு ஒதுக்கும் அநாவசிய செலவுகள் அனைத்தையும் நிறுத்துவோம்.

அத்துடன் ஆட்சியை கைப்பற்றி இரண்டு மாதத்தில் முழுமையாக அரச சொத்துக்களை தன்வசப்படுத்திய அனைவருக்கும் எதிராகவும் நடவடிக்கை எடுப்போம். வழ ங்கா விட்டால் நாமே அனைத்து சொத் துக் களையும் கைப்பற்றி மக்கள் மயப்படுத்துவோம்.

அரச சொத்துக் களை கொள்ளை யடிக்க எவருக்கும் உரிமையில்லை. அரச சொத்துக்கள் என்பது மக்களின் சொத்துகள். அதனை மக்களே அனுபவிக்க வேண்டும் என்பதே எமது கொள்கையாகும்.

நாட்டில் அநாவசியமாக செலவழிக்கும் பணத்தை சரியாக கையாண்டு கல்விக்கும் சுகாதாரத்துறைக்குமான உயரிய சேவையை செய்ய முடியும்ஆனால் இன்று இந்த பணம் முழுமையாக ஆட்சியாளர் கைகளில் சிக்கிக்கொண்டுள்ளது என்றும் அவர் கூறினார். (ம-3)




நாமல் ராஜபக்ஷவை

வரவேற்கின்றோம்

மானிப்பாய், ஆனைக்கோட்டை **துரைராஜா** மண்டபத்துக்கு பாராளுமன்ற உறுப்பினர் திரு.**நாமல் ராஜபக்ஷ** அவர்கள் இன்று 15.10.2019 செவ்வாய்க் கிழமை காலை 10 மணிக்கு வருகை தரவுள்ளதையடுத்து வலிகாமம் தெற்கு முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் **வ.சிவநாதன்** தலைமையில் ஆரம்பிக்கப்படவுள்ள இந்நிகழ்வில் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன யாழ். மாவட்ட அமைப்பாளர் **ரஜீவ்** அவர்களும் வலிகாமம் மேற்கு முன்னாள் பிரதேச சபைத் தலைவரும் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் முக்கியஸ்தரும் சிறந்த பேச்சாளருமான **ந.திரிலோகநாதன்** அவர்களும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

அனைவரையும் வருக வருக என வரவேற்கின்றோம்

**ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன** மானிப்பாய் தொகுதி அமைப்பாளர்

(C-7914)


# மகிந்த ராஜபக்ஷ தலைமையில் தமிழர்களின் பிரச்சினைக்கு இரண்டு வருடங்களில் தீர்வு

## யாழில் நாமல் உறுதி

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்களின் தேசிய பிரச்சினைக்கான தீர்வை நோக்கிப் பயணிக்கும்போதே ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. எதிர்வரும் நவம்பர் மாதம் 16ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ள எமது புதிய ஆட்சியில் மகிந்த ராஜபகஷ தலைமையில் அனைத்து தீர்வுகளையும் பெற்றுத் தருவோம். எங்களை நம்புங்கள் எனப் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ வேண்டுகோள்விடுத்துள்ளார்.

கோத்தபாய ராஜபக்ஷவை ஆதரித்து ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் ஏற்பாட்டில் யாழ். நீராவியடி இலங்கை வேந்தன் கலைக் கல்லூரியில் நேற்று நடைபெற்ற தேர்தல் பிரசார கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித் தார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள இளைஞர், யுவதிகளுக்கு இந்த அரசாங்கம் வேலை வாய்ப்பினைப் பெற்றுக்கொடுக்கவில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் எதிர்க்கட்சி தலைவராக இருந்தும் கூட வடக்கில் உள்ள இளைஞர்களின் வேலைவாய்ப்பை பெற்றுக்கொடுக்கவில்லை.

ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் தலைவர் டக்ளஸ் தேவானந்தா மகிந்த ராஜபக்ஷ ஆட்சிக் காலத்தின் போது, மகிந்த ராஜபக்ஷவுடன் கலந்துரையாடி பல பிரச்சினைகளுக்கு தீர்வைப் பெற்றுக்கொடுத்தார்.

அதன்காரணமாகவே, வடக்கில் இருந்த இளைஞர் யுவதிகளுக்கு வேலைவாய்ப்பு கிடைத்தது. வடகிழக்கு மாகாணத்தில் பொருளாதாரத்தை கட்டி எழுப்பக்கூடிய எந்த நடவடிக்கையையும் இந்த அரசாங்கம் செய்யவில்லை. இன்று இந்தப்பகுதியில் உள்ள மக்கள் கடன்காரர்களாக இருக்கின்றார்கள்.

நீங்கள் எங்களை நம்புங்கள். எங்களோடு ஒன்றிணைந்தால், உங்களின் அனைத்துப் பிரச்சினைகளையும் தீர்வுக்கு கொண்டு வருவோம்.

1983ஆம் ஆண்டில் இருந்து இதுவரையில் தீர்க்கப்படாத பிரச்சினைகள் நிறைய உள்ளன. காணிப் பிரச்சினை, சிறைக் கைதிகள் பிரச்சினை இன்னும் தீர்க்கப்படவில்லை. 2009 முதல் 2015 வரை புனர்வாழ்வளிக்கப்பட்ட போராளிகளை விடுவித்து, அவர்களுக்கான வேலைவாய்ப்பினைப் பெற்றுக் கொடுத்தோம்.

தேசிய பிரச்சினைக்கான தீர்வை நோக்கிப் பயணிக்கும்போதே ஆட்சி மாற்றம் ஏற்பட்டதென்பது உங்களுக்குத் தெரியும். எதிர்வரும் நவம்பர் மாதம் 16ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ள எமது புதிய ஆட்சியில் மகிந்த ராஜபக்ஷ தலைமையில் அனைத்து தீர்வுகளையும் பெற்றுத் தருவோம் என உறுதியளித்தார்.

எங்களைப் பொறுத்தவரையில் வடக்கு கிழக்கு என்ற வித்தியாசம் கிடையாது. நாங்கள் அனைவரும் இலங்கை மக்கள். அரசியல் லாபங்கள் கருதி நீங்களும் நாங்களும் பிரிந்து செல்ல வேண்டிய எந்தத் தேவையும் கிடையாது. எனவே, இந்த நாட்டில் இருக்கும் மக்களாகிய நாங்கள் அனைவரும் ஒன்றிணைந்து எங்களின் பிரச்சினைக்கான தீர்வினைத் தேடுவோம்.

வடபகுதியை அபிவிருத்தியடைந்த பிரதேசமாக மாற்றுவதற்கு, அதேநேரம் யாழ். நகரை, மேலும் அபிவிருத்தியடைந்த பிரதேசமாக மாற்றுவதற்கு நடவடிக்கை எடுப்போம் என்றார். (ம-3,101)


**PHARMACY இல் தொழில் வாய்ப்புகள்**

1. External Pharmacist Examination Course (2 Years)
   தகைமை:- G.C.E A/L இரசாயன பாடம் உட்பட மூன்று பாடத்தில் சித்தி
2. Certificate in Pharmacy Course (6 Months)
   தகைமை:- G.C.E O/L ஆங்கிலம் உட்பட 6 பாடங்களில் சித்தி
3. Pharmacy Technician Course (NVQ Level 4 - 1 Year)
   தகைமை:- தொடர்ந்து 4 வருடங்களுக்கு மேலதிகமாக மருந்தகத்தில் பணிபுரிந்தமை

மேற்படி பயிற்சிநெறிகள் புதிதாக November 2019, 23ம் திகதி சனிக்கிழமை **யாழ்ப்பாணக் கல்லூரி,** வெளிவாரிப் பட்டப்படிப்பு, 464, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

விண்ணப்பப்படிவங்களை நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ பெற்றுக் கொள்ளலாம். (650)

தொடர்பு: **நேரு Sir 077 316 4251**



**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**

**மாணவர்களுக்கான கல்வி நடவடிக்கைகள் மீள் ஆரம்பம்**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் அனைத்து பீடங்களையும் சேர்ந்த மாணவர்களுக்கான கல்வி நடவடிக்கைகள் யாவும் உடனடியாக இன்றிலிருந்து (15.10.2019) ஆரம்பிக்கப்படுகிறது. மேலதிக தகவல்கள் தேவைப்படின் சம்பந்தப்பட்ட பீடங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு மாணவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**பதிவாளர்** (C-7913)

# பல்கலையில் பகிடிவதைகள் உச்சக்கட்டம்

# முறைப்பாடு செய்ய அஞ்சும் மாணவிகள்

## 14 பேரின் உயிர் பறிப்பு; அதிர்ச்சித் தகவல் வெளியீடு

(கொழும்பு)

**றுகுனு பல்கலைக்கழகத்தில் பகிடிவதைகள் உச்சக் கட்டத்தில் தொடர்வதால் பல மாணவிகள் தற்கொலை செய்யும் சூழல் உருவாகியுள்ளதாக அதிர்ச்சித் தகவல் வெளியானது. மாணவிகள் தமக்கு ஏற்படும் கொடுமைகளை வாய்மொழி மற்றும் எழுத்து மூல முறைப்பாடாக சொல்லுவதற்கு கூட அஞ்சுவதாகவும் தெரியவருகிறது.**

மாணவிகளுக்கு எதிராக வார்த்தை துஷ்பிரயோகம் மற்றும் அவர்களின் உடல் அவயவங்களை எடுத்த காணொலிகள் என்பன வெளியாவதாகவும் தெரிய வருகின்றது.

இந்தப் பகிடிவதை இம்சைகள் இதுவரை பல்கலைக்கழக புதுமுக மாணவர்கள் 14 பேரின் உயிரை நேரடியாக பறித்திருக்கிறது.

இப்போது பல்கலைக்கழகங்களில் இடம்பெறும் பகிடிவதையை பாலியல் ரீதியிலான வன்முறை இம்சை என்று பல்கலைக்கழக மானிய ஆணைக் குழுவின் தலைவர் மொஹான் டி சில்வா சுட்டிக்காட்டினார்.

ஒரு காலத்தில் பகிடிவதை என்பது பகிடிவதையை செய்பவருக்கும் செய்யப்படுபவருக்கும் எவ்வித பிரச்சினையையும் ஏற்படுத்தாத ஒரு மகிழ்ச்சிகரமான நிகழ்வாகவே இருந்தது. ஆனால் இப்போது அது நினைவில் மட்டுமே உள்ள நிகழ்வாகும்.

இப்போதைய பகிடிவதையானது ஒரு சித்திரவதையாகும். இதன்போது இடம்பெறும் உடல் ரீதியான இம்சை, மன உளைச்சல் காரணமாக மாணவர்கள் பல்கலைக்கழக படிப்பே வேண்டாம் என பல்கலைக்கழகங்களை விட்டு வெளியேறிச் செல்வதும் உண்டு.

பகிடிவதை இவ்வாறான பெயரில் இருக்கும் நிலையில் அரசாங்கம் இதனை ஒரு பாரதூரமான விடயம் என்று கருதுகிறதா? என்ற கேள்வி பரவலாக எழுந்துள்ளது. 2017/2018 ஆம் கல்வி ஆண்டில் மட்டும் 1989 மாணவர்கள் அல்லது பல்கலைக்கழக அனுமதி பெற்றவர்களில் 6 முதல் 7 சதவீத மாணவர்கள் பல்கலைக்கழகங்களில் தம்மைப் பதிவு செய்து கொண்ட பின்னர் பல்கலைக்கழகங்களுக்கு செல்லாமலே இருந்துள்ளனர்.

எனினும் இதில் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையிலான மாணவர்கள் பகிடிவதையின் பயம் காரணமாகவே பல்கலைக் கழகங்களுக்கு செல்லவில்லை எனக் கூறியிருப்பதாக தெரிய வந்தது.

பல்கலைக்கழகங்களில் இடம்பெறும் மோசமான பகிடிவதை மற்றும் சித்திரவதை பற்றி பெற்றோர் மற்றும் பல்கலைக்கழக மாணவர்களிடம் இருந்து நூற்றுக்கணக்கான கடிதங்கள் ஒவ்வொரு வருடமும் தனக்கு கிடைத்து வருவதாக பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித்தார்.

அண்மையில் ஒரு தாயிடமிருந்து கிடைத்த கடிதத்தில், எனது மகன் பல்கலைக்கழகத்தில் தனக்கு நேர்ந்த மோசமான பகிடிவதை காரணமாக மீண்டும் அங்கு செல்ல மறுக்கிறார்.

அந்த அளவுக்கு அவர் அச்சமடைந்திருக்கிறார். அவரை நிர்வாணமாக்கி மோசமான பகிடிவதை நடந்திருக்கிறது. இதனால் எனது மகன் மோசமான மன உளைச்சலுக்கு ஆளாகியிருப்பதாக நான் அஞ்சுகின்றேன் என அந்தத் தாய் குறிப்பிட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு சில விசமத்தனம் மிகுந்த மாணவர்களின் இவ்வித செயற்பாட்டின் காரணமாக ஒட்டுமொத்த பல்கலைக்கழக முறைமைக்கே களங்கம் ஏற்படுகிறது.

தொடர்ந்தும் பல்கலைக்கழகங்களில் இவ்வாறான செயற்பாடுகள் இடம்பெறுமானால் மாணவர்களின் எதிர்காலம் கேள்விக் குறியாகும் என கல்விமான்கள் சுட்டிக்காட்டினர். (இ-7)

## கலா ஓயா பெருக்கெடுப்பு சாரதிகளுக்கு எச்சரிக்கை



மாற்றுப் பாதைகளைப் பயன்படுத்த அறிவுறுத்து

(எலுவக்குளம்)

புத்தளம்-மன்னார் பிரதான வீதியின் எலுவக்குளம் பகுதி தற்காலிகமாக மூடப்பட்டதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்தது. கலா ஓயாவின் நீர் மட்டம் உயர்ந்ததால் குறித்த பகுதிகளில் வெள்ள நீர் புகுந்தது.

இதுவரையிலும் எலுவக்குளம் சப்பாத்து பாலத்தோடு 3 அடி நீரோட்டை ஒன்றும் பாய்வதாக தெரிவிக்கப்பட்டது. எனவே, மன்னார் நோக்கிப் பயணிக்கும் வாகனங்களின் சாரதிகள் மாற்றுப் பாதைகளைப் பயன்படுத்துமாறு கேட்டுக்கொள்ளப்பட்டனர். (இ-7)

## 25 ஆயிரம் வாக்குகளையாவது பெற முடியுமா?

### சிவாஜிலிங்கத்திற்கு மகிந்த சவால்



(விஜயராம)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் எம்.கே.சிவாஜிலிங்கத்துக்கு 25 ஆயிரம் வாக்குகளையாவது பெறமுடியுமா? என எதிர்க்கட்சி தலைவர் மகிந்த ராஜபக்ஷ சவால் விடுத்தார்.

விஜயராமயில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு சவால் விடுத்தார்.

யாழ்ப்பாணத்தில் சர்வதேச விமான நிலையம் அமைக்கப்படுவது அப்பகுதி மக்களுக்கு சிறந்த பயனான ஒன்றாக இது அமையும்.

குறித்த விமான நிலைய திறப்பு விழாவில் கலந்துகொள்ள அழைப்பு விடுக்கப்பட்டது. நேரமின்மை காரணமாக என்னால் சமுகமளிக்க முடியவில்லை.

ஆனாலும் மிக விரைவில் வடக்கு- கிழக்கு பகுதிகளுக்குச் சென்று, தேர்தல் பிரசாரங்களில் ஈடுபடவுள்ளேன்.

மேலும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரையும் சந்தித்து விசேட கலந்துரையாடலில் ஈடுபடவுள்ளேன்.

இதேவேளை ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் சிவாஜிலிங்கம், மக்களிடமிருந்து 25 ஆயிரம் வாக்குகளையாவது பெறுவாரா? என்பது சந்தேகமே" என மகிந்த தெரிவித்தார். (இ-7)

## வாக்குச் சீட்டு 6 ம் திகதிக்கு முன் ஒப்படைக்கப்படும் என அறிவிப்பு!

(கொழும்பு)

வாக்குச்சீட்டுக்கள் எதிர்வரும் 6 ஆம் திகதிக்கு முன்னர் தேர்தல்கள் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்படும் என அரச அச்சகர் கங்கா கல்பனி லியனகே தெரிவித்தார்.

அரச அச்சகத்தால் தற்போது இதற்குரிய நடவடிக்கைகள் முழு வீச்சில் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தலுக்கான வாக்குச்சீட்டின் நீளம் 26 அங்குலமாக அமையும் எனத் தேர்தல்கள் ஆணைக்குழு அண்மையில் அறிவித்தது.

இதேவேளை, எதிர்வரும் நவம்பர் மாதம் 16 ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## எல்பிட்டிய சபைக்குத் தெரிவானவர்களின் பெயர்ப்பட்டியல் நாளை வெளியீடு

(எல்பிட்டிய)

எல்பிட்டிய பிரதேச சபைக்குத் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களின் பெயர்ப் பட்டியல் நாளை புதன்கிழமை வர்த்தமானியில் வெளியிடப்படும் என காலி மாவட்ட செயலாளர் சோமரத்ன விதானபத்திரண தெரிவித்தார்.

அத்துடன், 25 சதவீத பெண்களின் பிரதிநிதித்துவத்துடன் தமது அங்கத்தவர்களை பெயரிட்டு அனுப்புமாறு கட்சிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

பெயர்ப் பட்டியலை வர்த்தமானியின் மூலம் அறிவித்த பின்னர் பிரதேச சபையின் ஆரம்பக் கூட்டம் நடைபெறும் தினம் அறிவிக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

நடைபெற்று முடிந்த எல்பிட்டிய பிரதேச சபைத் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன 17 ஆசனங்களைக் கைப்பற்றி வெற்றி பெற்றிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# அதிக பாதுகாப்பு மன உளைச்சலை ஏற்படுத்தியது

## -இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை

பாகிஸ்தானில் இலங்கை அணிக்கு வழங்கப்பட்ட பாதுகாப்பு குறித்து இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபையின் தலைவர் வெளியிட்டுள்ள கருத்து குறித்து பாகிஸ்தான் கிரிக்கெட் கட்டுப்பாட்டுசபை ஏமாற்றம்வெளியிட்டுள்ளதாக ஜியோ தொலைக்காட்சி தெரிவித்துள்ளது.

பாகிஸ்தானில் வீரர்களிற்கு வழங்கப்பட்ட கடும் பாதுகாப்பு குறித்து ஏமாற்றம் வெளியிட்டுள்ள இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபையின் தலைவர் சமி சில்வா இவ்வாறான பாதுகாப்பிற்கு மத்தியில் டெஸ்ட்போட்டிகளில் விளையாடமுடியுமா என சந்தேகம் வெளியிட்டுள்ளார்.

இலங்கை அணியை அனுப்பியமைக்காக பாகிஸ்தான் நன்றி வெளியிட்டுள்ளது ஆனால் ஐந்து நாட்களும் வீரர்கள் ஹோட்டலிற்குள் இருக்கவேண்டும் என்பதால் டெஸ்ட்போட்டியில் விளையாடுவது சாத்தியமா என நாங்கள் ஆராய வேண்டியுள்ளது என குறிப்பிட்டுள்ளார்.

இரண்டு மூன்று நாட்கள் ஹோட்டலிற்குள்ளேயே இருந்ததே எனக்கு வெறுப்பை ஏற்படுத்தியது.வீரர்கள் மற்றும் பயிற்சியாளர்களிற்கு இது எந்த பாதிப்பை ஏற்படுத்தும் என்பது குறித்து நாங்கள் சிந்திக்கவேண்டியுள்ளது என சமி சில்வா தெரிவித்துள்ளார்.

நாங்கள் ஐசிசி டெஸ்ட் சம்பியன்சிப் போட்டிகளில் விளையாடப்போகின்றோம் நாங்கள் சிறப்பாக விளையாடவேண்டும் என்பதை கருத்தில் எடுக்கவேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஹோட்டலில் வீரர்கள் தங்கள் மனைவிமார்கள் இல்லாமல் தங்கியிருந்தால் அணி வீரர்கள் மத்தியில் நல்ல பிணைப்பு ஏற்படும் அதிக சுதந்திரம் வீரர்களிற்கு பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய விடயம் என குறிப்பிட்டுள்ள சமி சில்வா அதேவேளை வீரர்கள் வெளியில் செல்லவேண்டியதும் அவசியம் என குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை இந்த கருத்துகுறித்து ஏமாற்றமடைந்துள்ளதாக பாகிஸ்தான் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை தெரிவித்துள்ளது.

இலங்கை வீரர்கள் பொருட் கொள்வனவிற்கு செல்வதற்கும் கோல்ப் விளையாடுவதற்கும் அரசாங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட விருந்துபசார நிகழ்வுகளில் கலந்துகொள்வதற்குமான பாதுகாப்பினை வழங்க நாங்கள் முன்வந்தோம் ஆனால் இலங்கை அதிகாரிகளே அதனை நிராகரித்தனர் என பாகிஸ்தான் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை தெரிவித்துள்ளது.

# இலங்கை கிரிக்கெட் அணியின் பயிற்சியாளராக லீ, ரோட்ஸ்?



இலங்கை கிரிக்கெட் அணிக்கு, அவுஸ்திரேலியா மற்றும் தென்னாபிரிக்கா அணிகளின் முன்னாள் வீரர்கள் பயிற்சியாளர்களாக நியமிக்கப்படவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

கிரிக்கெட்டில் தலைசிறந்த களத்தடுப்பாளராக கருதப்படும் தென்னாபிரிக்கா அணியின் முன்னாள் வீரர் ஜோன்டி ரோட்ஸ்சை, அணியின் பயிற்சியாளராக நியமிக்க, இலங்கை அணி நிர்வாகம் தீர்மானித்துள்ளதாக கூறப்படுகின்றது.

அதேபோல், அவுஸ்ரேலியா அணியின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் பிரெட் லீயை, பந்துவீச்சு பயிற்சியாளராக நியமிக்கவும் இலங்கை கிரிக்கெட் சபை பரிசீலனை செய்து வருவதாக கூறப்படுகின்றது.

அணியின் பயிற்சியாளராக ருமேஷ் ரத்னாயக்க தனது பணியினை தொடருவாரா? அல்லது புதிய தலைமை பயிற்சியாளர் நியமிக்கப்படுவாரா என்பதனை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

# பார்முலா 1 கார்ப்பந்தயம்

## ஜப்பான் கிராண்ட்பிரிக்ஸ் சுற்றில் வால்டேரி பேடாஸ் முதலிடம்



© AFP via Getty Images

பர்முலா-1 கார்பந்தயத்தின் ஜப்பான் கிராண்ட் பிரிக்ஸ் சுற்றில், மெர்சிடஸ் பென்ஸ் அணியின் வீரரான வால்டேரி போடாஸ், முதலிடம் பிடித்துள்ளார்.

ஒவ்வொரு ஆண்டும் 'பார்முலா 1' கார் பந்தயம், 21 சுற்றுகளாக நடைபெறும். ஒவ்வொரு சுற்றும் ஒவ்வொரு நாடுகளில் நடைபெறும்.

இதன்படி, நடப்பு ஆண்டின் 17ஆவது சுற்றான ஜப்பான் கிராண்ட் பிரிக்ஸ் சுற்று, சுசூகா ஓடுதளத்தில் நடைபெற்றது.

இதில் 307.471 கிலோ மீட்டர் பந்தய தூரத்தை நோக்கி, 10 அணிகளை சேர்ந்த 20 வீரர்கள் காரில் சீறிப்பாய்ந்தனர்.

இதில் மெர்சிடஸ் பென்ஸ் அணியின் வீரரான வால்டேரி போடாஸ், பந்தய தூரத்தை 1 மணித்தியாலம் 21 நிமிடங்கள் 46.755 வினாடிகளில் இலக்கை கடந்து முதலிடத்தை பிடித்தார்.

நடப்பு தொடரில், வால்டேரி போடாஸ் பெற்றுக்கொண்ட மூன்றாவது வெற்றி இதுவாகும். அத்தோடு, இவ்வெற்றிக்காக வால்டேரி போடாஸ்க்கு முதலிடத்திற்காக வழங்கப்படும் 25 புள்ளிகளும் வழங்கப்பட்டது.

இதனையடுத்து, அவரை விட 13.343 விநாடிகள் பின்தங்கிய நிலையில், பந்தய தூரத்தை கடந்த, பெர்ராரி அணியின் வீரர் செபஸ்டியன் வெட்டல், இரண்டாவது இடத்தை பிடித்தார். இதற்காக அவருக்கு 18 புள்ளிகள் வழங்கப்பட்டது.

13.858 வினாடிகள் பின்தங்கிய நிலையில், பந்தய தூரத்தை கடந்த மற்றொரு மெர்சிடஸ் பென்ஸ் அணியின் வீரரும், நடப்பு சம்பியனுமாகிய லீவிஸ் ஹெமில்டன், மூன்றாவது இடத்தை பிடித்தார். அதற்கு அவருக்கு 15 புள்ளிகள் வழங்கப்பட்டது.

இதுவரை நடைபெற்று முடிந்துள்ள 17 சுற்றுகள் முடிவில், 9 வெற்றிகளுடன் இங்கிலாந்தின் லீவிஸ் ஹெமில்டன் 338 புள்ளிகளுடன் முதலிடத்தில் உள்ளார்.

இவரை தொடர்ந்து, மற்றொரு மெர்சிடஸ் பென்ஸ் அணியின் வீரர் வால்டேரி போடாஸ் (Valtteri Bottas), மூன்று வெற்றிகளுடன் 274 புள்ளிகளுடன் இரண்டாவது இடத்தில் உள்ளார்.

இதனையடுத்து, பெர்ராரி அணியின் வீரரான சார்லஸ் லெக்லேர்க், இரண்டு வெற்றிகளுடன், 221 புள்ளிகளுடன் மூன்றாவது இடத்தில் உள்ளார்.

அடுத்த 18ஆவ்து சுற்றான மெக்சிக்கன் கிராண்ட் பிரிக்ஸ், எதிர்வரும் 28ஆம் திகதி, ஆட்டோட்ரோமோ ஹெர்மனோஸ்ரோட்ரிக்ஸ் ஓடுதளத்தில் நடைபெறவுள்ளது.

# ஷங்ஹாய் மாஸ்டர்ஸ் டெனிஸ் தொடரில்

## டெனில் மெடவேடவ் சம்பியனானார்

சீனாவில் விறுவிறுப்புக்கு பஞ்சமில்லாமல் நடைபெற்றுவந்த ஷங்ஹாய் மாஸ்டர்ஸ் டென்னிஸ் தொடர் இனிதே நிறைவு பெற்றுள்ளது.

மாஸ்டர்ஸ் அந்தஸ்து பெற்ற ஷங்ஹாய் மாஸ்டர்ஸ் டென்னிஸ் தொடர், கடினத் தரையில் நடைபெறும் தொடராகும்.

ஆண்களுக்கே உரித்தான இத்தொடரின் ஆண்களுக்கான ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டியில், ரஷ்யாவின் முன்னணி வீரரான டேனில் மெட்வேடவ், சம்பியன் பட்டம் வென்று அசத்தியுள்ளார்.

ரசிகர்களுக்கு உச்ச விறுவிறுப்பை பரிசளித்த இத்தொடரின் இறுதிப் போட்டியின் முடிவினை தற்போது பார்க்கலாம்,

எதிர்பார்ப்புக்கு மத்தியில் நடைபெற்ற இப்போட்டியில், ரஷ்யாவின் முன்னணி வீரரான டேனில் மெட்வேடவ், ஜேர்மனியின் அலெக்ஸாண்டர் ஸ்வெரவ்வுடன் பலப் பரீட்சை நடத்தினார்.

பரபரப்பாக நடைபெற்ற இப்போட்டியில், டேனில் மெட்வேடவ் முதல் செட்டை 6-4 என போராடிக் கைப்பற்றினார்.

இதனைத் தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது செட்டில், அலெக்ஸாண்டர் ஸ்வெரவ், டேனில் மெட்வேடவ்வுக்கு கடும் நெருக்கடி கொடுப்பார் என எதிர்பார்க்கப்பட்டது.

எனினும், அந்த எதிர்பார்ப்புக்களை தவிடுபொடியாக்கிய டேனில் மெட்வேடவ், இரண்டாவது செட்டிலும் ஆதிக்கம் செலுத்தி செட்டை 6-1 என எளிதாக கைப்பற்றி, சம்பியன் கிண்ணத்திற்கு முத்தமிட்டார்.

இது டேனில் மெட்வேடவ்வுக்கு முதல் ஷங்ஹாய் மாஸ்டர்ஸ் டென்னிஸ் சம்பியன் பட்டமாகும். இத்தொடரில் அதிகபட்சமாக நான்கு முறை செர்பியாவின் முன்னணி வீரரான நோவக் ஜோகோவிச், சம்பியன் பட்டம் வென்றுள்ளார்.

இதேபோல ஆண்கள் இரட்டையர் பிரிவுப் போட்டியில், மேட் பாவிச் - புருனோ சோரேஸ் ஜோடி சம்பியன் பட்டம் வென்றது.

ரசிகர்களின் கரகோசத்திற்கு மத்தியில் நடைபெற்ற இறுதிப் போட்டியில், குரேஷியாவின் மேட் பாவிச் - பிரேஸிலின் புருனோ சோரேஸ் ஜோடியும், போலந்தின் லூகாஸ் குபோட் - பிரேஸிலின் மார்செலோ மெலோ ஜோடியும் மோதிக் கொண்டன.

விறுவிறுப்பாக நடந்த இப்போட்டியில், மேட் பாவிச் - புருனோ சோரேஸ் ஜோடி, 6-4, 6-2 என்ற நேர் செட் கணக்குகளில் வெற்றிபெற்று, சம்பியன் பட்டத்தை வென்றது.



# மரண அறிவித்தல்



தோற்றம் 26.09.1939

மறைவு 13.10.2019

## திருமதி.
## மகேஸ்வரி திருநாவுக்கரசு

(ஓய்வுபெற்ற ஆங்கில ஆசிரியை யா/வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி)

திகிரி, புலோலி வடகிழக்கை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட மகேஸ்வரி திருநாவுக்கரசு அவர்கள் 13.10.2019 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி.கோவிந்தபிள்ளை செல்லம்மா தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்ற திரு.மாணிக்கம் திருநாவுக்கரசு அவர்களின் பாசமிகு மனைவியும், தேவகி (ஜேர்மனி), சேகர் (பிரான்ஸ்), சுந்தர் (பிரான்ஸ்), பத்மா, வாசுகி ஆகியோரின் பாசமிகு தாயாரும், சிவஞானசுந்தரம் (ஜேர்மனி), ஜவிதா (பிரான்ஸ்), ஆரணி (பிரான்ஸ்), அமரர். கோபாலகுமாரன், தயாபரன் ஆகியோரின் மாமியாரும், ஜனகன், எழிலன், மலரவன் ஆகியோரின் அன்புப் பேரனும், வைதேகி, தேனிக்கா, தர்மிக்கா, இலக்கியா, துசிக்கா, சுமங்கல்யா, கௌதமி, ஏம்மியா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், சகியின் பூட்டியும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் 16.10.2019 புதன்கிழமை 9.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக ஆனைவிழுந்தான் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவருக்கும் அறியத் தருகின்றோம்.

திகிரி, புலோலி வடகிழக்கு,
பருத்தித்துறை.

(C-7905)

தகவல்: குடும்பத்தினர்.
076 778 0243

# 01 ஆம் ஆண்டின் நினைவலைகள்



மண் மகிழ
15
-
12
-
2001

கண் நெகிழ
27
-
09
-
2018

அமரர்.
## பேரின்பநாதன் பிரசாந்தன்

ஓ தம்பியே ஆண்டொன்று
சென்றாலும் எம் கண்ணீரைக்
காணிக்கையாக்குகிறோம்
மண்ணுலக வாழ்வில் எண்ணங்கள் வண்ணங்கள்
எல்லாம் சிதைந்தனவோ,
தம்பி பிரசாந்தன்! உன் அருமை
இப்புவி தன்னில் செப்ப முடியாது
உள்ளம் தன்னில் கள்ளமில்லா
தம்பியே! வெள்ளம் போல மனம் கரைகிறது
நல்ல உள்ளம் வெல்லும் சொல்லால் துயரம் ஆறாது
ஓ! தம்பியே!.......

(C-7907)

தல்லையம்புலம்,
கட்டைவேலி,
கரவெட்டி.

பேரின்பநாதன் திரேஸ் அம்மா குடும்பம்,
வேணுகோபன், வேணுஷா, அர்ச்சனன் குடும்பம்,
பரமநாதன் நிசாந்தினி குடும்பம் (சுவிஸ்).

# கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் உப அதிபர் திருமதி.குணவதி சண்முகநாதனின் மாமியார்

## அமரர். சரவணமுத்து தங்கம்மா

10.10.2019 வியாழக்கிழமை அன்று காலமானார். அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப் பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். (648)

பாடசாலைச் சமூகம்
யா/மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை.

# கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையில் இருந்து அண்மையில் ஓய்வு பெற்றுச் சென்ற ஆசிரியையான திருமதி . சொபியாவதனி வில்லியம் ஜோர்ச் அவர்களின் அன்புத் தந்தையார்

அமரர்.
## திரு.சிங்கராயர் தார்சீசியஸ்

(முன்னைய நாள் அதிபர் யா/புனித மரியாள் வித்தியாலயம்)

அவர்கள் 11.10.2019 (வெள்ளிக்கிழமை) இறைபதமடைந்து விட்டார். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதுடன் இவரது இழப்பால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தி னரிற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(647)

ஆசிரியர் நல்லுறவுக் கழகம்,
யா/புனித சாள்ஸ் ம.வி.
பிரதான வீதி, யாழ்ப்பாணம்

## உங்கள் ஜென்ம நட்சத்திரங்களும் துல்லியமான பலன்களும்

# ரோகினி நட்சத்திரக்காரர்களின் பலன்கள்

**அதிர்ஷ்ட ஜோதிடம்**

ரோகினி நட்சத்திரத்தில் பிறந்தவர்களுடைய இராசி-ரிஷபம் ஆகும். இதன் அதிபதி சுக்கிரன் ஆவார். இதன் சின்னம்-காளை ஆகும், ரோகினியின் சின்னம்-நல்ல பாம்பு ஆகும். ரோகினி நட்சத்திரத்தின் அதிபதி-சந்திரன் ஆவார். எனவே ரோகினியில் பிறந்தவர்களிடம் மேற்கூறிய கிரகங்களின் குணமும், இராசி, நட்சத்திர சின்னங்களின் குணமும் கலந்து காணப்படும்.

ரோகினி நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் சாந்த குணமுடையவர்களாகவும் பயந்த சுபாவமுடையவர்களாகவும் இருப்பர். அதிக இரக்க குணமுடையவர்களாகவும் விருந்தோம்பல் பண்பு உடையவர்களாகவும் இருப்பர். அநேக பெண்களிடம் இவர்கள் நட்பு வைக்க நேரிடும். அவர்களுக்கு உதவி செய்வதிலும் அவர்களிடம் அன்பு காட்டுவதிலும் இவர்கள் அதிக கவனத்துடன் செயற்பட நேரிடும்.

மேலும் சொகுசாக, ஆடம்பரமாக வாழ வேண்டும் என்பதும் கார், பங்களா போன்ற வசதிகளுடன் சிறப்பாக வாழ வேண்டும் என்பதும் அடிக்கடி வெளிநாடு அல்லது வெளியூர் சென்று ஜாலியாக இருக்க வேண்டும் என்பதும் இவர்களது தணிக்க முடியாத ஆசையாக இருக்கக்கூடும்.

அதேசமயம் இவர்களிடம் அதிக பிடிவாத குணமும் நேர்மையும் பிறருக்கு அடங்கிப் போகாத தன்மையும் இயல்பாக இருக்கக் கூடும். திடீரென கோபப்பட்டு கெட்ட பெயர் எடுக்கவும் இடமுண்டு.

பொதுவாக இவர்கள் மிக அழகாகவும் கவர்ச்சியாகவும் இருப்பார்கள். பெண் வசீகரம் உடையவர்கள். அதிக முயற்சி செய்யாமல் முன்னுக்கு வர ஆசைப்படுவார்கள். ஓரளவு நல்ல கல்வி ஞானம் உண்டு. எதிரிகளை வெல்லக்கூடிய ஆற்றலும் உண்டு. நல்ல ஒழுக்கமுடையவர்கள். இல்வாழ்வில் கணவன்-மனைவிக்குள் அவ்வப்போது சிறு, சிறு கருத்து வேறுபாடுகள் வந்து விலக இடமுண்டு.

இரும்பு, மரம், எண்ணெய், துணிமணி, வெங்கலப் பாத்திரம் சம்பந்தமான தொழில் செய்து இவர்கள் முன்னுக்கு வர நேரிடும்! சிலர் உத்தியோகம் செய்து முன்னுக்கு வருவர். பீச் பார்க் என உல்லாசமாக கணவருடன் செல்வது, ரி.வி, சினிமா பார்ப்பது, விதவிதமான துணிமணிகள் வாங்குவது போன்ற விடயங்கள் இவர்களுக்குப் பிடித்தமானவை எனலாம். சுருங்கக் கூறின், இவர்களது எதிர்காலம் பொரும்பாலும் சிறப்பாக இருக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

# வடமாகாண மட்ட உத்தியோகத்தர், ஓய்வூதியர், மாணவர் கௌரவிப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கை சமூக பாதுகாப்புச் சபையின் வடமாகாண மட்ட உத்தியோகத்தர், ஓய்வூதியர், மாணவர் கௌரவிப்பு நிகழ்வு இன்று 15 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் யாழ். மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் இலங்கை சமூக பாதுகாப்புச் சபையின் பொது முகாமையாளர் திருமதி கல்ஹறி டி சில்வா தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக சமூக பாதுகாப்புச் சபையின் தலைவர் பி.எம்.திவாகா வீரசிங்க, சிறப்பு விருந்தினராக யாழ்.மாவட்ட செயலாளர் நா.வேதநாயகன், கிளிநொச்சி மாவட்ட செயலாளர் எஸ்.அருமைநாயகம், முல்லைத்தீவு மாவட்ட செயலாளர் திருமதி ரூபாவதி கேதீஸ்வரன், வவுனியா மாவட்ட செயலாளர் இஸ்மா லெப்பே முஹமட் ஹனிபா, மன்னார் மாவட்ட செயலாளர் சி.ஏ.மோகனதாஸ் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாக சமூக பாதுகாப்பு சபையின் பணிப்பாளர் ரஞ்சன் பண்டார, பிரதிப் பொது முகாமையாளர் (நிதி) எச்.எம்.பிகலும் சதுரங்க, உதவிப் பொது முகாமையாளர் (நிர்வாகம்) திருமதி.நில்மினி கே.ஹேரத் ஆகியோரும் கலந்து கொள்வர். (இ-5)

## உடுத்துறை மீனவரின்

# பைபர் படகை மோதிய தென்னிலங்கை றோலர்

## நடுக்கடலில் தத்தளித்த நிலையில் மீட்பு

(யாழ்ப்பாணம்)

உடுத்துறை மீனவரின் படகை தென்னிலங்கை மீனவ றோலர் படகு இடித்துச் சேதமாக்கப்பட்டுள்ள நிலையில் மீட்கப்பட்டது.

வடமராட்சிக் கிழக்கு உடுத்துறைக் கடற்பரப்பிலிருந்து நேற்று முன்தினம் காலை தொழிலுக்காக "பைபர்" படகில் மீன்பிடிக்கச் சென்ற வேளை தென்னிலங்கை மீனவ றோலர் படகு மோதியது. இந்நிலையில் நடுக்கடலில் விபத்துக்குள்ளாகித் தத்தளித்த படகையும் மீனவரையும் ஏனைய மீனவர்கள் கரை சேர்த்தனர். (இ-10-60)

# துவிச்சக்கரவண்டிகள் ஏல விற்பனை

(யாழ்ப்பாணம்)

மல்லாகம் நீதவான் நீதிமன்றால் பறிமுதல் செய்யப்பட்டு அரசுடமையாக்கப்பட்ட துவிச்சக்கர வண்டிகள் எதிர்வரும் 19.10.2019 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் நீதிமன்ற வளாகத்தில் பகிரங்க ஏல விற்பனை செய்யப்படவுள்ளன. ஏலத்தில் வாங்கப்படும் பொருட்களை உடன் பணம் செலுத்திப் பெற்றுக்கொள்வதோடு நீதிமன்ற வளாகத்திலிருந்து அன்றைய தினமே அப்புறப்படுத்தல் வேண்டும்.

அத்துடன் ஏலத்தினைக் கோருபவர்கள் தமது தேசிய அடையாள அட்டை அல்லது கடவுச்சீட்டு அல்லது சாரதி அனுமதிப்பத்திரத்துடன் வருகை தர வேண்டும் எனவும் மல்லாகம் நீதவான் நீதிமன்றப் பதிவாளர் என்.கே.கஜரூபன் அறிவித்தார். (இ-5)






யாழ்ப்பாணம் YMCA யின்பங்களிப்புடன் நடைபெறும் நாவாந்துறை கலைவாணி முன்பள்ளி, அரியாலை சென்.யூதா முன்பள்ளி, பூம்புகார் சண்முகா முன்பள்ளி, அரியாலை அறிவொளி முன்பள்ளி, இயக்கச்சி YMCA கிராமம், ஆகிய முன்பள்ளிகளின் மாணவர்கள், ஆசிரியர்களை கௌரவிக்கும் முகமாக அண்மையில் யாழ். YMCA மண்டபத்தில் சிறுவர் தினம் மற்றும் ஆசிரியர் தினம் நடத்தப்பட்டது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். வலய முன்பள்ளி உதவிக்கல்விப்பணிப்பாளர் சி.கணேசலிங்கம், சிறப்பு விருந்தினர்களாக யாழ்.YMCA தலைவர் வண.ப. தேவமித்திரன், யாழ்.கோட்ட முன்பள்ளி இணைப்பாளர்- திருமதி கி.ஜெகதாரணி ஆகியோர் கலந்து கொண்டனர்.

# இராசி பலன்

**மீனம்:** பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், தன வரவு திருப்திகரமாக அமையும், வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் எளிதில் கைகூடும்.

**மேடம்:** குடும்பத்தினர் உங்களின் செயற்பாடுகளுக்கு பக்கபலமாக இருப்பர், ஆரோக்கியத்தில் அதிக அக்கறை காட்டுவீர்கள், நல்லவர்களை சந்தித்து நலம் காணும் நாள்.

**இடபம்:** சுபகாரியச் செலவுகள் அதிகரிக்கும் நாள், எதிலும் பொறுமையாக இருப்பது நல்லது, தொழில் நலன் கருதிய பயணங்கள் இடம்பெறலாம், சஞ்சலங்கள் கூடும் நாள்.

**மிதுனம்:** பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள், போசன நன்மையுண்டு, பயணங்கள் செல்ல போட்ட திட்டங்கள் கைகூடும்.

**கும்பம்:** மூத்த சகோதரர்கள் உங்களின் நலனில் அதிக அக்கறை காட்டுவர், பணியில் சிறு மன உளை-ச்சல் ஏற்படலாம், வீண் பிடிவாதம் செய்வதை தவிர்ப்பது நல்லது.

| | | | |
|---|---|---|---|
| | சந் | | ராகு |
| | இராசி பலன் | | |
| | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>சித்திரை, சுவாதி | | |
| சனி, கேது | குரு | சுக், புத | சூரி, செவ் |

**15.10.2019**

புரட்டாதி 28, செவ்வாய்க்கிழமை
சூரிய உதயம் காலை 6.03 மணிக்கு
துதியை பின்னிரவு 5.35 மணிவரை
அச்சுவினி பிற்பகல் 1.22 மணிவரை
சுபநேரம் 10.32-12.02 மணிவரை
இராகுகாலம் 3.02-4.32 மணிவரை
சர்வதேச வெள்ளைப் பிரம்பு தினம்,
அமிர்த்த சித்தம்

வளவன்

**கடகம்:** நண்பர்கள் மத்தியில் நல்ல பெயர் கிடைக்கும், எண்ணங்கள் எளிதில் ஈடேறும் நாள், கொடுத்த வாக்கை காப்பாற்றி மகிழ்வீர்கள், கண்ணியமான ஒருவரின் சந்திப்பு இடம்பெறலாம்.

**மகரம்:** இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், புதிய பொருட்கள் வாங்க எடுத்த முயற்சிகள் கைகூடும், விருந்துகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

**சிம்மம்:** எதிர்ப்புகள் அகன்று வியாபார விருத்தியுண்டாகும், மறதியால் விட்ட காரியங்களை இன்று செய்து முடிப்பீர்கள், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம்.

**தனுசு:** எதிர்பார்ப்புகள் நிறைவேறி ஏற்றம் பெறுவீர்கள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், புத்திசாதுரியமான செயற்பாடுகளால் புகழ் பெறுவீர்கள், வியாபார விருத்தியுண்டு.

**விருச்சிகம்:** சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், ஆரோக்கியம் சீராகும், செய்தொழில் மேன்மையுண்டு.

**துலாம்:** உறவினர்களின் வருகையால் உற்சாகம் பெருகும் நாள், பொது நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், பிற இனத்தவரால் பெருமைகள் வந்து சேரலாம்.

**கன்னி:** கவலைகள் தீர கணபதியை வழிபட வேண்டிய நாள், தொழிலில் மேலதிகாரிகளை அனுசரித்துச் செல்வது நல்லது, ஒரு வகையில் வந்த வரவுகள் இன்னொரு வகையில் விரயமாகலாம்.

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு 021 567 1532


# பதவி வெற்றிடம்

- அலுவலகச் செய்தியாளர்கள் வெளிக்களம் (ஆண்கள்)
- அலுவலகச் செய்தியாளர்கள் உள்ளகம் (பெண்கள்)
- முகாமைத்துவ உதவியாளர்கள் (பெண்கள்)
- கணனி பக்க வடிவமைப்பாளர்கள் (பெண்கள்)

## தகைமை

க.பொ.த உயர்தரம் தோற்றியிருத்தல்
01.01.2019 இல் 25 வயதைப் பூர்த்தி செய்திருத்தல்.

**தகைமையும் விருப்பமும் உடையவர்கள்**
இத்தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு உங்கள் பெயர்களை பதிவு செய்யவும்.

யாழ்.மாநகர சபை எல்லைக்குட்பட்டவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**076 097 3127**

இல.3, 2ம் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

பொதுமுகாமையாளர்
வலம்புரி

---

குருவே துணை



வாழ்க வையகம் — வாழ்க வளமுடன்

## அகவை மூன்றில் அறிவுத்திருக்கோவில்

பேரன்புடையீர்,
அறிவுக்கான திருக்கோவில் ஆண்டு மூன்று நிறைவுற்று அயராத் தொண்டுதர நான்கில் அடிபதிக்கும் ஆல் விருட்சம் நெறிமுறை காட்டி வாழ்வுக்கு நீடிய இன்பம் நிலைத்திடவே நேர்த்திய பணிக்கு நிறைமனமாய் வருக வருக வாரீரே!

காலம் - 15.10.2019
நேரம் - பிற்பகல் 05.30 மணி
இடம் - அறிவுத்திருக்கோவில் யாழ்ப்பாணம்

**காலை நிகழ்வு**
சர்வசித்தி தனாஹர்சன சங்கல்ப்பம் - நேரம் : காலை 4.30 மணி

**மாலை நிகழ்வு - மகரிஷி மங்கலம்**

- இறைவணக்கம், குருவணக்கம், தவம்
- வில்லுப்பாட்டு – (மகரிஷியின் வாழ்க்கை வரலாறு) திருநாவுக்கரசு கலை இலக்கிய மன்ற மாணவிகள் (வ.இ.சர்வோதயம் புங்குடுதீவு) (நெறியாழ்கை செல்வி. கிருஷ்ணமூர்த்தி மனோரதி)
- வாழ்த்துரை – அருள்நிதி த.குழந்தைவேல் அவர்கள் (உபதலைவர் யாழ் மனவளக்கலை மன்ற அறக்கட்டளை)
- வரவேற்புரை – மனவளக்கலை பேராசிரியர் அருள்நிதி வே.பாஸ்கரன் அவர்கள் (பொருளாளர் யாழ்.மனவளக்கலை மன்ற அறக்கட்டளை)
- தலைமை உரை – மனவளக்கலை பேராசிரியர் அருள்நிதி சி.முருகானந்தவேல் அவர்கள் (தலைவர் யாழ்ப்பாணம் மனவளக்கலை மன்ற அறக்கட்டளை)
- சிறப்புரை – மனவளக்கலைப் பேராசிரியர் அருள்நிதி ச.இந்திரா அவர்கள் (தமிழ்நாடு இந்தியா) (அறிவுத்திருக்கோவில் என்றால் என்ன?)
- பிரதம விருந்தினர் உரை – உயர்திரு.இ.இளங்கோவன் அவர்கள் (செயலாளர் கல்வி பண்பாட்டு அலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு வடமாகாணம்)
- நன்றியுரை – துணைப்பேராசிரியர்.த.நந்தகுமரன் அவர்கள் (செயளாளர். யாழ்ப்பாணம் மனவளக்கலை மன்ற அறக்கட்டளை)

(C-7911)

மனவளக்கலை யோகாப் பயிற்சிகள் தமிழகத்திலிருந்து வருகை தரும் பேராசிரியர்கள் மூலம் தொடர்ந்து நடாத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றன. என்பதையும் அறியத்தருகின்றோம். பயிற்சி பெற விரும்புவர்கள் அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

அறிவுத்திருக்கோவில்
இல.81 பிறவுண் வீதி, கொக்குவில்,
யாழ்ப்பாணம்.

தொ.இல: 021 222 2772

---

NEDA — CCIY UNITY IS STRENGTH

## வடமாகாண தொழில் முயற்சியாளர் விருது-2019

யாழ்ப்பாணம் வர்த்தக தொழிற்றுறை மன்றமும் (Chamber of Commerce and Industries of Yarlpanam - CCIY), வணிக அமைச்சின் கீழ் இயங்கும் தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபையும் (National Enterprise Development Authority- NEDA) இணைந்து வருடாந்தம் நடாத்தும் வடமாகாண தொழில் முயற்சியாளர் விருது - 2019 ஆம் ஆண்டிற்கான விண்ணப்பங்கள் இத்தால் கோரப்படுகின்றன.

**விருதுகளுக்கான மாவட்டங்கள்**
யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார்

**விருதுகளுக்கான தொழில் முயற்சி பிரிவுகள்**
1. உற்பத்தித் துறை
2. விவசாயம், கால்நடை வளர்ப்பு மற்றும் மீன்வளங்கள்
3. விருந்தோம்பல் மற்றும் சுற்றுலாத்துறை
4. சேவைத்துறை

**வழங்கப்படவுள்ள விருதுகள்**
அதிசிறந்த தொழில் முயற்சியாளர் விருது (வடமாகாண ரீதியாக)-01
சிறந்த தொழில் முயற்சியாளருக்கான விருதுகள் -12 (அட்டவணையிலுள்ளவாறாக)

| தொழில்முயற்சி வகை | நுண்ணியது | சிறியது | நடுத்தரம் | பெரியது |
|---|---|---|---|---|
| உற்பத்தி துறை | 01 | 01 | 01 | 01 |
| விவசாயம் கால்நடை வளர்ப்பு மீன்வளங்கள் | 01 | 01 | 01 | 01 |
| விருந்தோம்பல் சுற்றுலா மற்றும் சேவைத்துறை | 01 | 01 | 01 | 01 |

**விசேட விருதுகள் - 06**
சிறப்பாக செயலாற்றும் தொழில் முயற்சியாளர்களுக்கு இவை வழங்கப்படவுள்ளன.
- சுற்றுச்சூழலுடன் ஒத்திசைவாக இயங்குகின்ற தொழில் முயற்சி
- சிறந்த ஏற்றுமதியாளர்
- சிறந்த உற்பத்தித் திறனுடன் இயங்கும் தொழில் முயற்சி
- சிறந்த புத்தாக்க தொழில் முயற்சி
- சிறந்த பெறுமதிசேர் உற்பத்தி தொழில் முயற்சி
- சிறந்த சக்திவளப்பாவனைக்கான தொழில் முயற்சி

**தகைமை**
❖ வடமாகாணத்தினை சார்ந்த பதிவு செய்யப்பட்ட தனியார் துறை தொழில் நிறுவனங்கள் (வடமாகாணத்தில் கிளைகளைக் கொண்டுள்ள தேசிய நிறுவனங்கள் மற்றும் கூட்டுறவுத்துறை நிறுவனங்கள் விண்ணப்பிக்க முடியாது)
❖ சட்டரீதியாக பதிவு செய்யப்பட்டிருத்தல் அவசியம் (பிரதேச செயலகம் அல்லது கம்பனிகள் பதிவாளர் திணைக்களம்)

**விண்ணப்பப்படிவங்கள் கிடைக்கும் இடங்கள்**
1. யாழ்ப்பாணம் வர்த்தக தொழிற்றுறை மன்றம், இல.106, பலாலி வீதி, கந்தர்மடம் யாழ்ப்பாணம். **தொலைபேசி:- 021 222 6609**
2. வடமாகாணத்திலுள்ள பிரதேச செயலகங்களிலுள்ள தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் (NEDA)
3. வவுனியா மாவட்ட வர்த்தக கைத்தொழில் விவசாய மன்றம், சத்தியா கட்டடம், இல.57, 01 ஆம் குறுக்கு வீதி, வவுனியா, தொலைபேசி - 024 222 4313
4. மன்னார் மாவட்ட வர்த்தக கைத்தொழில் விவசாய மன்றம், இல.48, மூர் வீதி, மன்னார். **தொலைபேசி:- 077 394 9598**

(C-7908)

**விண்ணப்ப முடிவுத்திகதி 30.11.2019**

பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை உரிய பிரதி ஆவணங்களுடன் **தலைவர், யாழ்ப்பாணம் வர்த்தக தொழிற்றுறை மன்றம், இல. 106, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்** எனும் முகவரிக்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

அனைத்து விருதுகள் தொடர்பாகவும் வெளியக நடுவர் குழுவின் தீர்ப்பே இறுதியானதாகும். விருது வழங்கும் நிகழ்விற்கு ஆகக்குறைந்தது ஒரு வாரத்திற்கு முன்பு வெற்றியாளர்கள் அறிவிக்கப்படுவார்கள். விருது வழங்கும் நிகழ்வு எதிர்வரும் மார்கழி மாதம் 2019 யாழ்ப்பாணத்தில் மிகவும் சிறப்பாக நடைபெறும்.

இல. 106, பலாலி வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

தகவல்: தலைவர், யாழ்ப்பாணம் வர்த்தக தொழிற்றுறை மன்றம்,

---

# கல்யாணமாலை
## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: மூலம் 2 ஆம் பாதம்
உயரம்: 5'8"
கி.பா: 25 செவ் 8 இல்
தகைமை/தொழில்: Sales Representative
எதிர்பார்ப்பு: படித்த உத்தியோகம்
தொ.இ: B/10151

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: புனர்பூசம் 1 ஆம் பாதம்
கி.பா: 33 (சுற்று-3) செவ்.7 இல்
உயரம்:5'10"
தகைமை/தொழில்: Bsc Engineering Electrical and Electronical Engineer (தனியார்)
விவாகரத்தானவர் அமெரிக்காவில் உள்ளார்
எதிர்பார்ப்பு: பட்டதாரிஆசிரியை
தொ.இ: B/10153

பிறப்பு: 1992 இந்து
நட்சத்திரம்: உத்திரட்டாதி 2 ஆம் பாதம்
கி.பா: 31 ¼
உயரம்:6'
தகைமை/தொழில்:Bsc(Hons) Electrical and Electronic (Electronic Engineer)
எதிர்பார்ப்பு:படித்தபெண்
தொ.இ: B/10154

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: மிருகசீரிடம் 4ஆம் பாதம்
கி.பா: 10½
உயரம்: 5'10"
தகைமை/தொழில்: Bsc Eng(Hons) Msc (Civil) Civil Engineer
எதிர்பார்ப்பு:எஞ்ஜினியர்,டாக்டர்,வங்கியாளர்
தொ.இ: B/10055

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: திருவோணம் 4 ஆம் பாதம்
கி.பா:63
உயரம்:5'6"
தகைமை/தொழில்: Bsc Engineer
எதிர்பார்ப்பு: உயர் பதவி
தொ.இ: G/6219

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: ஆயிலியம் 1ஆம் பாதம்
உயரம்: 5'3"
கி.பா: 59
தகைமை/தொழில் Bsc.Msc in Computer Science
எதிர்பார்ப்பு: அரச,தனியார் சகதொழில் (Same Qualification)
தொ.இ: G/6238

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: பரணி 3 ஆம் பாதம்
கி.பா:42 ½ சூரி.செவ்.1 இல்
தகைமை/தொழில்:A/L
எதிர்பார்ப்பு: அரச,தனியார் சொந்த தொழில் போன்றன
தொ.இ: G/6274

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: பரணி
கி.பா:26
உயரம்:5'3"
தகைமை/தொழில்: Business Management ஆசிரியை
எதிர்பார்ப்பு: பட்டதாரியாகவும் ஆசிரியர் அல்லாத அரசஉத்தியோகவும் இருத்தல் வேண்டும்.
தொ.இ: G/62 81


கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைபேசித்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# ஐ.எஸ். பயங்கரவாதிகளுடன் தொடர்பு

# தமிழ்நாட்டில் 33 பேர் கைது

## சஹ்ரான் பேச்சால் கவரப்பட்டவர்களாம்


அஜித்டோவல்


சஹ்ரான்

(சென்னை)

ஐ.எஸ். பயங்கரவாத அமைப்புக்கு ஆதரவாகச் செயற்பட்ட தமிழ் நாட்டைச் சேர்ந்த 33 பேர் கைது செய்யப்பட்டதாக தேசிய புலனாய்வு அமைப்பு தகவல் வெளியிட்டது.

டில்லியில்நேற்று உயர்பொலிஸ் அதிகாரிகள் கூட்டம் இடம்பெற்றது. பயங்கரவாதத்தை ஒடுக்குவது குறித்து இந்தக் கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டது. இந்தக் கூட்டத்தில் மத்திய உள்துறை இராஜாங்க அமைச்சர் கிஷன்ரெட்டி, தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித்டோவல், தேசிய புலனாய்வு அமைப்பின் வை.சி.மோடி, முன்னாள் உளவுத்துறை இயக்குநர் ஆர்.என்.ரவி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் இதுவரை நாடு முழுவதும் பயங்கரவாதத்திற்கு எதிராக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து உயர் அதிகாரிகள் ஆராய்ந்தனர். அப்போது தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித்டோவல் தெரிவிக்கையில்,

பயங்கரவாதத்திற்கு எதிராக பணப் பரிமாற்ற நடவடிக்கைகள் குறித்து நிதி நடவடிக்கை கண்காணிப்புக்குழு என்ற சர்வதேச அமைப்பு செயற்பட்டு வருகிறது. இந்த அமைப்பு ஏற்கனவே பாகிஸ்தானை பல்வேறு தடவை எச்சரித்தது. பாகிஸ்தான் மண்ணில் செயற்படும் பயங்கரவாதிகளை ஒடுக்குமாறு அந்த அமைப்பு கேட்டுக்கொண்டது.

தற்போது அந்த சர்வதேச அமைப்பு பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் கூடி பயங்கரவாதிகளுக்குப் பணப் பரிமாற்றம் செய்யும் நாடுகள் பற்றி ஆய்வு செய்து வருகிறது. இது பாகிஸ்தானுக்கு மிகப்பெரிய நெருக்கடியை உருவாக்கியிருக்கிறது.

பாகிஸ்தான் அரசு எப்போதும் பயங்கரவாதிகளுக்கு உதவி செய்வதை ஒரு கொள்கையாகவே வைத்திருக்கிறது. பாகிஸ்தானின் இந்தச் செயல் நம் அனைவருக்கும் நன்றாகத் தெரியும். அதை சர்வதேச நாடுகளிடம் நிரூபிக்க இன்னும் போதுமான ஆதாரங்கள் தேவைப்படுகின்றன.

காஷ்மீரில் பயங்கரவாதிகளுக்கு வங்கிகள் மூலம் உதவி செய்வதை தேசிய புலனாய்வு அம்மப்பு மிகத் திறமையாகக் கண்டறிந்தது. இதைத் தொடர்ந்து எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் பயங்கரவாதிகளுக்கு செயற்பட முடியாத அளவுக்கு நெருக்கடியை உருவாக்கி இருக்கிறது.

பயங்கரவாதிகளுக்கு பாகிஸ்தான் தேவையான அளவுக்கு நிதி கொடுக்கிறது. இதற்கான ஆதாரங்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன.

நீங்கள் அனைவரும் பயங்கரவாதத்துக்கு உதவும் பணப் பரிமாற்றத்தை விசாரிக்கும் அதிகாரிகள் மட்டுமல்ல பயங்கரவாதத்திற்கு எதிராகப் போராடும் வீரர்கள். உங்களது நடவடிக்கைகள் வெறும் விசாரணையுடன் முடிந்து விடுவதில்லை.

நீங்கள்தான் பயங்கரவாதிகளுக்கு முடிவு கட்டும் போராளிகள். பயங்கரவாதிகள் பற்றித் தகவல் தரும் உளவுத்துறையால் மட்டுமே பயங்கரவாதத்தை ஒழித்துவிட முடியாது. அவர்களுக்கு உதவும் பணப் பரிமாற்றம் உட்பட அனைத்தையும் வேரறுக்கும் உங்களைப் போன்றவர்களால் தான் பயங்கரவாதிகளை ஒழிக்க முடியும்.

போர் வந்தால் அனைவருக்கும் அது பாதிப்பை ஏற்படுத்தும். எனவே பயங்கரவாதத்திற்கு நாம் அனைத்து வகையிலும் முடிவு கட்ட வேண்டும். பயங்கரவாதத்திற்கு பாகிஸ்தான் மட்டுமே உதவி செய்து வருகிறது.

அந்த உதவியை நாம் தடுக்க வேண்டும். பயங்கரவாதிகளிடமுள்ள ஆயுதங்களைப் பறிக்க வேண்டும். அவர்களுக்கு வரும் பணப் பரிமாற்றத்தைத் துண்டிக்க வேண்டும். அவர்களை திறமையற்றவர்களாக மாற்ற வேண்டும்.

இத்தகைய வழிகாட்டுதல்களின் மூலம் பயங்கரவாதத்திற்கு எதிராக நாம் வெற்றி பெற முடியும். இந்த நிர்வாகம் மிகமிக முக்கியமானது என அஜித்டோவல் கூறினார்.

அவரைத் தொடர்ந்து தேசிய புலனாய்வு அமைப்பின் ஐ.ஜி. அலோக்மிட்டல் தெரிவிக்கையில்,

தேசிய புலனாய்வு அமைப்பு மேற்கொண்ட திட்டமிட்ட நடவடிக்கைகள் காரணமாக பல்வேறு சதித் திட்டங்கள் முன்னதாக முறியடிக்கப்பட்டன. காலிஸ்தான் சதி முழுமையாக தகர்க்கப்பட்டது.

ஐ.எஸ். பயங்கரவாத இயக்கத்துக்கு ஆதரவாகச் செயற்பட்ட 127 பேர் நாடு முழுவதும் கைது செய்யப்பட்டனர். பெங்களூரில் அவர்கள் 22 இடங்களில் முகாம்கள் அமைத்திருந்தனர். அவர்கள் பதுங்கியிருந்த இடங்கள் கண்டு பிடிக்கப்பட்டன.

அந்த இடத்தில் இருந்து கண்ணிவெடிகள் பறிமுதல் செய்யப்பட்டன. இந்தச் செயற்பாடுகள் மூலம் தென்னிந்தியாவில் ஐ.எஸ். பயங்கரவாதிகளும் வங்கதேச பயங்கரவாதிகளும் காலூன்ற முயற்சி செய்தது தெரிய வந்தது.

இந்தப் பயங்கரவாதிகள் அனைவரும் இஸ்லாமிய மதகுரு ஜாகீர் நாய்க் பேச்சால் கவரப்பட்டு பயங்கரவாத இயக்கத்துக்கு வந்தது தெரிய வந்தது. நாடு முழுவதும் இவர்கள் மிகப்பெரிய வலைப் பின்னலை ஏற்படுத்தி செயற்பட்டு வந்தனர். அந்த வலைப்பின்னலைப் பலப்படுத்த முயற்சிகள் மேற்கொண்டனர்.

இதையடுத்து நாடு முழுவதும் அதிரடி வேட்டைகள் நடத்தப்பட்டன. 127 பேரில் அதிகபட்சமாக தமிழ் நாட்டில் 33 பேர் கைதாகினர். உத்தர பிரதேசத்தில் 19 பேர், கேரளாவில் 17 பேர், தெலுங்கானாவில் 14 பேர் கைது செய்யப்பட்டனர்.

அவர்களிடம் நடத்தப்பட்ட விசாரணையில் ஏராளமான திடுக்கிடும் தகவல்கள் கிடைத்தன. தமிழ் நாட்டிலும், கேரளாவிலும் கைதான பயங்கரவாத ஆதரவாளர்கள் தாங்கள் இலங்கை குண்டுவெடிப்பு பயங்கரவாதி சஹ்ரான் ஹாசிம் பேச்சால் கவரப்பட்டோம் என்று வாக்குமூலமளித்தனர்.

அவர்களுக்கும் சர்வதேச பயங்கரவாதிகளுக்கும் தொடர்பு இருப்பதும் கண்டு பிடிக்கப்பட்டது. குறிப்பாக இந்தப் பயங்கரவாதிகள் வங்கதேசத்தில் செயற்படும் ஜமாத்உல்முஜாகிதீன் (ஜெ.எம்.பி.) என்ற அமைப்புடனும் தொடர்பில் இருந்தனர்.

வங்கதேசத்தில் ஷரியாத் சட்டப்படி ஆட்சியை உருவாக்க ஜமாத் உல் முஜாகிதீன் பயங்கரவாதிகள் பெரும் முயற்சிகளில் ஈடுபட்டனர். அவர்களது நடமாட்டம் இந்தியாவில் கேரளா, கர்நாடகா, மகாராஷ்டிரா, பீகார் ஆகிய 4 மாநிலங்களில் அதிகரித்துள்ளது.

ஜமாத் உல் முஜாகிதீன் பயங்கரவாதிகள் இந்தியாவிலுள்ள பௌத்த மத வழிபாட்டு தலங்களை குண்டு வைத்து தகர்க்க இரகசியத் திட்டம் தீட்டியிருந்தனர்.

இதற்கான முயற்சிகளையும் மேற்கொண்டனர். பர்மாவில் முஸ்லிம்கள் தாக்கப்பட்டதற்கு பழிவாங்கும் நடவடிக்கையாக இந்தத் தாக்குதலை நடத்த அவர்கள் நினைத்தனர்.

இதைத் தொடர்ந்து பல்வேறு மாநிலங்களிலும் யூனியன் பிரதேசங்களிலும் தேசிய புலனாய்வு அமைப்பு எச்சரித்தது. இதன் காரணமாக பல பயங்கரவாதச் செயல்கள் தொடக்கத்திலேயே கிள்ளி எறியப்பட்டன.

பஞ்சாப்பில் மீண்டும் காலிஸ்தான் மூலம் பயங்கரவாதச் செயல்களை உருவாக்க பாகிஸ்தான் சதித் திட்டம் தீட்டியது. அந்தச் சதியும் முறியடிக்கப்பட்டது. வட மாநிலங்களில் 8 இடங்களில் காலிஸ்தான் குழுக்கள் படுகொலைகளை செய்தன.

இதன் மூலம் கலவரங்களை உருவாக்க நினைத்தனர். இதற்காக பாகிஸ்தான் பெரிய அளவில் பண உதவியைச் செய்தது. பாகிஸ்தானிலிருந்து இந்திய நாணயத் தாள்களைப் போல போலி நாணயத்தாள்கள் அச்சடித்து பல கோடிக்கு விநியோகித்தனர்.

இங்கிலாந்து, இத்தாலி, பிரான்ஸ், அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளில் இருந்தும் கூட காலிஸ்தான் விடுதலை அமைப்புக்கு பண உதவிகள் வந்தன. இது தொடர்பாக 16 பேரைக் கைது செய்து காலிஸ்தான் பயங்கரவாதிகளின் செயற்பாடுகளை முடக்கியுள்ளோம்.

அமெரிக்காவில் இயங்கும் காலிஸ்தான் பயங்கரவாதிகள் சமூக வலைத்தளங்கள் மூலம் இந்தியாவில் சீக்கிய இளைஞர்களின் செயற்பாடுகளை மாற்ற முயற்சி செய்தனர். அதையும் தடுத்து நிறுத்தியுள்ளோம்.

இது தொடர்பாக உத்தர பிரதேசத்தில் 5 பேர் கைது செய்யப்பட்டனர். அவர்களிடம் நடத்தப்பட்ட விசாரணையில் 2020 ஆம் ஆண்டுக்குள் தங்களது இலக்கையடைய பயங்கரவாதிகள் திட்டமிட்டிருந்தது தெரிந்தது.

அதுபோன்று காஷ்மீரிலுள்ள பிரிவினைவாதிகளுக்கும் பாகிஸ்தான் ஏராளமாக பணம் கொடுத்து உதவுகிறது.


இந்தியாவுக்கான தூதுவர் மூலம் இந்தப் பணம் விநியோகிக்கப்படுகிறது. காஷ்மீரில் பணப் பரிமாற்றத்தில் ஈடுபட்ட பிரிவினைவாதிகள் கைது செய்யப்பட்டனர்.

பிரிவினைவாதிகள் பலர் மீது குற்றப்பத்திரிகைத் தாக்கல் செய்யப்பட்டது. அவர்கள் யாரும் இதுவரை பிணையில் கூட விடுபடவில்லை. அவர்கள் அனைவரும் ஹவாலா அடிப்படையில் பாகிஸ்தான் தூதரிடமிருந்து பணம் பெற்றிருப்பது உறுதி செய்யப்பட்டது.

மேலும் போலி நாணயத் தாள்கள் என்று கண்டுபிடிக்க முடியாத அளவுக்கு நாணயத் தாள்களைப் பாகிஸ்தான் அச்சடித்து இந்தியாவுக்குள் பரவ விடுவதையும் இவர்கள் மூலம் கண்டறிந்துள்ளோம் எனத் தேசிய புலனாய்வு அமைப்பின் ஐ.ஜி. அலோக்மிட்டல் மேலும் தெரிவித்தார். (இ-7)



கோண்டாவில் கிழக்கு ஸ்ரீஅற்புத நர்த்தன விநாயகர் சனசமூக நிலையத்தினரின் ஆதரவில் இயங்கும் குட்டிச் சுட்டி முன்பள்ளி அகம் குழந்தைகள் பகல் நேரக் காப்பக மாணவர்களின் வர்த்தக சந்தை பலாலி வீதி கோண்டாவில் சந்தி கடைத்தொகுதி முன்பாக அண்மையில் இடம்பெற்றது.



# சர்வதேச வெண்பிரம்பு தினம் இன்று

உலக இயங்கியலில் சமூக அரங்குகளினை அலங்கரிப்பவர்களாக மனிதர்கள் காணப்படுகின்றனர். இவ் உலகில் அவதரிக்கின்ற மனிதர்கள் எல்லோருமே எல்லா அடிப்படைகளிலும் பூரணத்துவம் வாய்ந்தவர்களாக பிறப்பதில்லை. வாழ்கின்ற காலத்தில் எவ்வித அசௌகரியங்களுமின்றி தமது வாழ்க்கைப் பயணத்தினை திருப்திகரமாக தொடர்கிறார்கள் என்றும் கருத முடியாது.



இவ்வகையில் பிறக்கின்ற காலத்தில் ஏதேனும் அங்கக் குறைபாட்டோடு பிறப்பவர்கள், வாழ்க்கைப் பயணத்தில் சந்திக்கின்ற அசம்பாவிதங்களினால் உடல், உளப் பாதிப்புக்களுக்கு உள்ளாகுகிறவர்கள் மாற்றுத்திறனாளிகள் என அடையாளப்படுத்திக் கொள்ளலாம். மாற்றுத்திறனாளிகளில் ஒரு வகையினராக பார்வையற்றவர்கள் காணப்படுகின்றனர். உலக அரங்கில் யுத்தம், இயற்கை அனர்த்தங்கள், வறுமை, விபத்து போன்ற காரணிகளால் பார்வையற்றவர்கள் உருவாகியும் உருவாக்கப்பட்டும் வருகின்றார்கள். இத்தகைய பார்வையற்றவர்களின் அடையாளச் சின்னமாகவும் அவர்களது வாழ்விற்கு வழிகாட்டும் ஒளிவிளக்காகவும் உதவு சாதனமாகவும் உற்ற நண்பனாகவும் அமைவது வெண் பிரம்பாகும்.

விழி இழந்து போன எம்மவர்கள் தமது ஒளிமயமான எதிர்காலக் கனவுகளுடன் வீடுகளில் முடங்கிக் கிடந்தார்கள். இத்தகைய சூழலில் 1931 ஆம் ஆண்டு அமெரிக்காவின் llinoise மாகாணத்தின் Phiuria நகரத்தினைச் சேர்ந்த அரிமாக் கழகத்தினரால் உழைப்பு, உறுதி, உயர்வு, ஊக்கம் என்ற தத்துவங்களினைத் தாங்கிய நான்கு துண்டுகளிலான வெண்கோல் வடிவமைக்கப்பட்டு அதற்கான சட்ட அங்கீகாரமும் பெறப்பட்டது. கால மாற்றத்திற்கேற்ப வெண்பிரம்புகள் இலத்திரனியல் வடிவிலும் ஐந்து துண்டங்களாகவும் பன்னிரெண்டு துண்டங்களாகவும் இன்று உருமாறியுள்ளது.

பன்னிரண்டு துண்டங்களினைக் கொண்ட வெண்பிரம்பினைத் தாங்கி வருபவர்கள் பார்வை இழப்புடன் வேறேனும் அங்கங்களையும் இழந்தவர்கள் என்பதை மக்களுக்கு அறியப்படுத்துகின்றனர். சில வெண்பிரம்புகளின் மேற்பகுதி கறுப்பாகவும் நடுப்பகுதிகள் வெண்மையாகவும் கீழ்ப்பகுதி சிவப்பாகவும் அமையப் பெற்றிருக்கும். இதன் ஊடாக பார்வையற்றவர்கள் இருள் சூழ்ந்த உலகில் வெளிச்சமெனும் பாதையினைக் கடக்கின்றனர் என்பதை உணர்த்துகிறது.

ஆயினும் ஆரம்பத்தில் இவ் வெண்பிரம்பு ஐரோப்பிய தேசங்களில் மட்டுமே பார்வையற்றவர்களின் வழித்துணை யாக வலம் வந்தது. 1964 ஆம் ஆண்டு பார்வையற்றோர் மாநாட்டில் ஒக்டோபர் மாதம் 15 ஆம் திகதி சர்வதேச வெண்பிரம்பு பாதுகாப்பு நாளாகப் பிரகடனப்படுத்தப்பட்டது. அன்று முதல் இன்றுவரை ஒக்டோபர் மாதம் 15 ஆம் நாள் பார்வையற்றோரின் உரிமைகளை வென்றெடுக்கும் நாளாகவும் பார்வை இழப்பினைக் குறைக்கும் விழிப்புணர்வு நாளாகவும் இந்நாள் அமைந்து வருகின்றது.

வெண்கோலினைத் தாங்கி வருபவர்கள் தமது வெண்கோலினை இரண்டு துண்டுகளாக மடித்து வீதிக்கு குறுக்கே காட்டி வீதியினைக் கடக்கவும் நான்கு துண்டுகளாக மடித்து வாகனங்களை எவ்விடத்திலும் மறிக்கவும் உரிமை உண்டு. ஆயினும் அவ் உரிமைகள் நடைமுறைப்படுத்தப்படாத ஏடுகளின் சரத்துக்களாகவே காணப்படுகின்றன.

அதுமட்டுமல்லாது நவீனத்துவ சிந்தனை உருவாகி நகரமயமாக்கல் பற்றிச் சிந்திக்கின்ற சமீப காலத்திலும் பார்வையற்றவர்களின் பயணத்திற்கு பொருத்தமாக வீதிகள் கட்டமைக்கப்படாமை, பாதுகாப்பற்ற வீதிக் கடவைகள், சமிக்ஞைகள் இல்லாத வீதிக் கடவைகள், ஒழுங்காகப் பராமரிக்கப்படாத கால்வாய்கள், கட்டாக்கலி நாய்கள் என்று ஏராளமான தடைக் கற்கள். இயந்திர யுகத்தில் பயணிக்கின்ற இன்றைய காலத்திலும் கூட வெண்பிரம்பினைத் தாங்கி வருபவர்களை அனுதாப நோக்குடன் பார்ப்பவர்கள் சமூகத்தில் இன்னோர் புறம்.

இத்தனை தடைக்கற்களையும் தமது சாதனையின் படிக்கற்களாக மாற்றி சாதனைகளைக் குவித்து வருகின்றார்கள் எம்மவர்கள். ஏட்டைத் தொட முடியுமா? என்று புறொய்லர் கோழிகளாய் வீடுகளில் காலம் கழித்த பார்வையற்றவர்கள் **Louis Braille** அவர்களின் பிறைலி எழுத்துக்கள் மூலம் இன்று கல்வி, கலை, இலக்கியம், அறிவியல் என்ற அத்தனை துறைகளிலும் தடம் பதித்து நிற்கின்றார்கள். பார்வையற்றவர்கள் கரம் பற்றி நடப்பவர்களேயன்றி கையேந்தி நிற்பவர்கள் அல்ல "எமக்காக அழ வேண்டாம் எம்மைக்கண்டு அனுதாபம் தரவேண்டாம். எம்மை மதித்தால் போதும் உபகாரம்" எனக் கூறும் எம்மவர் கூற்றை செவிமடுத்து இவர் தம் கௌரவம் மிக்க சுய வாழ்வு விருத்திக்காக எல்லா வழிகளிலும் கரம் கோர்த்து இவர்களுடன் பயணிப்போம்.

**தவநாயகம் மரிய துஸ்யந்தி**
**உப செயலாளர்,**
**யாழ்.விழிப்புலனற்றோர் சங்கம்.**

# சர்வதேச வெள்ளைப் பிரம்பு தின செய்தி

இனிய உடன்பிறப்புக்களே,

இன்னுமொரு தடைவ உங்கள் இதயங்களோடு உறவாடக் கிடைத்த இந்த இனிய வாய்ப்பையெண்ணி உளம் பூரிப்படைகின்றேன். அதேவேளை, இந்த வாய்ப்பினை வழங்கிய ஊடகத்துக்கும் என் உள்ளத்தில் ஊற்றெடுக்கும் உண்மை அன்பையும் நன்றிகளையும் காணிக்கையாக்குகின்றேன்.



**ஆறுமுகம் ரவீந்திரன்,**
**தலைவர், வாழ்வகம்.**

விழிப்புலவனுவிழப்பு என்பது நாம் விரும்பி ஏற்றுக்கொண்டதன்று. எனினும், அதைக் கண்டு அஞ்சுவதாலோ அழுவதாலோ ஆகிவிடப் போவதெதுவுமில்லை. இந்த சவாலை நாம் வெற்றி கொண்டேயாக வேண்டும். அதற்கான வழிகளும் நிறையவே இருக்கத்தான் செய்கின்றன. அவற்றை அறிந்து கொள்வதும் அறிந்து கொள்ள முடியாது தவிப்பவர்களை ஆற்றுப்படுத்துவதும் நம் ஒவ்வொருவரினதும் பொறுப்பும் கடமையும் என்பதை நாம் ஒருபோதும் மறந்து விடக்கூடாது.

இந்த நவீன விஞ்ஞான உலகின் எந்த ஒரு நகர்வும் நமக்கு அந்நியப்பட்டு விடாமல் எப்போதும் நாம் அவதானத்துடன், விழிப்புடன் இருக்க வேண்டும். அதுவே நம் வாழ்வுக்கு அர்த்தம் சேர்க்கும், வலுச் சேர்க்கும். "எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்" என்பது முதுமொழி. விழிப்புலவலுவிழந்தவர்களைப் பொறுத்தமட்டில் பிறேயில் எழுத்துக்குச் சமமான, அல்லது அதைவிட மேம்பட்ட வேறெந்த எழுத்து முறையும் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை.

எனவே, இந்த பிறேயில் எழுத்துக்களைக் கசடறக் கற்றுக் கொள்வது நம் ஒவ்வொருவருக்கும் மிகமிக இன்றியமையாதது என்பதை நன்கு மனதில் இருத்திக்கொள்ளுங்கள். நவீன விஞ்ஞான, தொழில்நுட்பவிருத்தி காரணமாக இன்று நமக்குப் பல்வேறு அரிய சாதனங்கள், வாய்ப்பு வசதிகள் கிட்டியுள்ளன.

இவை நமது அறிவுத் தேடலுக்கு அருந்துணையாயுள்ளன என்பதை யாரும் மறுக்க முடியாது.

எனினும், இதன் காரணமாக பிறேயில் எழுத்துக்களைக் கற்பதில் பலர் அக்கறையின்றி இருப்பது மிகவும் வேதனைக்குரியது. சுயமாக எழுதுதலும் எழுதியவற்றை வாசித்தலும் ஒரு மனிதனின் அடிப்படைத் தகைமை என்பதை நாம் ஒருபோதும் மறந்து விடக்கூடாது. "எழுதுதல், வாசித்தல்" என்ற அடித்தளத்தை நன்கு அமைத்துக் கொண்டு நாம் அடுத்த அடியை எடுத்து வைப்போமானால் அதுவே நம் வாழ்க்கைப் பயணத்தின் வெற்றிக்கு வழி சமைக்கும்.

அனைவருக்கும் இனிய வெள்ளைப் பிரம்பு தின வாழ்த்துக்கள்.

# மண்புழு உர வகைகள் தயாரிப்பு செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

இலவச தொழில்நுட்பப் பயிற்சி மூலம் சுயதொழில் முயற்சியாளர்களை உருவாக்கும் நோக்கில் பருத்தித்துறை பிரதேச செயலகத்தின் விதாதா வள நிலையத்தால் மண்புழு உர வகைகளின் தயாரிப்பு தொடர்பான செயலமர்வு நாளை 16 ஆம் திகதி புதன்கிழமை காலை 09 மணியளவில் தம்பசிட்டி பண்டாரியம்மன் கோவில் வீதியில் வடலித்தோட்டம் மாலந்தனிமுருகன் கோவிலுக்கு அருகிலுள்ள "அன்பு இல்லத்தில்" அமைந்துள்ள விதாதா வள நிலைய மண்டபத்தில் (துசாவதானி கதிரவேற்பிள்ளை வாசிகசாலைக்கு அண்மையில் ஆரம்பமாகும். இதில் பங்குபற்ற விரும்புபவர்கள் அனைவரும் நாளை இச் செயலமர்வில் கலந்து கொண்டு பயன்பெறுமாறு பிரதேச செயலாளர் ஆழ்வாப்பிள்ளை சிறி அறிவித்தார். (இ-5)

# யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரிக்கு புதிய மாணவர்களை அனுமதித்தல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரிக்கு புதிய மாணவர்களை நாளை 16 ஆம் திகதி புதன்கிழமை அனுமதிக்கப்படுவர். 16 ஆம் திகதி மாணவர்கள் சட்ட ரீதியான பெற்றோர்/பாதுகாவலரின் அனுமதியுடன் கல்லூரி விடுதியில் தங்கி நின்று கல்வி பயில்வதற்கு சகலவித ஆயத்தங்களுடன் காலை 9 மணியளவில் வருகை தர வேண்டும். திசை முகப்படுத்தல் அன்றைய தினமே ஆரம்பிக்கப்படும் என்பதை கவனத்திற்கொள்ளவும்.

இது பற்றி கல்லூரிக்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு கடிதம் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மாணவர்கள் தவறாது சமூகமளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

மேலதிக விபரங்களை யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் www.jncoe.net என்ற இணையத்தளத்தினூடாக அறிந்து கொள்ள முடியும் எனக் கல்லூரியின் பீடாதிபதி சு.பரமானந்தம் வெளியிட்ட அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டது. (இ-7)

## மகாவலியின் அறிவுறுத்தலுக்கமைய

# சலப்பையாறு துப்புரவுப் பணியை நிறுத்துமாறு உத்தரவிட்ட அரச அதிபர்- மக்கள் கவலை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு - கொக்குத்தொடுவாய், சலப்பையாறு விவசாய நிலத்தினை அக்காணிகளுக்கு உரிய தமிழ் மக்கள் துப்புரவு செய்யும் நிலையில் அத்துப்புரவுப் பணியை உடனடியாக நிறுத்தும்படி முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் உத்தரவிட்டுள்ளார்.

விவசாயிகளின் கோரிக்கைக்கமைய மக்கள் பிரதிநிதிகளால் துப்புரவுப் பணிக்கென நிதி ஒதுக்கீடுகள் செய்யப்பட்டதுடன், உரிய திணைக்களங்களின் அனுமதியுடனேயே துப்புரவுப்பணிகளில் தமிழ் மக்கள் ஈடுபட்டிருந்தனர்.

இந் நிலையிலேயே மாவட்ட செயலர் இவ்வாறு துப்புரவுப்பணிகளை நிறுத்துமாறு கடிதம் ஒன்றின் மூலம் உத்தரவிட்டுள்ளார்.

அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருப்பதாவது.

இலங்கை மகாவலி அதிகார சபையின் (எல் பிரிவு) வதிவிடத் திட்ட முகாமையாளரின் RPM/L/LD/A/01/29 ஆம் இலக்க 08.10.2019 ஆம் திகதிய கடிதத்தின் சார்பாக, குறித்த துப்புரவுப் பணியை உடனடியாக நிறுத்தி, சலப்பையாறு பிரதேசத்திலிருந்து இயந்திரங்களை அகற்றுமாறும் அங்கு வேறு எந்த நடவடிக்கையில் ஈடுபட வேண்டாம் என்றும் அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் அக்கடிதத்தின் பிரதிகள், உதவி ஆணையாளர் கமநல சேவைத் திணைக்களம் முல்லைத்தீவு மற்றும் இலங்கை மகாவலி அதிகாரசபை வதிவிடத் திட்ட முகாமையாளர் (எல் பிரிவு) ஆகியோருக்கும் தகவலுக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இது குறித்து கருத்துத் தெரிவித்த அப்பகுதித் தமிழ் மக்கள், ஏற்கனவே பல விவசாயக் காணிகள் மகாவலி அபிவிருத்தி அதிகார சபையினால் அபகரிக்கப்பட்டுள்ள நிலையில், மீதமாகவுள்ள எமக்குச் சொந்தமான காணிகளையும் அபகரிப்பதற்கு இடம்பெறும் முயற்சியை வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

இத் துப்புரவுப் பணிகள் இடம்பெற்றிருந்தபோது, சில பெரும்பான்மை இனத்தவர்கள் மற்றும் பௌத்த மத குரு ஒருவர் இணைந்து, அவை தமது காணிகள் எனக் கூறி இந்த துப்புரவுப் பணிகளை நிறுத்துமாறு பல தடவைகள் முரண்பட்டிருந்தனர். ஆனால் தொடர்ச்சியாக நாம் துப்புரவுப் பணிகளை முன்னெடுத்திருந்தோம்.

இதன் தொடர்ச்சியாகவே மகாவலி அதிகாரசபை மாவட்ட செயலருக்கு அனுப்பிய கடிதத்திற்கு அமைவாக, மாவட்ட செயலர் எம்மை துப்புரவுப் பணியை நிறுத்துமாறு உத்தரவிட்டுள்ளார்.

இது எமது வாழ்வாதாரத்தைக் கேள்விக்குறியாக்குகின்ற செயற்பாடாகும்.

இது தொடர்பில் ஆளுநர் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களிடமும் சந்தித்து அவர்களிடம் தெரியப்படுத்தவுள்ளோம்.

இது தொடர்பில் உரிய தீர்வுகள் கிடைக்காதுவிடில் எமது இடங்களை விட்டு வெளியேறுவதைத் தவிர வேறு வழிகள் எமக்கு தெரியவில்லை என கவலை தெரிவித்தனர். (9)




## விபத்தினை ஏற்படுத்திவிட்டு தப்பிச்சென்ற பொலிஸார்

(குருமன்காடு)


வவுனியா கண்டி வீதியில் மோட்டார் சைக்கிளில் சிவில் உடையுடன் வந்த பொலிஸ் உத்தியோகத்தர் விபத்தினை ஏற்படுத்தி விட்டு தப்பித்துச்சென்ற சம்பவம் ஒன்று நேற்று இடம்பெற்றது.

வவுனியா நகரிலிருந்து கண்டி வீதியூடாக மோட்டார் சைக்கிளில் பயணித்த பெண் வீதியில் திரும்ப முற்பட்ட போது அதே பாதையில் மோட்டார் சைக்கிளில் வந்த பொலிஸ் உத்தியோகத்தர் பெண்ணின் மோட்டார் சைக்கிளுடன் மோதியதில் விபத்து இடம்பெற்றது. விபத்தினை ஏற்படுத்தியவர் தான் ஓர் பொலிஸ் உத்தியோகத்தர் என தெரிவித்து விபத்துக்குள்ளான பெண்ணின் மோட்டார் சைக்கிள் சாவியைப் பறிக்க முற்பட்டுள்ளார்.

சாவியினை வழங்க பெண் மறுத்த நிலையில் விபத்தினை ஏற்படுத்திய பொலிஸ் தான் பொலிஸ் நிலையத்திற்கு செல்வதாக தெரிவித்து அவரது மோட்டார் சைக்கிளை அவ்விடத்திலிலேயே விட்டு விட்டு சென்றுள்ளனர்.

விபத்துக்குள்ளான பெண் பொலிஸாருக்கு தகவல் வழங்கிய நிலையில் சம்பவ இடத்திற்கு வந்த வவுனியா போக்குவரத்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். (9-250)

## வவுனியாவில் ஐந்து கிராமங்களில் குடிநீர்த்திட்டம் ஆரம்பித்து வைப்பு



(நெளுக்குளம்)

வவுனியாவில் தமிழ், சிங்கள சகோதரர்களின் நிதிப்பங்களிப்பில் ஐந்து விவசாயக் கிராமங்களில் குடிநீர்த்திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

வவுனியாவில் ஏற்பட்டுள்ள குடிநீர்த்தட்டுப்பாட்டையடுத்து கிராம அமைப்புக்களின் கோரிக்கைக்கு அமைவாக தமிழ், சிங்கள சகோதரர்களின் நிதிப்பங்களிப்பில் குடிநீர் வழங்கும் திட்டம் சமூக ஆர்வலர் எஸ்.ஜோர்ஜ் தலைமையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் விவசாயக் கிராமங்களை உள்ளடக்கிய நாமல்கமகே விகாரைக்கு அருகில் அப்பகுதி பொதுமக்களின் பயன்பாட்டிற்காகவும் கணேசபுரம் பொதுக்காணி ஒன்றில் அப்பகுதி மக்களின் பயன்பாட்டிற்காகவும் புதிய சின்னக்குளம் கிராம அபிவிருத்திச்சங்கத்தில் அப்பகுதி மக்களின் பயன்பாட்டிற்காகவும் எல்லப்பர் மருதங்குளம் கிராம அபிவிருத்திச்சங்கத்திலும் சிதம்பரபுரம் கற்குளம் படிவம் ஒன்றில் சனசமூக நிலையத்தின் ஏற்பாட்டில் கிராம அபிவிருத்திச்சங்கத்திலும் அப்பகுதி கிராம மக்களின் குடிநீர்த் தேவைகள் இத்திட்டத்தினூடாக பூர்த்தி செய்து கொடுக்கப்பட்டுள்ளது. அத்துடன் மணிப்புரம் மக்களை சந்தித்து கிராம அபிவிருத்திச்சங்கத்தில் ஏற்படுத்தப்பட்டு தேவைகள் கேட்டறியப்பட்டுள்ளது.

அத்துடன் நாமல்கமே பகுதியில் வசித்து வரும் விவசாயக்குடும்பங்களுக்கு சோளம் விதை செய்கை மேற்கொள்ள விதைகளும் வழங்கி வைக்கப்பட்டதுடன் சின்னப்புதுக்குளம் முன்பள்ளிக்கு மின்விசிறி மற்றும் ஒரு தொகுதி கொப்பிகள், அலுவலகத் தேவைக்கு அலுமாரி கொள்வனவுக்கான பணம் என்பனவும் இதன் போது கலந்துகொண்ட பிரதிநிதிகளினால் வழங்கி வைக்கப்பட்டன.

இதில் அப்பகுதி கிராம உத்தியோகத்தர்கள், கிராம அமைப்புக்கள், பொதுமக்கள் எனப்பலரும் இதன்போது கலந்துகொண்டனர். (9-299)

## பூநகரி பிரதேச சிறுவர் தின நிகழ்வு



(பூநகரி)

பூநகரி பிரதேச செயலகப் பிரிவு சிறுவர் தினவிழா நேற்று முன்தினம் சிறுவர் கழகத் தலைவர் ச.யதுகன் தலைமையில் தெளிகரை பொதுநோக்கு மண்டபத்தில் இடம்பெற்றது. "சிறுவர்களின் வெற்றிக்கான நட்பான நாடு" என்னும் தொனிப்பொருளில் war child holland fooddoo & bept of probation அனுசரணையோடு நடைபெற்ற இந்த நிகழ்வில் 10 இற்கு மேற்பட்ட சிறுவர் கழகங்களைச் சேர்ந்த 250 இற்கு மேற்பட்ட சிறுவர்கள் பங்குபற்றியதுடன் கலை நிகழ்வுகளும் பரிசளிப்பு விழாவும் இடம்பெற்றது. சிறப்பு நிகழ்வாக பாடசாலை இடை விலகல் சிறுவர்களை வேலைக்க மர்த்தல், சிறுவர் துஷ்பிரயோகம், போதைப்பொருள் ஒழிப்பு என்னும் விடயங்களில் கருத்தாடல் இடம் பெற்றது. பூநகரிப்பிரதேசத்தைச் சேர்ந்த 4 பாடசாலை அதிபர்கள் இவ் விடயங்கள் தொடர்பாக விளக்கமளித்தனர். மேலும் இந்த நிகழ்வில் தேசிய மட்டப் போட்டிகளில் வெற்றி பெற்ற சிறுவர்களும் மதிப்பளிக்கப்பட்டனர். (9-84)

## ஜனாதிபதித் தேர்தலில் யாருக்கு வாக்களிப்பது?

# ஒருமித்த முடிவே இன்றைய தேவை

### சிவசக்தி ஆனந்தன்

(நெளுக்குளம்)

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்களின் ஒருமித்த முடிவே இன்றைய தேவையாகவுள்ளதென வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

தமிழ் மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து வாக்களிக்க வேண்டிதன் அவசியம் பற்றி வடக்கில் தீவிரமான கலந்துரையாடல்கள் இடம்பெறுகின்றன.

தமிழ்த் தேசிய இனத்தின் உரிமைகளை வென்றெடுப்பதற்கான ஆயுதப் போராட்டம் 2009 ஆம் ஆண்டு மௌனிக்கச் செய்யப்பட்டதன் பின்னர், தமிழ் மக்களுக்கு இருந்த ஒரே தெரிவு பாராளுமன்ற ஜனநாயக அரசியல்தான். அதனால்தான் தமிழ் மக்கள் ஒன்றுபட்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு ஆதரவளித்தனர்.

கடந்தமுறை ஜனாதிபதித் தேர்தலில் இரண்டு கட்சிகளும் இணைந்து ஒரு பொது வேட்பாளரை நிறுத்தியிருந்த வேளையில், இது சரியான தருணம். எனவே எமது கோரிக்கைகளை நிபந்தனைகளாக வைத்து சில உத்தரவாதங்களைப் பெற்று நாம் எமது ஆதரவினை வழங்குவோம் என்று கூறியதற்கு சம்பந்தன் ஐயா நாம் நிபந்தனைகளை வைத்தால் சிங்கள மக்கள் மைத்திரிக்கு ஆதரவளிக்க மாட்டார்கள். ஜனாதிபதித் தேர்தல் முடிவடைந்தவுடன் எமது பிரச்சினைகள் தீர்க்கப்படும் என்னை நம்புங்கள் என்று எமது வாயை அடைத்தார்.

இன்றைய நிலைக்கு முழுமுதற் காரணமும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தன்னிச்சையான செயற்பாடுகளுமே என்பதை அந்தக் கட்சியினர் ஏற்றுக்கொண்டு இந்தத் தேர்தல் அந்தக் கட்சி விட்ட தவறைத் திருத்திக்கொள்வதற்கு ஒரு சந்தர்ப்பம் வழங்கியிருக்கிறது என்பதை உணர்ந்து அவர்களும் தாம் தனியே சென்று வேட்பாளர்களைச் சந்திக்கும் திட்டத்தைக் கைவிட்டு, ஒட்டுமொத்த தமிழ் பிரதிநிதிகளுடன் இணைந்து கைகோர்த்துச் செயற்பட முன்வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம். மற்றப்படி ஏனைய தமிழ் கட்சிகளும் பொது அமைப்புக்களும் மதத்தலைவர்களும் புத்திஜீவிகளும் பல்கலைக்கழக மாணவர்கள், புலம்பெயர் மக்கள் ஆகியோர் ஓரணியிலேயே இருக்கின்றனர். மக்களும் பெருமளவில் இந்தப் பக்கத்திலேயே இருக்கின்றனர் என மேலும் தெரிவித்தார். (9-299)



தேர்தல் காலங்களில் சமூக வலைத்தளங்களை பயன்படுத்துவது தொடர்பான விழிப்புணர்வுக் கூட்டம் வவுனியா பொதுஜன பெரமுன அலுவலகத்தில் நேற்று இடம்பெற்றது. கட்சியின் தமிழ் ஊடகபொறுப்பாளர்பிரபா தலைமையில்இடம்பெற்ற இக்கூட்டத்தில் முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் தர்மபால செனவிரத்தின, கட்சியின் வவுனியா மாவட்ட தமிழ் இணைப்பாளர் பிரேம் மற்றும் கட்சியின் உறுப்பினர்கள், இளைஞர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். (படங்கள்:- நெளுக்குளம் செய்தியாளர்)

# வெங்காய வெடி வெடித்ததில் குடும்பஸ்தரின் கால்கள் சேதம்

(பூநகரி)

பூநகரி முக்கொம்பன் குடியேற்றத்திட்டப் பகுதியில் நேற்று முன்தினம் நள்ளிரவு வெங்காய பொறி வெடி வெடித்ததில் 6 பிள்ளைகளின் தந்தை இருகால் பாதங்களும் சிதறிய நிலையில் கிளிநொச்சி பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பூநகரி முக்கொம்பன் குடியேற்றத்திட்டத்தில் வசிக்கும் வி.கிருஸ்ணமூர்த்தி (வயது-56) என்பவரே மேற்படி காயமடைந்தவர் ஆவார். குறித்த சம்பவம் தொடர்பாக பூநகரி பொலிஸாருக்கு அவரது மனைவி அறிவித்ததை அடுத்து பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ரணவீர தலைமையில் சம்பவ இடத்திற்குச் சென்ற குழுவினர் விசாரணைகளை மேற்கொண்டனர். (9-84)

# தமிழீழ விடுதலைப்புலிகள் மீளுருவாக்கம் சந்தேகத்தின் பேரில் கிளிநொச்சியில் ஒருவர் கைது

(கிளிநொச்சி)

தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பை மீளுருவாக்கம் செய்ய முற்பட்டார் என்ற சந்தேகத்தின் பேரில் கிளிநொச்சி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சாந்தபுரம் பகுதியில் இராமையா விவேகானந்தன் என்ற நபர் நேற்று முன்தினம் இரவு குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

விடுதலைப்புலிகள் அமைப்பை மீளுருவாக்கம் செய்வதற்கான செயற்பாடுகளை மேற்கொண்டதாக சந்தேகத்தின் பேரில் குறித்த நபர் கைதுசெய்யப்பட்டுள்ளதாகவும் கிளிநொச்சிப்பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை மற்றும் ஒட்டுசுட்டான் பகுதியில் ஓரிரு மாதங்களுக்கு முன் இடம் பெற்ற சம்பவங்களுடன் தொடர்புடையவர் எனும் சந்தேகத்தின் அடிப்படையில் இவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரவித்துள்ளனர். (9)




# வாக்குரிமை தொடர்பாக விழிப்புணர்வு



(மன்னார்)

வடக்கு-கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் ஏற்பாட்டில் மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டிற்கான நிறுவனத்தின் அனுசரணையுடன் "நீதி மற்றும் ஜனநாயகத்தை பாதுகாக்க வாக்குரிமையை பயன்படுத்துவோம்" எனும் தொனிப்பொருளில் மன்னாரில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மன்னார் நகர மண்டபத்தில் விழிப்புணர்வு கருத்தமர்வு இடம்பெற்றது.

மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டிற்கான நிறுவனத்தின் தலைவர் ஜாட்சன் பிகிராடோ தலைமையில் இடம்பெற்ற குறித்த விழிப்புணர்வு கருத்தமர்வில் விரிவுரையை கொழும்பு பல்கலைக்கழகத்தின் சர்வதேச சட்டத்துறை சட்ட பீட சிரேஷ்ட விரிவுரையாளர் சட்டத்தரணி என்.எம்.ஹக்கீம் நிகழ்த்தினார். இதில் மன்னார், வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், சமூக செயற்பாட்டாளர்கள், மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள், இளைஞர், யுவதிகள் எனப் பலர் கலந்து கொண்டனர். (9-285)

# வவுனியாவில் தீவிர சோதனை நடவடிக்கை



(நெளுக்குளம்)

வவுனியாவில் நேற்று இராணுவத்தினரும் விசேட அதிரடிப் படையினரும் தீவிரமாக தேடுதல் மற்றும் கண்காணிப்பு பணியில் ஈடுபட்டுள்ளமையால் மக்கள் பதற்றமான நிலையில் காணப்பட்டனர். நேற்றுக்காலை வவுனியா ஈச்சங்குளம், பம்பைமடு, மகாறம்பைக்குளம் வீதி போன்ற பகுதிகளில் வீதிணய மறித்து பரல்கள் அடுக்கி தீவிரமாக மக்களை சோதனை செய்யும் நடவடிக்கையில் இராணுவத்தினர் ஈடுபட்டிருந்தனர். இதேவேளை வவுனியா தேவாலயங்களிலும் இராணுவத்தினரும் பொலிஸாரும் பாதுகாப்பு கடமையில்ஈடுபட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. இவ்வாறான செயற்பாடுகள் தொடர்வதால் வவுனியாவில் மக்கள் பதற்றத்துடன் காணப்படுகின்றனர். (9-299)

# கண்டாவளை பிரதேச செயலக கட்டுமானப்பணிகள் மந்தகதியில்

## விரைவில் பூர்த்தி செய்யுமாறு மக்கள் கோரிக்கை

(அக்கராயன்)

கிளிநொச்சி கண்டாவளை பிரதேச செயலகத்தின் புதிய கட்டட நிர்மாணப் பணிகள் கடந்த நான்கு வருடங்களாக இழுபறி நிலையில் காணப்படுகிறது எனவும் இந்த நான்கு வருடங்களில் மூன்று ஒப்பந்தகாரர்கள் கட்டுமானப் பணிகளை மேற்கொண்டுள்ளனர் என பிரதேச செயலக தகவல்கள் தெரிவிக்கின்றன.

பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் கண்டாவளை பிரதேச செயலகத்தின் புதிய கட்டடம் அமைக்கப்பட்டு வருகின்றது.

தற்போது கண்டாவளை பிரதேச செயலகத்தின் திட்டமிடல் பிரிவு புளியம்பொக்கணைச் சந்தியிலும் பிரதேச செயலாளர் உட்பட ஏனைய பிரிவுகள் கண்டாவளை வெலிகண்டல் சந்தியிலும் இயங்கி வருகின்றன. இதனால் பொதுமக்கள் அங்குமிங்கும் தங்களின் தேவைகளுக்கு அலைக்கழிக்கப்படும் நிலைமை காணப்படுகிறது.

அத்தோடு ஒவ்வொரு வருட பருவ மழையின் போதும் வெலிகண்டல் சந்திக்கருகில் அமைந்துள்ள பிரதேச செயலக பிரிவுகள் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டு வருகின்றன. எனவே புளியம்பொக்கணைச் சந்தியில் அமைக்கப்பட்டு வருகின்ற கண்டாவளை பிரதேச செயலகத்தின் புதிய கட்டடத்தின் கட்டுமானப் பணிகளை விரைவாகப் பூர்த்தி செய்து பொதுமக்கள் ஒரே கூரையின் கீழ் பயன்பெறும் வகையில் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (9-350)

# தேர்தல் தொடர்பான கலந்துரையாடல்






(குருமன்காடு)

வவுனியா அறிவுசார் மன்றத்தின் ஏற்பாட்டில் "ஜனாதிபதி தேர்தலும் வவுனியாவும்" எனும் தொனிப்பொருளிலான கலந்துரையாடல் ஒன்று குருமன்காடு பகுதியில் அமைந்துள்ள விருந்தினர் விடுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

வவுனியாவின் புத்திஜீவிகள் மற்றும் தொழில்சார் சமூகம் தேர்தலில் என்னவெல்லாம் செய்ய வேண்டும், தேர்தலில் தமிழ் மக்களின் பங்களிப்பு, யாருக்கு வாக்களிக்க வேண்டும், வாக்களிப்பும் வவுனியா மாவட்டமும் போன்ற பல்வேறு விடயங்கள் தொடர்பாக இதன்போது கலந்துரையாடப்பட்டது. அறிவிப்பாளரான விமலச்சந்திரனின் ஒருங்கிணைப்பில் இடம்பெற்ற இக் கலந்துரையாடலில் யாழ்.பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீட சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி சிவகுமார், தமிழ் பத்திரிகை ஒன்றின் பிரதம ஆசிரியர் மதன், அமைச்சர் மனோ கணேசனின் இணைப்பாளர் ஜனகன், பொறியலாளர் தயாபரன், வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையின் வைத்தியர் மதுரகன் ஆகியோர் கலந்து கொண்டு கருத்துரைகளை வழங்கினர்.

இந்நிகழ்வில் ஆசிரியர்கள், முச்சக்கரவண்டி உரிமையாளர் சங்கத்தினர், தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தினர், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், அரசியல் பிரமுகர்கள், வர்த்தகர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (9-250)

# கிளிநொச்சி நீதிமன்றின் பகிரங்க அறிவித்தல்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி நீதவான் நீதிமன்றில் வழக்கிலக்கம்:-35756 வழக்குடன் தொடர்புடைய சான்றுப்பொருளான NP VL 7409 மோட்டார் சைக்கிள் கிளிநொச்சி பொலிஸாரினால் பாரப்படுத்தப்பட்டுள்ளது. அதனை உரிமை கோருபவர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் அலுவலக நாட்களில் 07.01.2020 ஆம் திகதிக்கு முன்னர் இம் மன்றுக்கு சென்று பதிவாளரை தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (9)

# வவு.சோபாலபுளியங்குளத்தில் விவசாய நடவடிக்கைக்கு பொலிஸார் தடை விதித்ததால் பதற்றம்

(குருமன்காடு)

வவுனியா பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட சோபாலபுளியங்குளம் பகுதியில் நெற் பயிர்ச்செய்கை நடவடிக்கையில் ஈடுபட்ட தமிழ் மக்களுக்கு பூவரசன்குளம் பொலிஸார் தடையை ஏற்படுத்தியமையால் பதற்ற நிலை ஏற்பட்டது.

இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருகையில், வவுனியா பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட சோபாலபுளியங்குளம் கிராமத்தில் 78 தமிழ் குடும்பங்கள் பூர்வீகமாக வாழ்ந்து வருகின்றன.

அந்த மக்கள் விவசாயம் செய்து வந்த அரச நிலப்பகுதி யுத்தம் காரணமாக மக்கள் இடம்பெயர்ந்தமையால் கைவிடப்பட்டிருந்தது. மீண்டும் மக்கள் குடியேறிய நிலையில் அப்பகுதியில் அரசாங்கத்திற்கு சொந்தமான 40 ஏக்கர் வரையிலான விவசாய நிலத்தில் நெற் செய்கையில் ஈடுபட்டு வந்தனர். அத்துடன் குறித்த காணியை தமது வாழ்வாதார பயிர்ச்செய்கைக்காக வழங்குமாறு அம் மக்கள் பிரதேச செயலாளர், அரச அதிபர், மக்கள் பிரதிநிதிகள், வடமாகாண ஆளுநர் ஆகியோரிடம் கோரியும் இருந்தனர்.



இருப்பினும், அருகில் குடியேறியிருந்த சகோதர இனத்தவர்கள் குறித்த காணியை தாம் கையகப்படுத்த முயன்றமையால் அக்காணி அரசியல் தலையீடு காரணமாக தமிழ் மக்களுக்கு வழங்கப்படாத நிலையில் இருந்தது. இந்நிலையில் நேற்று முன்தினம் அப்பகுதி தமிழ் மக்கள் தரணிக்குளத்தின் கீழ் தாம் செய்கை பண்ணி வந்த குறித்த 40 ஏக்கர் நெற்செய்கை நிலத்தில் பயிர்ச்செய்கையில் ஈடுபட்டனர். இதன்போது அங்கு வந்த பூவரசன்குளம் பொலிஸார் குறித்த காணியில் பயிர்ச்செய்கை மேற்கொள்ள தடைவிதித்துடன், மக்களை அவ்விடத்தில் இருந்து வெளியேறுமாறும் கோரினர்.


ஆனாலும், மக்கள் அவ்விடத்தில் இருந்து வெளியேறாது வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவமோகனின் கவனத்திற்கு கொண்டு வந்தனர். இதனையடுத்து குறித்த இடத்திற்குச் சென்ற வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கலந்துரையாடலை மேற்கொண்டதுடன், குறித்த காணிகள் அப்பகுதி தமிழ் மக்கள் விவசாயம் செய்த நிலங்கள் எனத் தெரிவித்து அவர்களை தொடர்ந்தும் பயிர்ச்செய்கையில் ஈடுபடுமாறு தெரிவித்தார். இதனையடுத்து பொலிஸார் அங்கிருந்து வெளியேறிய நிலையில் பாராளுமன்ற உறுப்பினர் முன்னிலையில் மக்கள் நெற்செய்கையில் ஈடுபட்டனர்.

அத்துடன், தமது வாழ்வாதாரத்திற்காக குறித்த விவசாயக் காணியைப் பெற்றுத்தர உரிய அதிகாரிகள், மக்கள் பிரதிநிதிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அம்மக்கள் கோரிக்கை விடுத்திருந்தனர். (9-250)

# பாரதம்

## காஷ்மீரை மறந்து விடுங்கள்

### பாகிஸ்தானுக்கு ராஜ்நாத்சிங் அறிவுரை



(காஷ்மீர்)
காஷ்மீரை மறந்துவிடுங்கள் என்றும் காஷ்மீர் பற்றி நீங்கள் சிந்திக்கவே கூடாது என்றும் பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் பாகிஸ்தானுக்கு எச்சரிக்கை விடுத்தார்.

அரியானா மாநில சட்டபேரவை தேர்தலையொட்டி பா.ஜ.க. சார்பில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை பிரசாரப் பணிகளை மேற்கொண்ட போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்து தெரிவித்த அவர், "வளைகுடா பகுதியில் தீவிரவாத பதற்றத்தைக் குறைக்க முயற்சிப்பதற்காக பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான் ஈரானுக்கு விஜயம் செய்தார். ஆனால், இந்தியாவிற்கு எதிராக தீவிரவாதத்தைத்தான் பாகிஸ்தான் தூண்டிவிடுகிறது.

இந்தியாவுக்கு எதிரான தீவிரவாதிகளை தங்கள் நாட்டில் பாகிஸ்தான் ஊக்குவிக்கிறது. உண்மையிலேயே தீவிரவாதத்தை ஒழிக்க வேண்டும் என்று இம்ரான்கான் விரும்பினால், அதற்கு நாங்கள் உங்களுக்கு உதவத் தயாராக இருக்கிறோம்.

தீவிரவாதத்தை பாகிஸ்தான் ஒழிக்க விரும்பி அதற்கு இந்தியாவின் உதவியைக் கோரினால் அதற்காக பாகிஸ்தானுக்கு இராணுவத்தை அனுப்ப நாங்கள் தயாராக இருக்கிறோம்.

காஷ்மீர் இந்தியாவின் ஒருங்கிணைந்த பகுதி. இதில் எந்த மாற்றுக் -கருத்தும் கிடையாது. இது தொடர்பாக வேறு எந்த நாடும் எங்களுக்கு அழுத்தமும் தரமுடியாது என மேலும் சுட்டிக் காட்டினார். (ஜ-2)

## இந்திய எல்லையில் நுழையும் ட்ரோன்களை சுட்டுத்தள்ள உத்தரவு

(சென்னை)
இந்திய எல்லையில் நுழையும் சிறிய ட்ரோன்களை சுட்டுத் தள்ள எல்லைப் பாதுகாப்புப் படையினருக்கு உத்தரவிடப்பட்டது.

பாகிஸ்தான் எல்லைப் பகுதியிலிருந்து இந்திய எல்லையில் சிறிய ட்ரோன்கள் நுழைவதாக குற்றச்சாட்டு தொடர்ந்து முன்வைக்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில், இந்திய எல்லை பாதுகாப்புப் படையினர் சிறிய ட்ரோன்கள் பஞ்சாப் சர்வதேச எல்லையைக் கடந்து வருவதாக கண்டுபிடித்தனர்.

குறித்த ட்ரோன்கள் துப்பாக்கிகளையும் போதைப்பொருட்களையும் கடத்தி வருவதற்கு உபயோகிக்கப்படுவதாக கூறப்படுகிறது.

கடந்த திங்கட்கிழமை இரவு, பஞ்சாப் மாநிலம் பெரோஸ்பூர் மாவட்டத்தில் ஹுசானிவாலா எல்லைப்பகுதியின் மேல் பாகிஸ்தானிலிருந்து இந்திய எல்லையில் ஒரு ட்ரோன் பறந்து செல்வதை எல்லைப் பாதுகாப்பு படையினர் கண்டுபிடித்தனர்.

இதன் காரணமாகவே ஆயிரம் அடிக்கு கீழ் பறக்கும் சிறிய ட்ரோன்களை சுட்டுத்தள்ள எல்லைப் பாதுகாப்பு படையினருக்கு உயரதிகாரிகள் உத்தரவிட்டனர். (ஜ-2)

## அமெரிக்காவில் விசித்திர போட்டி வெற்றியாளருக்கு பியர் போத்தல்கள்



(வோஷிங்டன்)
அமெரிக்காவில் வித்தியாசமான போட்டி ஒன்று வைக்கப்பட்டதுடன், அதன் வெற்றியாளருக்கு பியர் போத்தல்கள் பரிசளிக்கப்பட்டன.

மனைவியை சுமர்ந்தவாறு ஓடும் போட்டியே அமெரிக்காவின் மைனே மாநிலத்தில் நடைபெற்றது.

இதற்காக அமைக்கப்பட்டிருந்த சேறும் சகதியுமான குட்டை, மரத்திலான தடுப்பு, மணல் மேடு உள்ளிட்ட பல தடைகளை கடந்து மனைவியை சுமந்துகொண்டு கணவன்மார்கள் ஓடினர்.

இதில் டெலவேரைச் சேர்ந்த ஜெரோம் ரோஹம் மற்றும் ஒலிவியா ரவுலிங் தம்பதியினர் 55 விநாடிகளில் இறுதிக்கோட்டை அடைந்து வெற்றிபெற்றனர்.

வெற்றி பெற்றவரின் மனைவியின் எடையைப் போன்று 5 மடங்கு பணமும் எடைக்கு நிகராக பியர் போத்தல்களும் பரிசாக வழங்கப்பட்டன. (ஜ)

## ஈக்வடோரில் போராட்டம்; ஏழு பேர் உயிரிழப்பு

(குவைட்டோ)
ஈக்வடோர் நாட்டில் அரசின் பொருளாதார சீர்திருத்தங்களுக்கு எதிராக நடைபெற்று வரும் போராட்டத்தில் ஏழு பேர் பலியாகினர்.

தென்னமெரிக்க நாடுகளில் ஒன்று ஈக்வடோர். இந்த நாடு, பெரு, பிரேசில் நாடுகள் அருகே அமைந்துள்ளது. ஈக்வடோரில் பொருளாதார சீர்திருத்தங்கள் கொண்டுவர அரசு முடிவு செய்தது. சர்வதேச நாணய நிதியத்துடன் ஈக்வடோர் அரசு செய்து கொண்ட ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாக பல தசாப்தங்களாக மக்களுக்கு வழங்கப்பட்டு வந்த எரிபொருள் மானியங்களை இரத்துச் செய்ய முடிவு செய்யப்பட்டது. இதனால் ஆண்டுக்கு 2.27 பில்லியன் டொலர்கள் அரசுக்கு இலாபம் கிடைக்கும். மேலும் அந்த நிதி நிறுவனத்திடமிருந்து ஈக்வடோர் அரசு 4.2 பில்லியன் டொலர்கள் கடனும் பெற்றுக் கொள்ள முடியும்.

இந்த பொருளாதார சீர்திருத்தங்கள் அடித்தட்டு மக்களை வெகுவாக பாதிப்பதாக கூறி, ஈக்வடோர் மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். கடந்த 10 நாட்களாக நாட்டின் பல்வேறு இடங்களில் போராட்டங்கள் நடைபெற்றுள்ளன.

போராட்டத்தில் ஈடுபட்ட 1152 மக்கள் காவலில் வைக்கப்பட்டனர். போராட்டத்தின் போது ஏற்பட்ட வன்முறையில் 1340 மக்கள் காயமடைந்துள்ளனர். மேலும் 7 பேர் பலியாகியுள்ளனர் என அதிகாரிகள் தெரிவித்தனர். (ஜ)

## ஐ.எஸ்.பயங்கரவாதிகள் மீ

## சிரியா மீதான தொ

## உடன் முடிவுக்குக் கொ

### துருக்கியிடம் ஜேர்ப

(பேர்லின்)

**சிரியா மீதான தாக்குதலை உடனடியாக முடிவுக்குக் கொண்டு வாருங்கள் என்று துருக்கி ஜனாதிபதியிடம் ஜேர்மன் ஜனாதிபதி ஏஞ்சலா மெர்கல் தொலைபேசி ஊடாக வலியுறுத்தினார்.**

சிரியாவில் உள்ள குர்திஷ் போராளிகள் மீது துருக்கி இராணுவம் தாக்குதல் நடத்தி வருகிறது. இதன் காரணமாக சிரியாவின் வடகிழக்கு பகுதியில் உள்ள குர்திஷ் போராளிகள் மற்றும் அப்பாவிப் பொதுமக்கள் அதிக எண்ணிக்கையில் பலியாகி வருகின்றனர்.

துருக்கியின் இந்தத் தாக்குதலுக்கு அமெரிக்கா, பிரான்ஸ் நாடுகள் கடும் கண்டனம் தெரிவித்தன. போர் நடவடிக்கைகளை நிறுத்தாவிடில், துருக்கியின் பொருளாதாரம் முற்றிலும் அழிக்கப்படும் என அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப், துருக்கி அரசுக்கு எச்சரிக்கை விடுத்தார்.


இந்நிலையில் ஜேர்மன் ஜனாதிபதி ஏஞ்சலா மெர்கல், உடனடியாக சிரியா மீதான தாக்குதலை முடிவுக்குக் கொண்டு வாருங்கள் என துருக்கி ஜனாதிபதி எர்டோகனிடம் வலியுறுத்தினார்.

### சவுதியில் ஆளில்லா

## தாக்குதல் நடத்தப்பட்ட எ

## நவம்பர் மாதத்திற்குள்

### ஆரம்கோ நிறுவன



(றியாத்)
சவுதி அரேபியாவில் ஆளில்லா விமானங்கள் மூலம் தாக்குதல் நடத்தப்பட்ட எண்ணெய் ஆலைகள் நவம்பர் மாதத்துக்குள் சீரமைக்கப்படும் என ஆரம்கோ நிறுவனம் நம்பிக்கை வெளியிட்டது.

கடந்த செப்டெம்பர் மாதம் ஆரம்கோ நிறுவனத்துக்கு சொந்தமான இரு எண்ணெய் ஆலைகள் மீது ஆளில்லா விமானங்கள் மூலம் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இதன் காரணமாக சவுதி அரேபியாவின் மொத்த எண்ணெய் உற்பத்தியில் தடை ஏற்பட்டது.

# வெளிநாடு

## ர் மீள் எழுச்சி பெற வாய்ப்பு

# தாடர் தாக்குதலை

# கொண்டு வாருங்கள்

## ஜேர்மன் வலியுறுத்து





ஏஞ்சலா மெர்கல், எர்டோகனிடம் "இந் நடவடிக்கையால் ஏராளமான மக்கள் தமது வீடுகளில் இருந்து வெளியேறும் ஆபத்தான நிலை உருவாகியுள்ளது. பிராந்தியத்தின் ஸ்திரமின்மைக்கு ஆபத்தை விளைவிக்கும்.


இந் நடவடிக்கையால் ஐ.எஸ். பயங்கரவாதிகள் மீண்டும் எழுச்சி பெற வழிவகுக்கும்" எனவே உடனடியான இத்தாக்குதல் நடவடிக்கையை முடிவுக்குக் கொண்டு வாருங்கள் என வலியுறுத்தினார். (ஐ)

## லா விமானங்களால்

# ட்ட எண்ணெய் ஆலைகள்

# குள் சீரமைக்கப்படும்

## றுவனம் நம்பிக்கை



இதன் எதிரொலியாக சர்வதேச சந்தையில் மசகு எண்ணெயின் விலையும் அதிகரித்தது.

இந்தத் தாக்குதலுக்கு ஹவுதி கிளர்ச்சியாளர்கள் பொறுப்பேற்றனர். தாக்குதல் நடத்தப்பட்ட அடுத்த 10 நாட்களிலே நாளொன்றுக்கு 10 மில்லியன் பரல்கள் அளவுக்கான உற்பத்தியை ஆரம்கோ நிறுவனம் மீட்டமைத்தது.

இந்நிலையில் அதிகபட்ச உற்பத்தி அளவான 12 மில்லியன் பரல்கள் எண்ணெய் உற்பத்தியை, மீட்டமைக்கும் பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருவதாகவும் அந்நிறுவனம் தெரிவித்தது. (ஐ-2)




## நீடிக்கும் துருக்கி - சிரியா மோதல்


# ஐ.எஸ். பயங்கரவாதிகளின் குடும்பத்தினர் தப்பியோட்டம்

(டமாஸ்கஸ்)

வடக்கு சிரியாவில் உள்ள குர்திஸ் படையினரை இலக்கு வைத்து துருக்கி இராணுவம் தாக்குதல் நடத்தி வரும் நிலையில், அங்குள்ள நலண்புரி முகாம் ஒன்றிலிருந்து ஐ.எஸ். பயங்கரவாதிகளின் குடும்ப உறுப்பினர்கள் தப்பிச் சென்றனர்.



சிரியாவில் உள்ள ஐ.எஸ். பயங்கரவாதிகளை ஒழித்துக்கட்டும் முகமாக அமெரிக்கா முன்னெடுத்த நடவடிக்கைகளுக்கு ஆதரவு வழங்கிய குர்திஸ் படைகள் மீது துருக்கி ஐந்து நாட்களாக தாக்குதல் நடத்தி வருகின்றது.



சிரியாவில் இருந்து அமெரிக்கப் படைகளை மீளப்பெறுவதாக அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் அறிவித்த நிலையிலேயே சிரியா மீது துருக்கி தாக்குதலைத் தொடுத்துள்ளது.

அமெரிக்க மற்றும் குர்திஸ் படையினரின் (சிரிய ஜனநாயகப் படை) நடவடிக்கைகளை அடுத்து கைது செய்யப்பட்ட பல ஐ.எஸ். பயங்கரவாதிகள் வடக்கு சிரியாவிலேயே சிறைப்படுத்தப்பட்டனர். அது மட்டுமல்லாது பயங்கரவாதிகளின் உறவினர்களும் முகாம்களில் குடியமர்த்தப்பட்டனர்.

துருக்கி மோதலை ஆரம்பித்து வடகிழக்கு சிரியாவின் மத்திய நகரொன்றை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்த நிலையில், முகாமில் இருந்த ஐ.எஸ். பயங்கரவாதிகளின் உறவினர்கள் தப்பியோடியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

'பாதுகாப்பு வலயம்' ஒன்றை குறித்த பிராந்தியத்தில் ஏற்படுத்தி இடம்பெயர்ந்துள்ள சிரிய அகதிகளை அங்கே குடியமர்த்தப் போவதாக துருக்கி. ஏற்கனவே குறிப்பிட்டுள்ளதுடன், யாருடைய அச்சுறுத்தலுக்கும் அடிபணிந்து தங்கள் போர் நடவடிக்கையை கைவிடப்போவதில்லை எனவும் துருக்கி குறிப்பிட்டிருந்தமை சுட்டிக்காட்டத்தக்கதாகும். (ஐ)

# பாகிஸ்தானில் கைது செய்யப்பட்ட பயங்கரவாதிகளுக்கு தண்டனை வழங்குங்கள்

## அமெரிக்கா வேண்டுகோள்

(வோஷிங்டன்)

பாகிஸ்தானில் கைது செய்யப்பட்ட தீவிரவாதிகளுக்கு தண்டனை வழங்குமாறு அமெரிக்கா கோரிக்கை விடுத்தது.

பாரிசில் சர்வதேச நிதி நடவடிக்கைக் குழுவான FATF கூட்டம் ஆரம்பமாகவுள்ள நிலையில், பாகிஸ்தான் 4 முக்கிய தீவிரவாதத் தலைவர்களை கைது செய்ததாக அறிவித்தது.

இந்நிலையில் இந்தக் கைது நடவடிக்கையை அமெரிக்காவின் தெற்கு மற்றும் மத்திய ஆசியப் பிரிவுக்கான தலைவர் ஆலிஸ் வெல்ஸ் வரவேற்றார்.

அவர் வெளியிட்டுள்ள டுவிட்டர் பதிவில், தீவிரவாதிகளால் பாதிக்கப்பட்டவர்கள் இவர்கள் தண்டனை பெறுவதைக் காண வேண்டும் என்றும் பாகிஸ்தான் தனது நாட்டின் நலனுக்காகவும் தீவிரவாதிகள் தங்கள் மண்ணில் இயங்குவதற்கு தடை விதிக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

கடந்த காலங்களில் பாகிஸ்தான் தீவிரவாதிகளை இக்கட்டான நேரங்களில் கைது செய்வதும் பின்னர் விடுவித்து விடுவதும் வாடிக்கையான ஒன்றாக மாறியுள்ளது.

மும்பைத் தாக்குதலின் பின்னணியில் இருந்த ஹபீஸ் சையத்தை குறைந்தது 8 முறை கைது செய்து பாகிஸ்தான் விடுதலை செய்திருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# சிரியாவில் வான்வழித் தாக்குதல் பத்துப்பேர் பரிதாபமாக உயிரிழப்பு


(டமாஸ்கஸ்)

துருக்கிப் படையினர் நடத்திய வான்வழித்தாக்குதலில் பொது மக்கள் 10 பேர் பரிதாபமாகப் பலியாகினர். சிரியாவின் வட கிழக்குப் பகுதியில் உள்ள குர்து இனப் போராளிகள் மீது துருக்கி தொடர்ந்தும் வான்வழித்தாக்குதல் நடத்தி வருகின்றது.

இந்நிலையில் நேற்று முன்தினம் குர்து இனப் போராளிகள் பிடியில் இருந்த நகரத்தில் அப்பாவி மக்கள் 10 பேரை துருக்கி ஆதரவு போராளிகள் சுட்டுக்கொன்றனர். (ஐ)

## 600 மில்லியன் ரூபாய் மோசடி

# லலித் வீரதுங்க, அனுஷ பெல்பிட்டவின் மேன்முறையீடு மார்ச்சில் விசாரணைக்கு




(கொழும்பு)

ஜனாதிபதியின் முன்னாள் செயலாளர் லலித் வீரதுங்க மற்றும் தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் தலைவர் அனுஷ பெல்பிட்ட ஆகியோர் தாக்கல் செய்த மேன்முறையீட்டு மனுக்களை எதிர்வரும் மார்ச் மாதம் 13 ஆம் திகதி விசாரணைக்கு எடுப்பதென மேன்முறையீட்டு நீதிமன்றம் தீர்மானித்தது.

சர்ச்சைக்குரிய சில் அனுஷ்டான துணிகள் பகிர்ந்தளிப்பு தொடர்பாக அரசுக்கு சொந்தமான 600 மில்லியன் ரூபாய் நிதியை மோசடி செய்ததாக லலித் வீரதுங்க மற்றும் அனுஷ பெல்பிட்ட ஆகியோருக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் மூன்று வருட கடுங்காவல் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தது.

2017 செப்டெம்பர் 7 ஆம் திகதி கொழும்பு மேல் நீதிமன்றம் விடுத்த இத் தீர்ப்பை சவாலுக் குட்படுத்தி லலித் வீரதுங்க மற்றும் அனுஷ பெல்பிட்ட மேற்படி முறையீட்டு மனுக்களைத் தாக்கல் செய்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## நாட்டின் பாதுகாப்பு விடயத்தில்

# சஜித்தின் செயற்பாடு முழுமையாக இருக்கும் ஹக்கீம் உறுதி - ஹிஸ்புல்லாவுக்கு எதிர்ப்பு

(கொழும்பு)

நாட்டின் பாதுகாப்பு விடயத்தில் சஜித் பிரேமதாஸவின் செயற்பாடுகள் முழுமையாக இருக்கும் என்பதை உறுதிப்படுத்த முடியும் என அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

அத்துடன் முஸ்லிம் வேட்பாளர் ஒருவர் இந்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவது என்பது முஸ்லிம் வாக்குகளைத் திசைதிருப்பும் நோக்கத்தில் முன்னெடுக்கப்படும் செயற்பாடாகவே நாம் கருதுகின்றோம்.

இது ஒரு சதித்திட்டமே தவிர வேறு ஒன்றும் இல்லை. இன்று நாம் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்



கிரஸ் மற்றும் அகில இலங்கை முஸ்லிம்காங்கிரஸ்உட்பட ஏனைய பிரதான முஸ்லிம் தலைமைகள் அனைவரும் ஒன்றிணைந்து ஒரு அணியாக தீர்மானம் எடுத்துள்ள நிலையில் நாம் இணைந்துள்ள அணியைப் பலப்படுத்துவதை விடுத்து ஏனைய ஒரு அணிக்காக துணை போவது முஸ்லிம் வாக்குகளை திசைதிருப்ப வேண்டுமென்றே முஸ்லிம்களுக்கு எதிராக செயற்படும் வேட்பாளரை ஆட்சிக்குக் கொண்டுவரும் நோக்கத்தில் எடுக்கும் சதித்திட்டமாகும் என்றும் அவர் தெரிவித்தார்.

இம்முறை ஜனாதிபதித் தேர்தலை முஸ்லிம் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி எம்.எல்.ஏ.எம் ஹிஸ்புல்லா போட்டியிடத் தீர்மானம் எடுத்துள்ள நிலையில் முஸ்லிம் தலைமைகளின் நிலைப்பாடு குறித்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். (இ-7)

# நாற்பது இலட்சம் ரூபா பெறுமதியான கடல் அட்டைகளுடன் இருவர் கைது



(இராமேஸ்வரம்)

மன்னார் வளைகுடா கடல் வழியாக இலங்கைக்கு கடத்தப் படவிருந்த 3200 கிலோ கிராம் கடல் அட்டைகளுடன் நாட்டுப் படகை பறிமுதல் செய்த வனத்துறையினர் கடத்தலில் ஈடுபட்ட இருவரை கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

மன்னார் வளைகுடா கடற் பகுதியிலிருந்து சர்வதேச கடல் எல்லை வழியாக இலங்கைக்கு கடல் அட்டைகள் கடத்தப்படுவதாக கிடைத்த இரகசியத் தகவலையடுத்து நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை அதிகாலை முதல் மன்னார் வளைகுடா கடல் பிராந்தியத்தில் ரோந்துப் பணியில் ஈடுபட்டனர்.

இதன்போது மண்டபம் தெற்குக் கடற்கரைப் பகுதியில் அமைந்துள்ள வனத்துறை சோதனைச் சாவடி அருகே கடலில் சந்தேகத்துக்கு இடமாக நின்ற நாட்டுப் படகை சோதனை செய்ய முயன்ற போது இருவர் படகிலிருந்து கடலில் குதித்து தப்பிக்க முயன்றனர்.

இந்நிலையில் அவர்கள் இருவரையும் மடக்கிப் பிடித்த வனத்துறையினர் நாட்டுப் படகை சோதனை செய்தபோது படகில் 261 மூடைகளில் 3,200 கிலோ கிராம் நிறைகொண்ட பதப்படுத்தப்படாத கடல் அடைகள் மறைத்து வைக்கப்பட்டிருந்தன.

இதனையடுத்து கடத்தல்காரர்களுடன் கடல் அட்டைகள், மற்றும் நாட்டுப்படகை மண்டபம் வனத்துறை அலுவலகத்திற்கு கொண்டு சென்று விசாரணை நடத்தி வருகின்றனர். பறிமுதல் செய்யப்பட்ட கடல் அட்டைகளின் பெறுமதி 40 இலட்சம் ரூபாய் இருக்கலாம் என அதிகாரிகள் தெரிவித்தனர். (இ-5-285)

## இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

### ஆறாவது அறிவு

வாழ்க்கையில் ரொம்ப அடிபட்டு அவஸ்தைப்பட்டுக் கொண்டிருக்கின்ற ஒருத்தர் வந்தார்! மனசு ரொம்ப நொந்து போய்ப் பேசினார். இந்த உலகத்தில் மனிதனாகப் பிறந்ததைவிட மாடாகப் பிறந்திருக்கலாம் சேர் என்றார். திடீரென்று வந்து இப்படிச் சொன்னால் அது எப்படி சேர்? என்றேன். இப்பதான் அந்த ஞானோதயமே எனக்கு வந்தது! என்றார்.

அதற்கு என்ன காரணம்? என்றேன். என் மகனுக்கு வேலை தேடுகிறேன்...கிடைக்கவில்லை. பெண்ணுக்கு மாப்பிள்ளை தேடுகிறேன் கிடைக்கவில்லை. வீடு கட்டக் கடன் கேட்கிறேன் கிடைக்கவில்லை. மாடாகப் பிறந்திருந்தால் இது மாதிரி கவலையெல்லாம் கிடையாது! பேசாமல் வைக்கோலைச் சாப்பிட்டுக்கொண்டு அசை போட்டுக் கொண்டே படுத்திருக்கலாமே! என்றார். அதற்கப்புறம்தான் அவர் சொன்ன விடயத்தை நானும் கொஞ்சம் யோசிக்க ஆரம்பித்தேன் மனசுக்குள்ளே. விலங்குகள், பறவைகள் தாவரங்கள், மற்ற உயிரினங்கள் எல்லாம் நல்ல படியாக இருக்க வேண்டும் என்பதுதான் இயற்கையினுடைய விருப்பம். இயற்கை அமைப்பை உண்மையாகப் புரிந்து கொண்டால் அது புரியும்.

இருந்தாலும் அவர் சொன்னதைக் கேட்டதற்குப் பிறகுதான் ஒரு முக்கியமான விடயம் தெரிந்தது. இந்த உலகத்தில் முக்கியமாக ஆறு பிரச்சினைகள்...அந்த ஆறு பிரச்சினைகளும் ஆடு, மாடு, செடி, கொடிகளுக்கு இல்லை. ஆனால் மனிதன் அந்தப் பிரச்சினையைச் சந்திக்க வேண்டியிருக்கிறது. அந்த ஆறு பிரச்சினைகள் என்னென்ன தெரியுமா?

முதலில்... ஆடு, மாடெல்லாம் தமக்கென்று சொந்தமாக ஒரு வீடு இல்லையே என்று கவலைப்பட்டுக்கொண்டு இருப்பது இல்லை. ஆனால் மனிதனுக்கு வீடு தேவைப்படுகிறது. இரண்டாவது ஆடைப் பிரச்சினை... ஒரு கோழி இருக்கு. அது என்ன நமக்கு போடுவதற்கு ஒரு சட்டை இல்லை என்று கவலைப்பட்டுக் கொண்டிருக்குமா? ஆனால் மனிதனுக்கு அந்தப் பிரச்சினை உண்டு. மூன்றாவது கல்வி் பிரச்சினை. ஒரு பசுமாடு கவலையாக நின்று கொண்டிருந்தது. நீங்கள் அருகில் சென்று ஒரு பசு மாட்டிடம் ஏன் கவலைப்பட்டுக்கொண்டிருக்கிறாய்? என்று கேட்கின்றீர்கள் என்று வைத்துக்கொள்ளுங்கள். அதற்கு மனிதருக்குரிய தேவைகள் இல்லை. ஆனால் மனிதனுக்கு அந்தக்கவலை உண்டு. நான்காவது வேலைவாய்ப்புப் பிரச்சினை. வேலை கிடைக்கவில்லை என்று வேப்பமரம் கவலைப்படுவதில்லை. ஆனால் மனிதன் கவலைப்படுகிறான்.

ஐந்தாவது கல்யாணப் பிரச்சினை. எருமை மாடு, பசுமாடு எல்லாம் பொண்ணுக்கு மாப்பிளை தேடி அலையுதா? பேப்பரில் விளம்பரமா கொடுக்குது? ஆறாவது பணம் சம்பந்தமான பிரச்சினை. ஆடு, மாடெல்லாம் பணத்தை சேமிக்க வேண்டும். எதிலேயாவது முதலீடு செய்ய வேண்டும் என்று நினைப்பதில்லை. பணத்தை எப்படி காப்பாற்றுவது என்ற கவலையும் அதுகளுக்கு இல்லை.

குதிரை, குளம்போட பிறக்குது... காடு மேடெல்லாம் கவலையில்லாமல் திரியலாம்! ஆடு உடம்பில் ரோமத்தோடு பிறக்கின்றது. குளிரைப்பற்றி கவலைப்பட வேண்டாம்.

ஆனால் மனிதன் மட்டும்தான் ஒன்றுமில்லாமல் பிறக்கிறான். ஏன் இந்த பாகுபாடு? இதை ஒரு பெரியவரிடம் கேட்டேன். அவர் இதற்கு பதில் சொன்னார். எப்படி என்று தெரியுமா?

அவர் இதே கேள்வியை இயற்கையிடம் கேட்டாராம். அதற்கு இயற்கை, வேறு யாருக்கும் கொடுக்காத ஒரு வலுவான கருவியை (Power Full Weapon) மனிதனுக்கு கொடுத்திருக்கிறேனே... அந்த கருவியை உபயோகப்படுத்தி அந்த ஆறு பிரச்சினையை மட்டுமல்ல ஆறு கோடி பிரச்சினைகள் இருந்தாலும் அதைச் சமாளிக்கலாம். அதுதான் ஆறாவது அறிவு. அதை உபயோகப்படுத்தினால் காலுக்குச் செருப்பு தயார் செய்யலாம். குளிருக்குப் போர்வை தயார் செய்யலாம். இதுதான் இயற்கையினுடைய பதில்.

அதனாலே நாம் செய்ய வேண்டிய முதல் காரியம்... இயற்கையைச் சரியாகப் புரிந்து கொள்ள வேண்டும். ஆனால் நாங்கள் இப்ப எந்தளவுக்கு அதைச் சரியாக புரிந்து கொள்கின்றோம்?

இயற்கையின் படைப்பையே நாங்கள் சரியாகப் புரிந்து கொள்வது இல்லை சேர். அதற்கு ஒரு உதாரணம் சொல்லுகிறேன் கேளுங்கள். நகரத்திலேயிருந்து ஒருவன் கிராம த்திற்கு வந்தான். ஆகா எவ்வளவு அழகான பசு! இயற்கையினுடைய படைப்பு. அது சரி இதற்கெல்லாம் ஏன் கொம்பு இல்லை என்று கேட்டான். அதற்கு அங்கே இருந்த இன்னொருத்தர் பதில் சொன்னார்.

பசு மாட்டுக்கு கொம்பு இல்லாததற்கு பல காரணங்கள் உண்டு. கன்றுக் குட்டியாக இருந்தால் கொம்பு இருக்காது! பசு வளர்ந்து பெரியதாக ஆனதற்கு பின்புதான் கொம்பு முளைக்கும் என்பது ஒரு காரணம். சில சமயம் வளர்கின்ற கொம்பை எடுத்து விடுவதும் உண்டு. அதுவும் ஒரு காரணம். ஆனால்... இதுக்கு ஏன் கொம்பு இல்லை என்றால் அதற்குக் காரணம் அது பசு இல்லை! குதிரை! என்றார்.

# புலிகளுக்கு எதிராக யுத்தம் செய்த இராணுவத்தை கைது செய்யவில்லை

## நீதிமன்றத்தை அவமதிக்கும் வகையில் கருத்து வெளியிட்ட கோத்தா ஆட்சிக்கு வந்தால் சட்ட ஆட்சி கேள்விக்குறியாகும் - அமில தேரர்



(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராக யுத்தம் செய்த எந்த இராணுவத்தினரையும் இந்த அரசாங்கம் கைது செய்யவில்லையென கலாநிதி தம்பர அமில தேரர் தெரிவித்தார்

கொழும்பில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

"சிறையில் அடைக்கப்பட்டவர்கள் நியாயமான முறையிலா? அநியாயமான முறையிலா? இருக்கின்றார்கள் என்பதை ஜனாதிபதியால் கூடத் தீர்மானிக்க முடியாது.

மேலும் அவர்களை குற்றமற்றவர்கள் என்று விடுவிக்கும் அதிகாரம் நீதிமன்றத்துக்கே உண்டு. இந்நிலையில் அண்மையில் கோத்தபாய, தான் ஜனாதிபதியானதும் இராணுவத்தினரை விடுவிப்பதாக அறிவித்தார்.

ஆனால் விடுதலைப் புலிகளுக்கு எதிராக யுத்தம் செய்த இராணுவத்தினர் எவரையும் இந்த அரசாங்கம் கைது செய்யவில்லை என்பதே உண்மை.

இந்நிலையில், அநீதியான முறையில் கைது செய்யப்பட்டுள்ளதாக கோத்தபாய கூறினால், அதற்கான ஆதாரங்களை அவர் வெளிப்படுத்த வேண்டும்.

அவ்வாறு, அவர் வெளிப்படுத்தினால், நான் அரசியல் நடவடிக்கையிலும் இருக்கமாட்டேன். இந்தப் பூமியிலும் நிச்சயம் இருக்கமாட்டேன். மேலும் எதிர்க்கட்சி தலைவர் ஏன் இதற்காக குரல் கொடுக்கவில்லை.

அத்துடன் கோத்தபாய ராஜபக்ஷ வெளிப்படுத்தியுள்ள கருத்து நீதிமன்றத்தை அவமதிக்கும் செயலாகும். ஆகையால், இத்தகைய ஒருவர் ஆட்சிக்கு வந்தால் நாட்டின் சட்ட ஆட்சி கேள்விக்



குறியான ஒன்றாக மாறும்" எனவும் தேரர் எச்சரித்தார். (இ-7)

# சோலர் மின்சார இணைப்பைப் பெறுவதில் தாமதம்; மின்சார சபையின் கீழ் பதிவு செய்தோர் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் மின்சார சபையின் கீழ் சோலர் மின்சாரத்திற்கான இணைப்பைப் பெறுவதில் பதிவு செய்த பாவனையாளர்கள் நீண்டகாலம் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக பாதிக்கப்பட்டோர் குற்றம்சாட்டினர்.

மின்சாரத்தை சேமிப்பதற்கும் சிக்கனமாக்குவதற்குமான ஓர் திட்டத்தின் அடிப்படையில் இயற்கைக் கொடைகளில் ஒன்றான சூரிய வெப்பத்தை மின்சாரமாகப் பெறும் திட்டம் அரசாங்கத்தால் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

அந்தவகையில் யாழ்.மாவட்டத்தைப் பொறுத்த வரையில் சுன்னாகம் மின்சார சபையுடன் சுமார்



1100 பேர் குறித்த சோலர் திட்டத்தில் இணைந்துள்ளதாகத் தகவல் கிடைத்த போதும் 300 பேர் வரை குறித்த சோலர் மின்சாரத்துக்கான அனுமதியைப் பெற்றுவிட்டு இணைப்புக்காகக் காத்திருப்பதாகவும் தெரிய வருகிறது.

குறித்த திட்டத்தை மின்சார சபையுடன் இணைக்கும் மின்சார சபையின் சட்ட விதிமுறைகளுக்கமைய சோலர் மின்சாரத்தில் இருந்து மட்டுப்படுத்தப்பட்ட மின் உற்பத்தியை மட்டுமே பெற்றுக் கொள்ள முடியும்.

அதுமட்டுமன்றி யாழ்.மாவட்டத்திலுள்ள சகல பிரதேச செயலர் பிரிவுகளிலிருந்தும் பயனாளிகளை இணைக்க வேண்டியுள்ளது.

எனவே குறித்த திட்டம் தொடர்பில் விரைவானதும் உறுதியானதுமான தொடர்பாடலை மக்களுக்கு வழங்கினால் அளவுக்கு அதிகமான பணச்செலவில் கொள்வனவு செய்யப்படும் சோலர் மின்பிறப்பாக்கிகள் தொடர்பில் பொதுமக்கள் எச்சரிக்கையாக இருப்பார்கள் என சமூக ஆர்வலர்கள் சுட்டிக்காட்டினர். (இ-10)

# இலக்கத் தகடுகளைப் பெற்றுக்கொள்ளவும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்திற்கு கிடைக்கப் பெற்ற வாகன இலக்கத்தகடுகளின் பட்டியல் யாழ். மாவட்டத்திலுள்ள அனைத்து பிரதேச செயலகங்களிலும் மாவட்ட செயலகத்திலுள்ள மாவட்ட மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்திலும் பொதுமக்களின் பார்வைக்காக அறிவிப்புப் பலகையில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

மேலும் மாவட்டச் செயலக இணையத்தளத்திலும் பார்வையிடலாம். இதற்கமைய புதிதாக வாகனங்களைப் பதிவு செய்த உரிமையாளர்கள் வாகனப்பதிவுப் புத்தகம், தேசிய அடையாள அட்டை என்பவற்றையும் மாகாணங்களுக்கிடையே வாகன உரிமை மாற்றம் பெற்றவர்கள் மேற்குறித்த இரு ஆவணங்களுடன் பழைய வாகன இலக்கத்தகடுகள் மற்றும் வாகன இலக்கம் பொறித்த ஒட்டும் தாள் (Sticker) என்பவற்றையும் யாழ்.மாவட்ட மோட்டார் வாகனப் போக்குவரத்து அலுவலகத்தில் சமர்ப்பித்து வாகனங்களுக்குரிய இலக்கத்தகடுகளைப் பெற்றுக் கொள்ளுமாறு யாழ்.மோட்டார் போக்குவரத்துத் திணைக்களப் பிரதி ஆணையாளர் வை.பரந்தாமன் அறிவித்தார். (5)

# ஐ.தே.க.-சு.க.கொள்கைகள் முரண்பாடு கோத்தாவுக்கு ஆதரவளிக்கக் காரணம்

## சந்திரிகாவுக்கு தயாசிறி பதில்



(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கொள்கைகளுடன் முரண்படுவதனாலேயே பொதுஜன பெரமுன வின் ஜனாதிபதி வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ஷவுக்கு ஆதரவளிக்கத் தீர்மானித்தோமே தவிர சுதந்திரக் கட்சியை ஆபத்துக்குள்ளாக்குவதற்கான எவ்வித நடவடிக்கையையும் முன்னெடுக்கவில்லை என்று அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜெயசேகர தெரிவித்தார். சுதந்திரக் கட்சி கோத்தபாயவுக்கு ஆதரவு அளித்ததற்கு எதிர்ப்புத் தெரிவித்து முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தனது உத்தியோகபூர்வ பேஸ்புக் பக்கத்-தில் தயாசிறி ஜெயசேகரவை நோக்கிக் கடிதமொன்றைப் பதிவிட்டிருந்தார்.

அந்தக் கடிதத்திற்குப் பதிலளிக்கும் வகையில் தயாசிறி ஜெயசேகர தனது உத்தியோகபூர்வ பேஸ்புக் பக்கத்தில் கடிதமொன்றைப் பதிவிட்டார். அந்தக் கடிதத்திலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது.

வேலைப்பளு காரணமாக உங்களால் பதிவிடப்பட்டிருந்த கடிதத்திற்கு விரைவாகப் பதிலளிக்க முடியவில்லை. எனினும் நாம் எடுத்துள்ள இந்தத் தீர்மானம் சரியானது என்பதைப் புரிந்துகொள்ளுவீர்கள் என்று நம்புகின்றோம். தற்போதைய சூழ்நிலையில் இந்த முடிவையே எம்மால் எடுக்க முடிந்தது என்றும் அக் கடிதத்தில் தயாசிறி சுட்டிக்காட்டினார். (இ-7)

## குருநாகலில் கடும் காற்று

# 75 ஆயிரத்திற்கும் அதிகமான மின் இணைப்புக்கள் துண்டிப்பு

(குருநாகல்)

குருநாகல் மாவட்டத்தில் 75 ஆயிரத்திற்கும் அதிகமான மின் இணைப்புக்கள் துண்டிக்கப்பட்டன. மின்சக்தி அமைச்சின் ஊடகப் பேச்சாளர் சுலக்ஷன ஜெயவர்த்தன இதனைத் தெரிவித்தார்.

பலத்த காற்றால் மரங்கள் முறிந்து வீழ்ந்ததாகவும் இதன் காரணமாக மின் இணைப்புக்கள் துண்டிக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

வாரியபொல, நிக்கவரெட்டிய, கொபேய்கனே, கல்கமுவ உள்ளிட்ட பகுதிகளிலேயே இவ்வாறு மின் இணைப்புக்கள் துண்டிக்கப்பட்டதாக அவர் தெரிவித்தார்.


இந்நிலையில் மின்சாரக் கம்பிகளை இணைப்பதற்காக இலங்கை மின்சார சபையின் மேலதிக அதிகாரிகள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார். (இ-7)

# அடிக்கடி திறனாய்வுக்குள்ளாகும் 13 வது திருத்தம் - பகுதி I

## எது சரி எது பிழை - ஒரு தொகுப்பு

11

கலாநிதி க.தவலிங்கம்
தவிசாளர்–எல்லை நிர்ணய ஆணைக்குழு,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.



**வட மாகாண சபையின் பதவிக்காலத்தில் இயற்றப்பட்ட நியதிச் சட்டங்கள்**

வடமாகாண சபையின் 5 வருட காலப்பகுதியில் 19 நியதிச் சட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளதாக முன்னாள் அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் பத்திரிகைகளுக்கு தெரிவித்திருந்தார். இதில் வருடாந்த நிதி ஒதுக்கீட்டுச் சட்டங்கள் மற்றும் உப குறைநிரப்புச் சட்டங்கள் எல்லாம் உள்ளடக்கப்படவில்லை. அவற்றையெல்லாம் சேர்த்தால் 29 நியதிச் சட்டங்கள் அமையும் என்றும் அவர் குறிப்பிட்டார். வடமாகாண சபையின் இணையத்தில் இதன் விபரம் பின்வருமாறு காட்டப்பட்டிருந்தது.

**வடமாகாண சபையின் 5 வருட காலப்பகுதியில் 19 நியதிச் சட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளதாக வட மாகாண சபையின் முன்னாள் அவைத் தலைவர் சீ.வீ.கே. சிவஞானம் பத்திரிகைகளுக்குத் தெரிவித்திருந்தார்.**

வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்ட நியதிச் சட்டங்கள் (12)

1.வடக்கு மாகாண நிதி நியதிச் சட்டம் (2014)

2.முத்திரை வரி கைமாற்றல் நியதிச் சட்டம் (2014)

3.முத்திரை வரி கைமாற்றல் நியதிச் சட்டம் (2014)

4.வடக்கு மாகாண சுகாதார சேவைகள் நியதிச்சட்டம் இலக்கம் 1/2015

5.வடக்கு மாகாண கல்வி நியதிச்சட்டம் (2015)

6.வடக்கு மாகாண முன் பள்ளி கல்வி நியதிச்சட்டம் (2015)

7.வடக்கு மாகாண பாலகர் பகற்கவனிப்பு நிலைய நியதிச் சட்டம் (2016)

8.வடமாகாண சிறுவர் அபிவிருத்தி நிலைய நியதிச்சட்டம் (2016)

9.வடக்கு மாகாண மாகாண சபை நன்னடத்தைப் பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்கள நியதிச்சட்டம் (2016)

10.வடக்கு மாகாண சுகாதார சேவைகள் (திருத்த) நியதிச் சட்டம் (2016)

11.மாகாண சபையின் நீதிமன்ற குற்றப்பணங்கள் மற்றும் தண்டப்பணங்கள் கைமாற்றுவதற்கான நியதிச்சட்டம் (2017)

12.மாகாண சபையின் கனிப்பொருள் வரி நியதிச்சட்டம் (2017)

**வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்ட ஒதுக்கீட்டு நியதிச் சட்டங்கள் (15)**

1.ஒதுக்கீட்டு நியதிச் சட்டம் (2013)

2.நிதிஒதுக்கீட்டு குறை நிரப்பு நியதிச்சட்டம் (2014)

3.ஒதுக்கீட்டு நியதிச்சட்டம் (2014)

4.ஒதுக்கீட்டு (குறைநிரப்பு ஏற்பாடுகள்) நியதிச்சட்டம் (2015)

5.ஒதுக்கீட்டு (குறைநிரப்பு ஏற்பாடுகள்) நியதிச்சட்டம் (2015)

6.ஒதுக்கீட்டு நியதிச்சட்டம் இலக்கம் 6/2015

7.குறைநிரப்பு ஒதுக்கீட்டு நியதிச்சட்டம் (2016)

8.குறைநிரப்பு ஒதுக்கீட்டு நியதிச்சட்டம் 2016)

9.ஒதுக்கீட்டு நியதிச்சட்டம் (2016)

10.ஒதுக்கீட்டு (குறைநிரப்பு ஏற்பாடுகள்) நியதிச்சட்ட இல 05/2017

11.வடக்கு மாகாண நிதி (திருத்த) நியதிச்சட்டம் (2017)

12.வடக்கு மாகாண குறைநிரப்பு ஒதுக்கீட்டு நியதிச்சட்டம் (2017)

13.வடக்கு மாகாண குறைநிரப்பு ஒதுக்கீட்டு நியதிச்சட்டம் (2017)

14.வடக்கு மாகாண ஒதுக்கீட்டு நியதிச்சட்டம் (2017)

15.வடக்கு மாகாண ஒதுக்கீட்டு நியதிச்சட்டம் (2017)

பேரவைச் செயலகத்தில் பரிசீலனையில் உள்ள நியதிச் சட்டங்கள் (4)

1.வடக்கு மாகாண அடகு பிடிப்போர் நியதிச்சட்டம் (2017)

2.வடக்கு மாகாண கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு ஒதுக்கீட்டு நியதிச்சட்டம் (2017)

3.சுதேச மருத்துவ நியதிச் சட்டம் (2016)

4.வடக்கு மாகாண கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார நியதிச்சட்டம் (2017)

வர்த்தமானியில்பிரசுரிப்பதற்காக அனுப்பப்பட்டுள்ள நியதிச் சட்டங்கள் (1)

1.வடக்கு மாகாண சுற்றுலா அதிகாரசபை நியதிச்சட்டம் (2017)

ஆளுநரின் சம்மதத்திற்கு அனுப்பப்பட்டுள்ள நியதிச் சட்டங்கள் (1)

**1987ம் ஆண்டின் 42ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டத்தின் 14ஆவது சரத்தின்படி (1) மாகாண சபையொன்றில் முடிவுறாதிருக்கும் நியதிச் சட்டமொன்று அத்தகைய சபை அமர்வு நிறுத்தப்பட்டமை காரணமாக காலம் கழிந்து போதலாகாது. (2) மாகாண சபையொன்றில் முடிவுறாதிருக்கும் நியதிச் சட்டமொன்று சபை கலைக்கப்படுவதன் மீது காலம் கழிந்து போதல் வேண்டும்.**

1.வடக்கு மாகாண முதலமைச்சர் நிதிய நியதிச்சட்டம் (2016)

வர்த்தமானி அறிவித்தல் மூலம் இரத்துச்செய்யப்பட்ட நியதிச் சட்டங்கள் (1)

1.வடக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை நியதிச் சட்டம் (2016)

# இணையத்தில் இருந்த தகவல்கள் இற்றைவரைப்படுத்தப்பட்ட (updated) தகவலா என்பது தெரியவில்லை.

குறிப்பு:- நியதிச் சட்டங்கள் காலம் கழிந்துபோதல் -1987ம் ஆண்டின் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டத்தின் 14ஆவது சரத்தின்படி (1) மாகாண சபையொன்றில் முடிவுறாதிருக்கும் நியதிச் சட்டமொன்று அத்தகைய சபை அமர்வு நிறுத்தப்பட்டமை காரணமாக காலம் கழிந்து போதலாகாது. (2) மாகாண சபையொன்றில் முடிவுறாதிருக்கும் நியதிச் சட்டமொன்று சபை கலைக்கப்படுவதன் மீது காலம் கழிந்து போதல் வேண்டும்.

மாகாண சபைகளால் உருவாக்கப்பட்ட நியதிச் சட்டங்கள்

1987 நவம்பர் 14 இல் இலங்கை பாராளுமன்றம் தனது அரசியலமைப்பில் 13ஆவது திருத்தம் மற்றும் மாகாணசபைச் சட்டம் இல. 42 (1987) ஆகியவற்றை அறிவித்தது. 1988 பெப்ரவரி 3 ஆம் நாள் ஒன்பது மாகாணசபைகள் உருவாக்கப்பட்டன. மாகாணசபைகளுக்கான முதலாவது தேர்தல்கள் 1988 ஏப்ரல் 28 ஆம் நாள் வடம்த்திய, வடமேல், சப்ரகமுவ, மற்றும் ஊவா ஆகிய மாகாணங்களுக்கு இடம் பெற்றன. 1988 ஜூன் 2 இல் மத்திய, தெற்கு, மற்றும் மேற்கு மாகாணங்களுக்கு தேர்தல்கள் நடத்தப்பட்டன.

1988 செப்டம்பர் 2 இல் அன்றைய ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்தனா வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை இணைத்து வடக்கு கிழக்கு மாகாண சபை என்ற ஒரு மாகாணசபையாக நிர்வகிக்க உத்தரவு பிறப்பித்தார். இந்த இணைந்த மாகாணசபைக்கான தேர்தல் 1988 நவம்பர் 19 இல் நடத்தப்பட்டது. வடக்கு-கிழக்கு இணைப்பு சட்டவிரோதமானது எனக் கூறி அதனை செல்லுபடியற்றதாக்குவதாக 2006 ஒக்டோபர் 16 இல் உச்சநீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது. இதனை அடுத்து 2007 ஜனவரி 1 இல் வடகிழக்கு மாகாணசபை இரண்டாகப் பிரிக்கப்பட்டது.

கிழக்கு மாகாண சபைக்கு 2008 மே 10 இல் முதலாவது தேர்தல் நடை பெற்றது. ஆனாலும், வட மாகாண சபைக்கு தேர்தல்கள் அறிவிக் கப்படாமல் இருந்து வந்தது. 2009 மே மாதத்தில், ஈழப்போர் முடிவுக்கு வந்ததை அடுத்து, வட ங்களின் எண்ணிக்கை அட்ட வணை-1 இல் காட்டப்பட்டுள்ளது. இக் காலப்பகுதியில் வட மாகாண சபை இருக்கவில்லை. 1988-1989 காலப்பகுதியில் இருந்த வடக்கு- கிழக்கு மாகாண சபையால் உருவாக்கப்பட்ட நியதிச் சட்டங்கள் நடை முறையில் இல்லாததோடு அவை இதில் உள்ளடக்கப்பட வில்லை.

1989-2010 காலப்பகுதியில் மாகாணசபைகளால் பின்வரும் தேவைகளுக்காக இயற்றப்பட்ட நியதிச் சட்டங்களின் எண்ணிக்கையை அட்டவணை-3 காட்டுகிறது. இதில் உள்ளவை அபிவிருத்தி , சுயவேலை வாய்ப்பு, வேலை வாய்ப்பு நிறுவனம், மனித வளம் மற்றும் இயந்திர சாதனம் போன்றவற்றிக்கான அதிகாரசபை உருவாக்க நியதிச்சட்டங்கள். தொழிற்றுறை அபிவிருத்தி, மீன்பிடித்துறை போன்றவற்றிக்கான நியதிச் சட்டங்கள் ஆகும்.

1939 ல் இருந்து 2010 வரை
ஒவ்வொரு மாகாண சபைகளாலும் உருவாக்கப்பட்ட
நியதிச் சட்டங்களின் எண்ணிக்கை

| காலப் பகுதி | சப்பிரகமுவ | மேல் | வடமேல் | மத்திய | வட மத்திய | தென் | கிழக்கு | ஊவா |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1989-1995 | 51 | 28 | 41 | 36 | 35 | 28 | - | 37 |
| 1996-2000 | 7 | 10 | 20 | 6 | 5 | 11 | - | 9 |
| 2001-2005 | 16 | 7 | 21 | -* | 6 | 10 | - | 14 |
| 2006-2010 | 17 | 14 | 14 | -* | 3 | 14 | 4 | 2 |
| மொத்தம் | 91 | 59 | 96 | 42 | 49 | 63 | 4 | 62 |

* தரவு இல்லை

அட்டவணை-2 (1989முதல்-2010 வரை)

| நியதிச் சட்டங்கள் | மாகாணங்கள் | நியதிச் சட்டங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| அவசரகால நிதியம், குறைநிரப்பு நிதியம்,முதல் அமைச்சர் நிதியம்,ஆளுநர் நிதியம், மாகாணசபை அலுவலர்கள் நிதியம், மாகாணசபை பகிரங்க சேவை ஆணைக்குழு உத்தியோகத்தர்கள் மற்றும் வேறு அலுவல்கள் சம்பந்தமான நியதிச் சட்டங்கள். | வடமத்திய | 16 |
| | ஊவா | 36 |
| | தென் | 35 |
| | கிழக்கு | 2 |
| | மேல் | 14 |
| | மத்திய | 20 |
| | வடமேல் | 68 |
| | சப்ரகமுவ | 64 |
| | மொத்தம் | 255 |

**1989-2010 காலப் பகுதியில் மாகாண சபை நிரலில்உள்ள விடயங்கள் சம்பந்தமாக மாகாண சபைகளால் இயற்றப்பட்ட நியதிச் சட்டங்களின் எண்ணிக்கை**

| விடய இலக்கம் | மாகாண நிரலில் உள்ள விடயங்கள் | வட மத்திய | ஊவா | தென் | கிழக்கு | மேல் | மத்திய | வடமேல் | சப்ரகமுவ | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | பொலிஸ் பொதுமக்கள் பாதுகாப்பு | - | - | - | - | - | - | - | - | - |
| 2 | திட்டமிடல் | 1 | - | - | - | - | - | - | - | 1 |
| 3 | கல்வி | 3 | 2 | 2 | 1 | 2 | 1 | 1 | 3 | 15 |
| 4 | உள்ளூராட்சி மன்றம் | 3 | 2 | 3 | - | 5 | 4 | 3 | 3 | 23 |
| 5 | வீடு நிர்மாணித்தல் கட்டமைப்பு | 1 | - | - | - | 1 | 1 | - | 1 | 4 |
| 6 | வீதி | 2 | 1 | 1 | - | 2 | - | 1 | - | 7 |
| 7 | சமூகசேவைகள்,புனருத்தாரணம் | 1 | 2 | 5 | - | 2 | - | - | 2 | 12 |
| 8 | பயணிகள் போக்குவரத்து | 3 | 4 | 3 | 1 | 9 | 3 | 2 | 4 | 29 |
| 9 | விவசாயம் கமத்தொழில் சேவைகள் | 2 | - | - | - | - | 2 | - | - | 4 |
| 10 | கிராமிய அபிவிருத்தி | - | 1 | 1 | - | 1 | - | 1 | 1 | 5 |
| 11 | சுகாதாரம் | 1 | - | 2 | - | 1 | 1 | - | - | 5 |
| 12 | சுதேச மருத்துவம் | - | - | - | - | - | 1 | - | - | 1 |
| 13 | கூட்டுறவு | 3 | 2 | 1 | - | 2 | 5 | 4 | 2 | 19 |
| 14 | காணி | 2 | - | - | - | 1 | - | - | - | 3 |
| 15 | நீர்ப்பாசனம் | 1 | - | - | - | - | - | 1 | - | 2 |
| 16 | கால்நடை வளர்ப்பு | - | - | - | - | - | - | 1 | - | 1 |
| 17 | விவசாய வணிக மற்றும் வர்த்தகம் | - | 1 | - | - | - | - | - | - | 1 |
| 18 | நூலகம் நூதனசாலை அலுவல்கள் | 1 | 1 | 1 | - | 1 | 1 | - | - | 5 |
| 19 | விளையாட்டு | - | 1 | 1 | - | 2 | 1 | 1 | 1 | 7 |
| 20 | மின்சாரம் | - | - | 1 | - | 2 | - | - | - | 3 |
| 21 | வருமானம் | 6 | 2 | 3 | - | 6 | 2 | 3 | 7 | 29 |
| 22 | சூழல் பாதுகாப்பு | - | - | - | - | 4 | - | 2 | - | 0 |
| | மொத்தம் | 30 | 19 | 24 | 2 | 41 | 22 | 20 | 24 | 182 |

தொடரும்...

# வெளிநாட்டுத் தூதரகங்கள் நாட்டின் இறையாண்மையில் தலையிடுவது பாரிய அச்சுறுத்தல்

## ஜனாதிபதி வேட்பாளர் துமிந்த எதிர்ப்பு



(கொழும்பு)

வெளிநாட்டுத் தூதரகங்கள் நாட்டின் உள்ளக இறையாண்மையில் தலையிடுவது பாரிய அச்சுறுத்தலாகும். ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸ மற்றும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ஷ ஆகிய இருவரில் எவர் ஆட்சிக்கு வந்தாலும் நாட்டுக்கு எதிரான வெளிநாட்டு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்படும்.

ஆகவே தேர்தலுக்கு பின்னரான நிலையைக் கருத்திற்கொண்டு மக்கள் சிறந்த தீர்மானத்தை எடுக்க வேண்டும் என்று முன்னிலை சோசலிசக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் துமிந்த நாகமுவ தெரிவித்தார்.

முன்னிலை சோசலிசக் கட்சியின் மூன்றாவது மாநாடு நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை சுகததாச உள்ளக விளையாட்டரங்கில் இடம்பெற்றது.

இந்த மாநாட்டில் உரையாற்றிய அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஏகாதிபத்திய, புதிய தாராளமய திட்டத்திற்கு எதிராக சோசலிசத்திற்காக புரட்சிகர வேலைத்திட்டம் மற்றும் தீர்க்கமான தலைமைத்துவம் என்னும் தொனிப்பொருளின் கீழ் முன்னிலை சோசலிசக் கட்சியின் மூன்றாவது மாநாட்டை நடத்துகின்றோம்.

மக்கள் விடுதலை முன்னணியிலிருந்து விலகிய 8 வருட காலங்களில் நாம் பல அச்சுறுத்தல்கள், துன்புறுத்தல்களுக்கு முகங்கொடுத்துள்ளோம். கடந்த 2012 இல் இதேபோன்றதொரு மாநாட்டை நடத்திக்கொண்டிருந்த போது எமது கட்சியைச் சேர்ந்த லலித், குகனை உரையாற்றுவதற்காக அழைத்தபோது அவர்கள் இங்கு இல்லை. அவர்கள் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டனர். மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக்காலத்தில் மேலும் பல இன்னல்களுக்கு முகங்கொடுக்க நேரிட்டது.

இவை ஒருபுறம் இருக்க மக்கள் விடுதலை முன்னணியினரும் எம்மை அச்சுறுத்துபவர்களுடன் இணைந்தே செயற்பட்டனர். இவ்வாறு கடினமான பாதைகளைக் கடந்து வந்த நாம் தற்போது இனவாதத்திற்கு எதிராக போராட வேண்டியவர்களாகியுள்ளோம்.

இதனிடையே கட்சியை எவ்வாறு முன்னோக்கிக்கொண்டு செல்வது என்ற கேள்வி எழுந்தது. இவ்வாறான பாதைகளை கடந்து வந்த நாம் தற்போது புரட்சிகர வேலைத்திட்டம், தீரமிக்க தலைமைத்துவம் என்னும் தொனிப்பொருளின் கீழ் மூன்றாவது மாநாட்டில் ஒன்றுகூடியுள்ளோம்.

ஜனநாயகம் என்பதன் உண்மைத்தன்மையை அறிந்து கொண்டுள்ளமையால் தான் நாம் திறந்த பொருளாதாரக் கொள்கைக்கு எதிராக முன்னோக்கிச் செல்ல தீர்மானித்துள்ளோம். அந்தக் கொள்கையின் காரணமாக தொழிலாளர் வர்க்கத்தினர் ஒடுக்கப்படும் நிலை ஏற்பட்டுள்ளது. வேலை செய்யும் வர்க்கத்தினரின் பிரச்சினைகளைத் தீர்த்து அவர்களை ஒன்றிணைக்கக்கூடிய தலைமைத்துவம் எம்மிடமுள்ளது.

கடந்த காலங்களில் ஆசிரியர்களின் பிரச்சினை, மாணவர்களின் பிரச்சினை, தொழிலாளர்களின் பிரச்சினை என அனைத்துத் தரப்பினரதும் பிரச்சினைகளின் போதும் அவர்களுக்காக குரல் கொடுத்தோம். எமது கட்சி கடந்து வந்த பாதைகளில் மேலும் முன்னேற்றம் காணவேண்டும்.

அதற்காக புரட்சிகர வேலைத் திட்டங்களை வகுத்துள்ளோம். இவை தேர்தல் காலங்களில் வெறுமனே அளிக்கப்படும் வாக்குறுதிச்சீட்டுக்கள் அல்ல, மாறாக எதிர்காலத்தில் நாம் முன்னோக்கிச் செல்வதற்காக செய்ய வேண்டிய வேலைத்திட்டங்களாகும்.

எமது நாட்டின் இறைமையை தீர்மானிக்கும் அதிகாரம் தற்போது வெளிநாட்டு தூதரகங்களிடம் காணப்படும் நிலை ஏற்பட்டுள்ளது. சோபா, எட்கா ஆகிய ஒப்பந்தங்களை செய்து கொள்வதன் ஊடாக நாட்டின் வளங்கள் சுரண்டப்படும் நிலை ஏற்பட்டுள்ளது. ஜனநாயகம் எனக் கூறிக்கொண்டு தொழிலாளர் வர்க்கத்தை ஒடுக்கும் வகையிலான செயற்பாடுகளை ஐக்கிய தேசியக் கட்சி மேற்கொண்டு வருகின்றது.

அதேபோல் கோத்தபாயவின் பக்கம் உள்ளவர்கள் கடந்த காலங்களில் மிலேச்சத்தனமான செயற்பாடுகளில் ஈடுபட்டவர்கள் ஆவர். மக்களை இனவாதத்தினால் பிரிக்கும் செயற்பாடுகளில் ஈடுபட்டனர். தற்போது வாக்குகளுக்காக மக்களை ஏமாற்றும் வண்ணம் செயற்பட்டு வருகின்றனர். மக்களின் உரிமையுடன் விளையாடுகின்றனர்.

நாட்டுக்கொரு பிரச்சினை வரும் போது தமிழர், சிங்களவர் என்று பாராது ஒன்றிணைவதற்கு ஏன் நாம் தயாராகவில்லை? தற்போது அமெரிக்க இராணுவத்தினர் நாட்டுக்கு வருவதற்கு ஏதுவான சோபா ஒப்பந்தத்தை தேர்தலின் பின்னர் கைச்சாத்திடலாம் என நிறுத்தி வைத்துள்ளனர்.


அவ்வாறெனின் எவர் ஆட்சிக்கு வந்தாலும் அந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்படும்` என்பதே அதன் உண்மைத் தன்மையாகும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# உயிர்களைக் காவு வாங்கிய ரணிலா? பாதுகாப்பைப்பலப்படுத்திய மகிந்தவா?

## மக்கள் தீர்மானிக்க வேண்டும்-தினேஷ்

(கடவத்த)

**தேசிய பாதுகாப்பை அலட்சியப்படுத்தி 250 இற்கும் அதிகமான உயிர்களைக் காவு வாங்கிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் வேண்டுமா? அல்லது 30 வருட கால யுத்தத்தை முடிவிற்குக் கொண்டு வந்து தேசிய பாதுகாப்பை பலப்படுத்திய எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷவின் அரசாங்கம் வேண்டுமா? என்பதை நாட்டு மக்கள் தீர்மானிக்க வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.**



கடவத்த நகரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஏப்ரல் 21 உயிர்த்த ஞாயிறு தின குண்டுத்தாக்குதலை ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கம் தற்போது முழுமையாக மறந்து விட்டது.

தொடர் குண்டுத்தாக்குதல் கத்தோலிக்க தேவாலயங்களில் நடத்தப்படும் என்று இந்திய புலனாய்வுப் பிரிவு தொடர்ந்து இலங்கை அரசாங்கத்திற்கு அறிவித்தும் அது குறித்து எவ்வித நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படவில்லை.

அரசாங்கத்தின் அலட்சியப் போக்கினால் தான் 250 இற்கும் மேலான உயிர்கள் காவு கொள்ளப்பட்டன. இந்த உயிரிழப்புக்கள் அரசாங்கத்திற்கு ஒரு சாதாரண விடயமாகவே காணப்படுகின்றது. குண்டுத்தாக்குதலை தொடர்ந்து எழுந்த பல கேள்விகளுக்கு இதுவரையில் விடை கிடைக்கப் பெறவில்லை.

தேசிய பாதுகாப்பைப் பலப்படுத்தி மக்களின் வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றுவதற்காகவே மக்களால் அரசாங்கம் தோற்றுவிக்கப்படுகின்றது.

இவ்விரண்டு விடயங்களிலும் ஐக்கிய தேசியத் கட்சியின் தலைவர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் தோல்வியடைந்தது.

எனவே மீண்டும் அதிகாரத்தை கைப்பற்றுவதற்கு முனைவது மக்களுக்கு இழைக்கும் பாரிய துரோகமாகும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறு

யாழ்/உடுப்பிட்டி சைவப் பிரகாச வித்தியாசாலை

சு.ஆரூஜன்-164, சி.கனுசியா-159.

## சாவகச்சேரி பிரதேச சபையினர் ஆதனவரி அறவிடுவதில் அசமந்தம்

### உறுப்பினர் குற்றச்சாட்டு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பிரதேச சபையினர் ஆதனவரி அறவிடுவதில் அசமந்தப்போக்கைக் காட்டி வருவதாக சாவகச்சேரி பிரதேச சபையின் சுதந்திரக்கட்சி உறுப்பினர் தி.தங்கவேலு குற்றம்சாட்டினார். பிரதேச சபையில் அண்மையில் இடம்பெற்ற 2020 ஆம் ஆண்டிற்கான பாதீடு தயாரிப்பு தொடர்பான கலந்துரையாடலின் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், பிரதேச சபையின் வருமானத்தை இழக்க அனுமதிக்க முடியாது. பொதுமக்களை நடமாடும் சேவைகள் ஊடாக வரியைச்செலுத்தப் பழக்கப்படுத்த வேண்டும். வரியின் பெறுமதி குறைவாக இருந்தாலும் மக்களை வரியைச் செலுத்தக் கட்டாயப்படுத்த வேண்டும். பட்ஜெட்டின் அடிப்படையில் ஆதனவரி அறவிடுவதற்கு பூரண ஒத்துழைப்பை சபை உறுப்பினர்களாகிய நாம் வழங்குவோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5-30)

## கதிரைகள் கையளிப்பு



(சாவகச்சேரி)

பாராளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தாவின் பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து மட்டுவில் கிழக்கு மோகனதாஸ் சனசமூக நிலையத்திற்கு கடந்த வெள்ளிக்கிழமை ஒரு தொகுதி தளபாடங்கள் வழங்கப்பட்டன.

தளபாடங்களை சாவகச்சேரி பிரதேசசபை உறுப்பினர் வை.ஜெகதாஸ் சனசமூக நிலையத் தலைவரிடம் கையளித்தார். (இ-30)


பழைமை வாய்ந்த

ஆதி சக்தி வாய்ந்த மலையாள மந்திரம்



- ஆண், பெண் வசியம் (கவரும் வசியம், ராஜ வசியம், பிறப்பு வசியம்)
- பிரிந்து சென்றவர்களை மூன்று பொழுதில் சேரும்படி செய்ய முடியும்
- கணவன்-மனைவிக்குள் பிரச்சினையா?
- காணி விற்பனையில் பிரச்சினையா?
- வியாபார முன்னேற்றம்
- வீட்டில் ஒற்றுமை உண்டாக
- பெற்றோர் ஆசீர்வாதம் பெற

இரகசியம் பேணப்படும்

(C-7909)

ஒருமுறை தொடர்பு கொண்டு பாருங்கள் வெற்றி நிச்சயம் சகல காரியங்களும் வசியமுறைப்படி செய்து தரப்படும். (பின் விளைவுகள் எதுவும் ஏற்படாது) மூன்று பொழுதில் பலன்.

(உங்களால் நேரில் வர முடியாவிட்டால் பதிவுத் தபால் மூலம் செய்து கொள்ளலாம்)


ரெங்கசாமி

கண்டி, அம்பத்தன்ன -077 112 3471

Viber:076 466 4153.

வெளிநாட்டில் உள்ளவர்களும் தொடர்பு கொள்ளலாம்

# எல்பிட்டிய தேர்தல் முடிவை வைத்து பகல் கனவு காணும் மகிந்த அணி



(கல்முனை)

எல்பிட்டிய பிரதேச சபைத் தேர்தல்முடிவைவைத்துக்கொண்டு ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற முடியும் என மொட்டுக் கட்சியினர் வெறும் பகல் கனவு காண்கின்றனர். ஒரு பிரதேச சபைத் தேர்தல் முடிவை வைத்து ஜனாதிபதித் தேர்தலை எவ்வாறு ஒப்பீடு செய்ய முடியும்.

எல்பிட்டிய பிரதேச சபைத் தேர்தல் முடிவானது எந்தவொரு வகையிலும் ஜனாதிபதித் தேர்தலில் சிறியளவிலான ஓர் தாக்கத்தைக்கூட ஏற்படுத்தாது என கிழக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் ஆரிப் சம்சுடீன் தெரிவித்தார்.

கிழக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினரால் ஏற்பாடு செய்யப்பட்ட ஊடக சந்திப்பு நேற்று முன்தினம் கல்முனையில் அமைந்துள்ள அவரது மக்கள் பணிமனையில் இடம்பெற்றது. இதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# காலநிலை மாற்றம் காரணமாக அபிவிருத்திப் பணிகள் தாமதம்

(சாவகச்சேரி)

தற்போது ஏற்பட்டுள்ள காலநிலை மாற்றம் காரணமாக பிரதேச அபிவிருத்திப் பணிகளை முன்னெடுப்பதில் தடங்கல் ஏற்பட்டிருப்பதாக சாவகச்சேரி பிரதேசசபைத் தவிசாளர் க.வாமதேவன் தெரிவித்தார். அண்மையில் சாவகச்சேரி பிரதேச சபையில் இடம்பெற்ற விசேட அமர்வின் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

தொடர் மழையுடனான காலநிலை நிலவுவதனால் வீதி விளக்குகள் பொருத்தும் பணிகளில் தடங்கல் ஏற்பட்டுள்ளது. கால சூழ்நிலை மற்றும் நிர்வாக ரீதியான தாமதங்களால் உரிய காலங்களில் பணிகளைச் செய்து முடிக்க முடியாதுள்ளது.

சபை நிதி வேலைகளில் ஒவ்வொரு உறுப்பினரும் கவனமாக இருக்க வேண்டும். சபை நிதி வேலைகளைச் செய்வதற்கு டிசெம்பர் 31 வரை கால அவகாசம் உள்ள போதிலும் காலநிலை மாற்றங்களால் வேலைகளைச் செய்ய முடியாத நிலை ஏற்படும். ஒவ்வொரு உறுப்பினரும் அவரவர் வட்டார சபை நிதி வேலைகளைக் கண்காணிக்க வேண்டும். கம்பரெலிய நிதி உள்ளிட்ட வேறு வேறு அபிவிருத்தி திட்டங்களையும் நடைமுறைப்படுத்துவதனால் சபை நிதி வேலைகளில் தேக்க நிலை காணப்படுகிறது. அத்துடன் கம்பரெலிய வேலைத் திட்டங்களை இம்மாத இறுதிக்குள் முடிக்க வேண்டிய கட்டாயத்தில் இருப்பதாகவும் மேலும் அவர் மேலும் தெரிவித்தார். (5-30)

# சனசமூக நிலையத்தின் வேலித் தூண்கள் உடைப்பு


## தடுத்த உறுப்பினர் மீது தாக்குதல் நாவற்குழியில் முறுகல் நிலை

(சாவகச்சேரி)

நாவற்குழிச் சந்தியிலுள்ள சனசமூக நிலையத்தின் வேலித் தூண்களை புகையிரத நிலைய ஊழியர் அடித்து நொறுக்கிக் கொண்டிருந்ததை கண்ட சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர் தன்னை அறிமுகப்படுத்தி இது சனசமூக நிலையத்தின் வேலித் தூண்கள் ஏன் தூணை உடைக்கிறீர்கள் என்று கேட்டபோது அந்த ஊழியர் புகையிரத வளாகத்திற்குள் நிற்கிறது. அதுதான் உடைக்கின்றோம் என்று கூறினார். இருப்பினும் தூண்களை உடைக்க வேண்டாம் என்று தடுத்த பிரதேச சபை உறுப்பினரை குறித்த ஊழியர் தாக்கினார்.

இதனால் அவ் இடத்தில் முறுகல் நிலை ஏற்பட்டது.

சனசமூக நிலைய நிர்வாகத்தினருக்கு அறிவிக்காமல் வேலித்தூண்களை புகையிரத வளாகத்திற்குள் நிற்கிறது என்று கூறி உடைத்துள்ளனர். அதை தடுக்கச் சென்ற மக்கள் பிரதிநிதியான சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர் இ.யோகேஸ்வரன் தாக்கப்பட்டார். இது மிகவும் கண்டிக்கத்தக்க செயல் என



அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

உடனடியாக சாவகச்சேரி பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது.

இதையடுத்து அவ்விடத்திற்கு விரைந்த பொலிஸார் குழப்ப நிலைகளைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். (இ-114)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1858

### சுமதி



நீ இருக்க ஒரு
கருவறை
இருந்தது
என் வயிற்றில்...
நான் இருக்க
ஒரு இருட்டறை
கூடவா இல்லை
உன் வீட்டில்

### சுபா




### வரதன்

நம்ம டீச்சருக்கு என்ன ஆச்சு? ஏன் கேட்கிறே...?



திருக்குறளை போர்டிலே எழுதிட்டு அவங்களே இதை எழுதினது யாரென்னு கேட்கிறாங்க!!

### குணா

உப்பு சைவமா? அசைவமா? என்று மிஸ் கேட்டாங்கப்பா!! நீ என்னடா சொன்னாய்!!



சாம்பாரில போட்டால் சைவம். கறிக்குழம்பில போட்டால் அசைவம் என்று சொல்லேனப்பா...

### தேவன்

எங்க வீட்டுக்கு திருடன் வந்து நகை, பணம், ரி.வி.எல்லாம் தூக்கிட்டு போயிட்டான்!!



நான் அவ்வளவு சொல்லியும் என் ஸ்கூல் பாக் எடுக்க மறந்திட்டான் பாவி....

### றொசானா

யாருக்கும்மா அர்ச்சனை உங்க வீட்டுக்காரருக்கா? சாமிக்கா?



சாமிக்கே பண்ணிடுங்க... அவருக்கு நான் வீட்டில பண்ணிக்கிறேன்...

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

### "தலைவர்களை மக்கள் பின்பற்ற மாட்டார்கள்"

# இ.தொ.காவின் தீர்மானம் தாக்கத்தை ஏற்படுத்தாது

## நவீன் சமாளிப்பு



(கொத்மலை)

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், பொதுஜன பெரமுனவுடன் இணைந்துள்ளமையானது, எங்களுக்கு ஒருபோதும் பாதிப்பு கிடையாதென அமைச்சர் நவீன் திஸாநாயக்க தெரிவித்தார்.

நுவரெலியா- கொத்மலையில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். "மலையகத்திலுள்ள மக்கள் அனைவரும் சஜித்திற்கே வாக்களிப்பதாக முடிவு செய்துள்ளனர்.

அதேபோன்று ஏனைய பிரதேச மக்களும் சஜித் ஜனாதிபதியாக வரவேண்டும் என்ற எண்ணத்திலேயே உள்ளனர்.

ஆகவே, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் ஆறுமுகன் தொண்டமான், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கு வாக்களிக்குமாறு கூறினாலும் மக்கள் சஜித்தைத்தான் ஜனாதிபதியாக தெரிவு செய்வார்கள்.

எனவே, தலைவர்கள் சொல்வதை மக்கள் ஒருபோதும் பின்பற்ற மாட்டார்கள்" என நவீன் மேலும் தெரிவித்தார். (இ-7)




யாழ்.மீசாலை விக்கினேஸ்வர மகா வித்தியாலயத்தின் ஆசிரியர் தின விழா அதிபர் சு.சிவானந்தன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. இந் நிகழ்வில், முதன்மை விருந்தினராக தென்மராட்சி கல்வி வலயத்தின் முன்னாள் கணித மூலவள நிலைய இணைப்பாளர் சி.பத்மநாதன், சிறப்பு விருந்தினர்களாக, தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழக தொலைக்கல்விப்பிரிவு சிரேஷ்ட விரிவுரையாளரும், பாடசாலையின் பழைய மாணவர் சங்க செயலாளருமான க.ரஜனிகாந்தன், பிரான்ஸ் - ஆசிரியர் பழைய மாணவர் சங்க உறுப்பினரான சு.சுதர்சன், பழைய மாணவர் சங்க ஆலோசகர் மா.மகேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர். (படங்கள்:- சுபேசன் கொடிகாம செய்தியாளர்)

# சமூகங்களுக்கிடையில் தீவிரமான பிளவு

## தேசிய சமாதானப் பேரவை அதிருப்தி

(கொழும்பு)


நாட்டில் வாழும் சமூகங்களுக்கிடையில் தற்போது தீவிரமான பிளவு நிலவுகிறது, அதை அப்படியே வளரவிட்டால் நாட்டின் பொருளாதாரத்திற்கும் சமூக அரசியல் செயல்முறைகளுக்கும் பெரும் அடியாக இருக்கும் என இலங்கை தேசிய சமாதானப் பேரவையின் கருத்திட்ட முகாமையாளர் சமன் செனவிரட்ன தெரிவித்தார்.

மட்டக்களப்பில் முன்னெடுக்கப்பட்டு வரும் "இனங்களுக்கிடையில் இணக்கப்பாட்டின் மூலம் நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புதல்" எனும் செயற்றிட்டம் சம்பந்தமாக நேற்றுத் திங்கட்கிழமை கருத்து வெளியிட்ட அவர் மேலும் தெரிவிக்கையில்,

இன விரிசல் என்பது நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும் அமைதிக்கும் பெருத்த சவாலாக இருப்பதனால் இந்த விடயம் குறித்து உடன் செயற்பாட்டில் இறங்குமாறு செயற்பாட்டாளர்களுக்கு நாம் அறைகூவல் விடுக்கின்றோம்.

இன முரண்பாட்டுச் சூழ்நிலையைக் கட்டுப்படுத்தும் பொறுப்பு அரசாங்கத்திற்கு உள்ளதோடு சிவில் சமூக அமைப்புக்களும் இது தொடர்பாக தலையிட முடியும். அதன்படி, இலங்கை தேசிய சமாதானப் பேரவையால் இலங்கை முழுவதும் உருவாக்கப்பட்ட மாவட்ட சர்வமத செயற்பாட்டுக் குழுக்கள் இவ் வேலைத்திட்டத்தின் பிரதான செயற்பாட்டுக் குழுவாக காணப்படுகின்றனர்.

மேலும் இனங்களுக்கிடையில் இணக்கப்பாட்டை ஏற்படுத்துவதில் ஊடகங்களின் வகிபாகம் பெரும் பங்கு வகிக்கின்றன. இதனைப் பொறுப்பு வாய்ந்த ஊடக நிறுவனங்களும் ஊடகவியலாளர்களும் தமது பங்கையும் பணியையும் வரலாற்றுச் சிறப்பு மிக்கதாய் நிறைவேற்ற வேண்டுமென இலங்கை தேசிய சமாதானப் பேரவை எதிர்பார்க்கின்றது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)



யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் 1981 ஆம் ஆண்டில் தரம் 6 வகுப்புக்கு அனுமதி பெற்றவர்கள் முதல் 1988 ஆம் ஆண்டு வரை உயர்தரம் கற்ற மாணவர்களின் ஒன்றுகூடல் அண்மையில் மலேசியா நாட்டின் லங்காவி தீவின் தனியார் விடுதியொன்றில் 4 நாட்கள் நடந்தது. இலங்கை உட்பட உலகின் பல நாடுகளிலிருந்தும் பழைய மாணவர்கள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# செய்தித்துளிகள்

## தெகிவளை மேம்பாலத்தின் ஊடாக மோட்டார் சைக்கிள் பயணிக்கத்தடை

(தெகிவளை)

தெகிவளை மேம்பாலத்தின் ஊடாக மோட்டார் சைக்கிளில் பயணிப்பதற்குத் தடை விதிக்கப்பட்டது.

அதிகப்படியான விபத்துக்கள் ஏற்படும் காரணத்தால் கல்கிஸை வீதிப் பாதுகாப்புக் குழு மற்றும் இரத்மலானை வீதி அபிவிருத்தி அதிகார சபையால் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது. கடந்த 10 ஆம் திகதி முதல் இந்தத் தடை அமுல்படுத்தப்பட்டது. (இ-7)

## கால்வாயில் வீழ்ந்த சிறுமி பலி!

(வெலிகந்த)

பொலநறுவை-வெலிகந்த பகுதியிலுள்ள கால்வாயில் வீழ்ந்து 12 வயது சிறுமி பரிதாபமாக உயிரிழந்தாள்.

குறித்த சிறுமி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்ததாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்தது.

உறவினரின் வீட்டுக்கு சென்றிருந்த வேளையிலேயே குறித்த சிறுமி நீரில் மூழ்கி உயிரிழந்தாள். அம்பலாங்கொட-பெரகம பிரதேசத்தைச் சேர்ந்த சிறுமியே இவ்வாறு உயிரிழந்தாள். (இ-7)

## கோத்தபாயவுக்கு ஆதரவு வியாழேந்திரன் அறிவிப்பு



(ஏறாவூர்)

நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.வியாழேந்திரன் தலைமையிலான முற்போக்கு தமிழர் அமைப்பு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ஷவுக்கு ஆதரவளிப்பதாக அறிவித்தது.

எதிர்வரும் நவம்பர் மாதம் 16 ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் இடம்பெறவுள்ளது. கட்சிகளின் வேட்பாளர்கள் அறிவிக்கப்பட்டு வேட்புமனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் ஜனாதிபதி வேட்பாளர்கள் தமது பிரசாரங்களை முன்னெடுத்து வருகின்றனர். அத்தோடு வேட்பாளர்களுக்கான ஆதரவையும் ஒவ்வொரு கட்சியினரும் அறிவித்து வருகின்றனர்.

அதற்கமைய ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் உள்ளிட்ட சில கட்சிகள் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ஷவுக்கு ஆதரவளிப்பதாக அறிவித்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)


## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 100 | 100 | 100 |
| உருளைக்கிழங்கு | 140 | 120 | 110 | 120 |
| பச்சைமிளகாய் | 260 | 200 | 240 | 300 |
| தக்காளி | 200 | 140 | 140 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 100 | 100 | 120 | 80 |
| கோவா | 140 | 150 | 120 | 160 |
| கரட் | 120 | 140 | 120 | 160 |
| பூசணி | 100 | 80 | 100 | 100 |
| புடோல் | 160 | 180 | 120 | 140 |
| வாழைக்காய் | 100 | 120 | 80 | 120 |
| சின்ன வெங்காயம் | 120 | 220 | 200 | 240 |
| பெரிய வெங்காயம் | 240 | 260 | 200 | 240 |
| பாகற்காய் | 260 | 450 | 280 | 300 |
| வெண்டிக்காய் | 80 | 100 | 90 | 160 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 | 100 | 120 |
| பயற்றங்காய் | 160 | 200 | 150 | 160 |
| லீக்ஸ் | 120 | 100 | 120 | 160 |
| பீற்றூட் | 100 | 100 | 90 | 100 |
| கறிமிளகாய் | 240 | 180 | 180 | 200 |
| முருங்கைக்காய் | 200 | 120 | 160 | 200 |
| போஞ்சி | 240 | 180 | 180 | 240 |
| கத்தரிதம்புள்ள | 60 | 60 | — | 80 |
| கீரை -1 பிடி | 50 | 40 | 40 | 40 |
| தேசிக்காய் | 300 | 350 | 280 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 45 | 28-40 | 30-50 |
| இராசவள்ளி | 300 | — | 400 | — |
| வெங்காயப்பூ | 300 | 180 | — | — |
| முள்ளங்கி | 80 | 80 | — | 100 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 40 | 40 |
| வல்லாரை | 20 | 40 | 20 | 20 |
| ஈரப்பலா | 80 | 100 | 60 | 80 |




## வாசிப்பு மாதம் ஒக்டோபர் - 2019

# சிங்கத்தை ஏமாற்றிய சிறுநரி



சிங்கத்தின் காலில் தைத்த முள்ளை எடுப்பதாகத் தந்திரம் செய்த சிறுநரி, அதை ஓங்கி உதைத்தது மட்டுமில்லாமல் ஏமாற்றிவிட்டது.

ஒரு காட்டில் ஒரு சிங்கம்வசித்துவந்தது.தன்னை எதிர்க்க எந்த மிருகமும் அக்காட்டில் இல்லை என்னும் செருக்கு அதற்கு இருந்தது.

ஒருநாள் ராஜநடை போட்ட வண்ணம் வேட்டைக்குப் புறப்பட்டது.

சிறிது தூரம் நடந்ததும் அதன் காலில் ஒரு முள் குத்திவிட்டது! அதற்கு வலி தாங்க முடியவில்லை. அதே இடத்தில் உட்கார்ந்துவிட்டது.

அப்போது அந்தப் பக்கமாக ஒரு முயல் ஓடிவந்தது. அதைப் பார்த்த சிங்கம் “அடே முயல் பயலே. இங்கு வா என் பாதத்தில் ஒரு முள் குத்திவிட்டது. அதை எடுத்து விடு'' என்று அதட்டியது.

ஆனால் முயல் “தன்னைச் சாப்பிடுவதற்குச் சிங்கம் செய்யும் தந்திரம்'' என்று எண்ணி வேகமாக ஓடி மறைந்தது.

சிங்கத்தால் ஒன்றும் செய்யமுடியவில்லை. அதற்கு வலியும் குறையவில்லை.

சற்று நேரத்தில் ஒரு ஓநாய் ஓடிவந்தது. அதனிடமும் முள்ளை எடுத்து விடுமாறு வேண்டிக்கொண்டது. ஓநாயும் பயந்து ஓடி விட்டது.

மூன்றாவது ஒரு சிறு நரி வந்தது. அந்நரியிடம் சிங்கம் கெஞ்சியது. தன் காலில் உள்ள முள்ளை எடுத்துவிட்டால் நன்றி செலுத்துவதாகக் கூறியது.

நரி ''சிங்கராஜா உன் முள்ளை எடுக்க ஏற்பாடு செய்கிறேன். ஆனால் அதற்கு நீ நான் சொல்வதைச் செய்ய வேண்டும்'' என்றது.

''சரி நீ என்ன சொன்னாலும் அதன்படி செய்கிறேன். என்ன செய்ய வேண்டும்?''

“நீ அந்தப்பக்கம் பார்த்தபடி நிற்க வேண்டும்''

''நான் உன் பின்புறத்தில் இரண்டு முறை உதை கொடுப்பேன். அதை நீ பொறுத்துக்கொள்ள வேண்டும்''

சிறு நரிதானே அப்படி என்ன உதைத்து விடப் போகிறது என்று சிங்கமும் திரும்பி நின்றது.

நரி ஓடி வந்து இரு பின்னங்கால்களாலும் ஒரு உதை விட்டது.

சிங்கம் பொறுத்துக் கொண்டது.

மறுமுறையும் அதைப் போலவே தன் பலம் முழுவதையும் சேர்த்து உதைத்தது!

சிங்கத்தின் பொறி கலங்கிவிட்டது!

ஆயினும் வலியைப் பொறுத்துக்கொண்டது. முள்ளை எடுத்துவிடும்படி கேட்டது.

நரி ''முள்ளை எடுக்கும் திறமை எனக்கில்லை. என் வளர்ப்பு மகன் ஒருவன் இருக்கிறான். அவனை அனுப்பி வைக்கிறேன். அவன் சாமர்த்தியமாக முள்ளை எடுத்துவிடுவான்'' என்று சொல்லியபடி ஓடி விட்டது.

சிறிது நேரத்தில் ஒரு முள்ளம்பன்றி வந்தது. அது தன் முட்களை சிலிர்த்துக்கொண்டு நின்றது. சிங்கம் அதைப் பார்த்தது.

ஒரு முள் குத்திவிட்டதால் நொந்துபோய் இருக்கிறேன். இத்தனை முட்களா? ''போதுமடாசாமி'' என்று பயந்து தான் ஏமாற்றப்பட்டதை எண்ணி வெட்கமடைந்தது. முள்ளம் பன்றியும் ஓடி ஒளிந்தது!

## சிறுவர் நாம் வேண்டுகின்றோம்



பெற்றவரே ஆசானே
உற்றவரே உறவினரே
இளமையில் கல்வியது
சிலையில் எழுத்தென்று

ஒளவை சொன்ன வழியதனை
மறவாமல் கடைப்பிடித்து
நற்கல்வி எமையாள
நல்லறிவு வழிகாட்ட

நற்பண்புடனே நாம் வாழ
நல்வழி காட்டுவீர்
இன்றைய சிறார் நாம்
நாளைய தலைவர் என்று

அன்றுதொட்டு இருக்கின்ற
மரபதனை நாம் அறிவோம்
கல்வியோடு நின்றிடாமல்
பல்கலைகள் நாம் கற்று

வீறுகண்ட நடையுடனே
பெயரோடும் புகழோடும்
தலைநிமிர்ந்து நாம் வாழ
தோள் கொடுத்து நின்றிடுவீர்

வேகமாய் சுழலுகின்ற
இயந்திர யுகத்திலே
விவேகமாய் நாம் செயற்பட
வேண்டும் வழி செய்திடுவீர்

சிறுவர் துஷ்பிரயோகம் எனும்
வீண் வார்த்தை வேண்டாமே
சுதந்திரமாய் நாம் திரியும்
வரம் வேண்டும் இனி நமக்கு

உ.ஆர்த்திகா, 4பி, யா/கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை.

## அசைந்தாடு



அசைந்தா டம்மா அசைந்தாடு
ஆசைக் கிளியே அசைந்தாடு
இசையோ டொன்றாய் அசைந்தாடு
ஈரக் குலையே அசைந்தாடு

உதய நிலவே அசைந்தாடு
ஊதும் குழலே அசைந்தாடு
எழிலாய் வந்து அசைந்தாடு
ஏற்றத் தோடு அசைந்தாடு

ஐயம் விட்டு அசைந்தாடு
ஒழுக்கம் பேணி அசைந்தாடு
ஓவிய நூலே அசைந்தாடு
ஒளவிய மின்றி அசைந்தாடு

## Little Poll Parrot

Little Poll parrot
sat in a garret
Eating toast and tea!

A little brown mouse
Jumped into his house,
And stole it all away.

N.Sasmeka, Grade 2B,
J/Kokuvil hindu primary school

குறை யாருடையதாக இருந்தாலும் பொறுப்பு நம்முடையது.

– ஸ்ரீ அரவிந்தர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## ஒற்றுமைப்பட்டமை பெரிய விடயம்

தமிழ்த் தேசியப் பரப்பில் பயணிக்கும் தமிழ் அரசியல் கட்சிகள் ஒற்றுமைப்பட்டு ஜனாதிபதித். தேர்தல் தொடர்பில் ஆரய்ந்தமை வரவேற்கப்பட வேண்டிய விடயம்.

ஜனதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்ட கையோடு குறித்த தேர்தலை தமிழ் மக்கள் எவ்வாறு கையாள்வது என்பது தொடர்பில் அனைத்துத் தமிழ் அரசியல் கட்சிகளுடனும் கலந்துரையாடி ஒரு பொது உடன்பாட்டை ஏற்படுத்துவது என்ற தீர்மானத்தை தமிழ் மக்கள் பேரவை எடுத்ததுடன் அதனை அறிவித்துமிருந்தது.

தமிழ் மக்கள் பேரவையால் எடுக்கப்பட்ட மேற்போந்த தீர்மானத்தை நிறைவேற்றுவதற்காக சமயத் தலைவர்கள், புத்திஜீவிகள், துறைசார் வல்லுநர்கள் அடங்கிய சுயாதீனக்குழுவொன்றையும் தமிழ் மக்கள் பேரவை அமைத்திருந்தது.

சுயாதீனக்குழுவானது தமிழ்த் தேசியப் பரப்பில் பயணிக்கும் அனைத்துத் தமிழ் கட்சிகளையும் சந்தித்துக் கலந்துரையாடியதுடன் தமிழ் அரசியல் கட்சித் தலைவர்கள் அனைவரையும் ஒரே மேசையில் இருத்தி ஒரு பொது உடன்பாட்டை ஏற்படுத்தும் முயற்சியில் இறங்கியபோது,

அதேவிடயத்தை யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மாணவர் ஒன்றியமும் முன்னெடுத்திருந்தது.

இந்நிலையில் தமிழ் அரசியல் கட்சித் தலைவர்கள் ஒன்றாகச் சந்திக்கின்ற கூட்டங்களில் சுயாதீனக்குழுவும் யாழ்.பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத்தோடு இணைந்து தமிழ் அரசியல் கட்சிகளிடையே ஒரு பொதுவான உடன்பாட்டை ஏற்படுத்துகின்ற முயற்சியில் ஈடுபட்டு வெற்றியும் கண்டுள்ளது.

இவ்வெற்றியானது சாதனைக்குரிய விடயம் என்பதைக் கூறித்தானாக வேண்டும்.

தமிழ்த் தேசியப் பரப்பில் பயணிக்கும் ஆறு அரசியல் கட்சிகள் ஒன்றாகப் பங்குபற்றிய போதிலும் தமிழ் மக்கள் சார்பில் பிரதானமான ஜனாதிபதி வேட்பாளர்களிடம் முன்வைக்கின்ற கோரிக்கைகள் அடங்கிய ஆவணத்தில் ஐந்து கட்சிகளின் தலைவர்கள் ஒப்பமிட்ட போதிலும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஒப்பமிடவில்லை என்பது கவலைக்குரியது.

ஆறு தமிழ்க் கட்சிகளும் கூட்டாக ஒப்பமிட்டிருந்தால் அது எங்கள் தமிழினத்தின் பலமான ஒற்றுமையாக இருந்திருக்கும்.

எனினும் ஐந்து அரசியல் கட்சிகள் ஒப்பமிட்டுள்ளன. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியுடன் தொடர்ந்து பேச்சுக்கள் நடத்தப்பட வேண்டும் என்பது நம் தாழ்மையான கருத்து.

எம்மைப் பொறுத்தவரை நாங்கள் எடுக்கின்ற அத்தனை விடயங்களும் எங்கள் தமிழ் இனம் வாழ வேண்டும். எங்கள் தமிழ் இனம் படுகின்ற துன்பத்துக்கு முடிவு கட்ட வேண்டும் என்பதுதான்.

எனவே எவ்வளவு தூரம் இறங்கிச் சென்று, விட்டுக்கொடுத்து அனைவரையும் அரவணைத்துச் செல்ல வேண்டும். இப்போதிருக்கின்ற மிக இக்கட்டான சூழ்நிலையில் தமிழினம் ஒற்றுமைப்படுவதுதான் ஒரே வழி.

தமிழினத்தின் ஒற்றுமை என்பது தமிழ் அரசியல் கட்சிகளின் ஒற்றுமைக்கூடாக எழுகை பெறவேண்டும்.

எனவே நல்ல முயற்சி நடந்துள்ளது. தமிழ் மக்கள் பேரவையின் விதைப்பு ஏதோவொரு வகையில் கருக்கட்டியுள்ளது. இனி ஒற்றுமைப்பலத்தோடு முயற்சிகளை முன்னெடுப்போம்.

நல்ல சிந்தனைகள், நல்ல எண்ணங்கள் நிச்சயம் வெற்றியைத் தரும்.

# தலைவர் பிரபாகரனை முன்வைத்தே எங்கள் அரசியல் பரப்புரை இருக்கும்

## சீமான் திட்டவட்டம்

(சென்னை)

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரனை முன்வைத்தே எங்கள் அரசியல் பரப்புரை இருக்கும் என நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் தெரிவித்தார்.

அத்துடன் முன்னாள் பிரத்மர் ராஜீவ் காந்தி குறித்த பேச்சைத் திரும்பப் பெற மாட்டேன் எனவும் அவர் தெரிவித்தார்.

ராஜீவ் காந்தியின் படுகொலை நியாயமானது என்ற வகையில் சீமான் பேசியமைக்கு நாடு முழுவதும் எதிர்ப்பலைகள் தோன்றியிருந்ததுடன், அவர் மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இந்நிலையில் இது குறித்து ஊடகமொன்றிற்கு கருத்துத் தெரிவித்த சீமான், "இதுபோன்ற பல வழக்குகளை சந்தித்து விட்டேன். பா.சிதம்பரத்தை வெளியில் கொண்டுவரவும், என்னை உள்ளே தள்ளவும் போராடுகிறார்கள். இப்போது பேசியதால் என்ன நடந்துவிடப்போகிறது?

காங்கிரஸ் கட்சியினர் எந்தப் பிரச்சினைக்காகப் போராடியுள்ளார்கள் எனத் தெரியவில்லை.

எனவே நான் பேசியதைத் திரும்பப் பெறப் போவதில்லை" என சீமான் மேலும் தெரிவித்தார். (இ-7)

## 11 தமிழ் இளைஞர்கள் கடத்தல்; நிறைவுக்கு வருகிறது விசாரணை!

(கொழும்பு)

2008 ஆம் ஆண்டு 11 தமிழ் இளைஞர்கள் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக நீதிமன்றத்தில் இடம்பெற்று வரும் வழக்கு விசாரணைகள் அடுத்த வாரமளவில் முடிவுக்கு வரவுள்ளது.

அத்தோடு குறித்த வழக்கு மேல் நீதிமன்றத்திற்கு மாற்றப்பட வாய்ப்புள்ளது என்பதுடன் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யவும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

இந்நிலையில் குறித்த வழக்கை மேல் நீதிமன்றத்திற்கு மாற்றுவதற்கும், சட்டமா அதிபர் திணைக்களத்தால் குற்றச்சாட்டுக்களைத் தாக்கல் செய்வதற்கும் முன்னர் விசாரணைகளை முழுமையாக முடிக்கவேண்டும் எனப் பாதிக்கப்பட்ட தரப்பு சார்பாக கடுமையாக வலியுறுத்தப்பட்டது.

இந்த விடயம் தொடர்பாக கருத்து தெரிவித்த சட்டத்தரணி அச்சலா செனவிரத்ன, "விசாரணை முழுமையாக முடிக்கப்படவில்லை என்று 11 இளைஞர்களின் பெற்றோர் உணர்கிறார்கள். இந்த வழக்கு 10 ஆண்டுகளாக நடந்து வருகிறது. இந்த நேரத்தில் குற்றச் சாட்டுக்களைத் தாக்கல் செய்வதில் என்ன அவசரம்?

முன்னாள் கடற்படைத் தளபதி அட்மிரல் வசந்த கரன்னகொட வழங்கிய சாட்சியங்களில் கூடுதல் விவரங்கள் வெளிவந்திருந்தால், பொலிஸ் குற்றப் புலனாய்வுத் துறை வழக்கை முடிக்க முயற்சிக்காமல் மேலதிக விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும்" எனக் கூறினார்.

கடந்த 2008 - 2009 ஆம் ஆண்டில் 11 தமிழ் இளைஞர்கள் கடத்தப்பட்டு காணாமற்போனமை குறித்து சி.ஐ.டி. அண்மையில் முன்னாள் கடற்படைத் தளபதி அட்மிரல் வசந்த கரன்னகொடவிடமிருந்து புதிய சாட்சியங்களைப் பதிவு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## திருச்சி மத்திய சிறையில் ஈழத்தமிழர்கள் போராட்டம்

(திருச்சி)

திருச்சி மத்திய சிறை வளாகத்தில் உள்ள சிறப்பு முகாமில் உள்ள இலங்கைத் தமிழர்களை விடுதலை செய்யக்கோரி 8 கைதிகள் காலவரையற்ற உண்ணாவிரத போராட்டத்தை நேற்று ஆரம்பித்துள்ளனர்.

கியூ பிரிவு பொலிஸார் தங்களைப் பொய் வழக்கில் கைது செய்து, விடுவிக்க மறுத்து வருவதாகத் தெரிவித்து இவர்கள் குறித்த போராட்டத்தை நேற்று ஆரம்பித்துள்ளனர்.

தமிழகத்தின் திருச்சி மத்திய சிறை வளாகத்தில் உள்ள சிறப்பு முகாமிலேயே மேற்படி போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர். (ஐ)

### ஜனாதிபதி வேட்பாளர் கோத்தபாய

## மனு நிராகரிக்கப்பட்டதற்கான காரணம் இன்று வெளியாகும்

(கொழும்பு)

ஜனாதிபதி வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ஷவின் இரட்டை குடியுரிமையை சவால் செய்யும் மனுவை நிராகரிப்பதற்கான காரணங்களை உள்ளடக்கிய மேல்முறையீட்டு நீதிமன்றத்தின் முழுமையான தீர்ப்பும் இன்று வழங்கப்பட உள்ளது.

இந்த மாத தொடக்கத்தில், ராஜபக்ஷவின் இரட்டை குடியுரிமை சான்றிதழ் தவறானது என, இரண்டு சமூக ஆர்வலர்கள் தாக்கல் செய்த மனுவை மேல்முறையீட்டு நீதிமன்றம் நிராகரித்தது.

2005 ஆம் ஆண்டில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால், அமைச்சரவை செயல்படாதபோது குடியுரிமை வழங்கப்பட்டதாக மனுதாரர்கள் வாதிட்டனர். ஆனால் குடியுரிமை விஷயங்களை அந்த நேரத்தில் பாதுகாப்பு அமைச்சு கையாண்டது.

மேல் முறையீட்டு நீதிமன்றத் தலைவர் யசந்தா கோடகொட, அர்ஜுன ஒப்சேகர, மஹிந்த சமயவர்தன ஆகியோர் அடங்கிய நீதிபதி ஆயம், மனுவை தள்ளுபடி செய்வதற்கான காரணங்கள் அடங்கிய இறுதித் தீர்ப்பை இன்று வெளியிடும். (ம-3)

## ஜனாதிபதியும் பிரதமரும் ராஜபக்ஷவாக இருப்பதை விரும்புகின்றீர்களா?

### மக்களை நோக்கி ஹரீன் கேள்வி

(ஹப்புத்தளை)

ஒரு குடும்பத்திடம் நாட்டைக் கையளிக்கப் போகின்றீர்களா? அல்லது மக்களுடன் நின்று சேவையாற்றும் சஜித்திடம் நாட்டின் பொறுப்பை வழங்கப் போகின்றீர்களா? என்று தொலைத்தொடர்பு, டிஜிற்றல் உட்கட்டமைப்பு வசதிகள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோ கேள்வியெழுப்பினார்.

அத்துடன் நாட்டின் பிரதமரும், ஜனாதிபதியும் ராஜபக்ஷவாக இருப்பதை விரும்புகின்றீர்களா? எனவும் அவர் கேள்வியெழுப்பினார்.

ஹப்புத்தளை நகரில் நேற்று முன்தினம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த புதிய ஜனநாயக முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவின் மக்கள் கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சிலர் பேஸ்புக் பக்கங்களில் சஜித் பிரேமதாஸவை விமர்சிக்கின்றார்கள். பழைய இறப்பர் செருப்பும், அரச அலுவலகப் பதிவாளர் போன்ற ஆடையும் அணிந்திருக்கும் சஜித் பிரேமதாஸவிற்கு எவ்வாறு வாக்களிப்பது என்று அவர்கள் கேட்கின்றார்கள். ஆனால் இவற்றிலிருந்தே சஜித் பிரேமதாஸ பொதுமக்களின் சேவையாளன் என்பது தெளிவாகின்றது.

அவருக்கு மாளிகை போன்ற இல்லங்களுக்கோ அல்லது வெளிநாட்டுக் கல்விக்கோ எவ்வித குறையும் இருக்கவில்லை. ஆனால் சாதாரண மக்கள் மத்தியில் சென்று சேவையாற்ற வேண்டும் என்பதே அவருடைய எதிர்பார்ப்பாக இருந்தது.

ஜனாதிபதித் தேர்தலில் அவரை எதிர்த்துக் களமிறங்கியிருக்கின்ற கோத்தபாய என்ற மனிதர் அரசியலில் பிரதேசசபைத் தேர்தலில் கூட களமிறங்கியதில்லை.

குறைந்தபட்சம் பிரதேசசபை நிர்வாகம் தொடர்பில் கூட அறியாத நபரொருவரால் இந்த நாட்டைச் சீரமைக்க முடியும் என்று கருதுகின்றீர்களா?

ஆனால் சஜித் பிரேமதாஸவிற்கு பௌத்த, இந்து, இஸ்லாமிய, கத்தோலிக்க மதத்தைச் சார்ந்தவர்கள் அனைவரும் ஒன்றுதான். அவரைப் பொறுத்தவரை இன, மத வேறுபாடுகள் எவையும் ஒரு பொருட்டல்ல. சஜித் பிரேமதாஸ அவருடைய தந்தையின் கொள்கைகளையும், செயற்பாடுகளையும் பின்பற்றி, அதே பாதையில் பயணிக்கின்ற ஒருவராவார் என்றும் ஹரீன் தெரிவித்தார். (இ-7)




இலங்கை கராதேத சம்மேளத்தினால் நடத்தப்பட்ட 2019 ற்கான வடமாகாண கராத்தே சுற்றுப் போட்டி கடந்த 28, 29 ஆம் திகதிகளில் சாவகச்சேரி இந்துக் கல்லூரியிலி நடைபெற்றது. இப்போட்டியில் பங்கு கொண்ட கிளி/செஞ்சோலை சிறுவர் இல்லத்தைச் சேர்ந்த கராத்தே அணியினர் 25 பதக்கங்களைபட பெற்று இல்லத்திற்கும் மாவட்டத்திற்கம் பெருமை சேர்த்துள்ளனர். (க)

# இந்திய கிரிக்கெட் வாரியத்தின் புதிய தலைவராக கங்குலி தேர்வு!



இந்திய கிரிக்கெட் வாரியத்தின் புதிய தலைவராக முன்னாள் தலைவர் சவுரவ் கங்குலி தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

இந்திய கிரிக்கெட் வாரியத்தின் புதிய தலைவராக முன்னாள் தலைவர் சவுரவ் கங்குலி இன்று ஒருமனதாக தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷாவின் மகன் ஜே ஷா புதிய செயலாளராகவும், அருண் துமால் புதிய பொருளாளராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அருண் துமால் நிதி மற்றும் கார்ப்பரேட் விவகாரங்களுக்கான அமைச்சரும், பிசிசிஐ முன்னாள் தலைவருமான அனுராக் தாக்கூரின் தம்பி என்பது குறிப்பிடத்தக்கது. (க)

# உலகளவிலான போட்டிகளில் 25 பதக்கங்கள் புதிய வரலாறு படைத்த வீராங்கனை



உலக ஆர்டிஸ்டிக் ஜிம்னாஸ்டிக்ஸ் சாம்பியன்ஷிப் போட்டியில், அமெரிக்க வீராங்கனை சிமோன் பைல்ஸ் முதலிடம் பிடித்து தங்கப்பதக்கத்தை வென்றார்.

ஜேர்மனியின் ஸ்டட்கர்ட் நகரில் உலக ஆர்டிஸ்டிக் ஜிம்னாஸ்டிக்ஸ் சாம்பியன்ஷிப் போட்டி நடந்தது. கடைசி நாளான நேற்று முன்தினம் பெண்களுக்கான புளோர் பிரிவில் போட்டிகள் நடைபெற்றன.

அதில், அமெரிக்க வீராங்கனை சிமோன் பைல்ஸ் சாகசத்தை காட்டி சிலிர்க்க வைத்தார். இதன் மூலம் அவர் 15.133 புள்ளிகளுடன் முதலிடத்தைப் பிடித்து தங்கப்பதக்கத்தை வென்றார்.

இதேபோல் பேலன்ஸ் பீம் பிரிவிலும் அவர் முதலிடம் பிடித்தார். இந்த தொடரில் அவர் கைப்பற்றும் 5ஆவது தங்கப்பதக்கம் இதுவாகும்.

இதன்மூலம் உலக ஜிம்னாஸ்டிக் போட்டியில் அவர் 25 பதக்கங்களை கைப்பற்றியுள்ளார். இதற்கு முன்பு உலக ஜிம்னாஸ்டிக்ஸ் வரலாற்றில், பெலாரஸ் வீரர் விடாலி ஸ்செர்போ 23 பதக்கங்களை வென்றதே அதிகபட்சமாக இருந்தது.

இந்நிலையில் தான் அடுத்தடுத்து 2 பதக்கங்களை கைப்பற்றியதன் மூலம் சிமோன் பைல்ஸ் புதிய வரலாறு படைத்துள்ளார். இவர் ரியோ ஒலிம்பிக்கில் 4 தங்க பதக்கங்களை வென்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (க)

# அதிவேகமாக 50 விக்கெட் சாதனை படைத்த அஸ்வின்!




தென்னாபிரிக்காவுக்கு எதிராக அதிவேகமாக 50 விக்கெட்டுகள் வீழ்த்திய 5ஆவது வீரர் என்ற சாதனையை அஸ்வின் படைத்துள்ளார்.

புனேவில் நடைபெற்ற டெஸ்ட் போட்டியில், இந்திய அணி இன்னிங்ஸ் மற்றும் 137 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தென்னாபிரிக்காவை வீழ்த்தியது. இந்த போட்டியில் முதல் இன்னிங்சில் 4 விக்கெட்டுகளை வீழ்த்திய தமிழக வீரர் அஸ்வின், இரண்டாவது இன்னிங்சில் 2 விக்கெட்டுகளை கைப்பற்றினார்.

இதன்மூலம், தென்னாபிரிக்க அணிக்கு எதிராக 50 விக்கெட்டுகளை கைப்பற்றிய 4ஆவது இந்திய வீரர் என்ற பெருமையை அஸ்வின் படைத்தார். இதற்கு முன்பு கும்ப்ளே(84), ஸ்ரீநாத்(64), ஹர்பஜன்சிங்(60) ஆகியோர் 50 விக்கெட்டுகளுக்கும் மேல் வீழ்த்தியுள்ளனர்.

மேலும், அந்த அணிக்கு எதிராக 9 டெஸ்டிலேயே 50 விக்கெட்டுகளை கைப்பற்றிய 5ஆவது வீரர் என்ற சாதனையையும் படைத்துள்ளார்.

அவுஸ்திரேலியாவின் பர்னஸ் 5 டெஸ்டிலும், இலங்கையின் முரளிதரன் 7 டெஸ்டிலும், அவுஸ்திரேலியாவின் ஒயிட்டி மற்றும் கிரீம்மெட் ஆகியோர் தலா 8 டெஸ்டிலும் தென்னாபிரிக்காவுக்கு எதிராக 50 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளனர். (க)

# நாடுதான் முதல் அதன் பின்பே வீடு

## டோனி அதிரடி



இந்திய அணியின் நட்சத்திர வீரரான டோனியிடம் கேட்ட கேள்விக்கு அவர் சொன்ன பதில் சமூகவலைத்தளங்களில் பலரது பாராட்டுக்களை பெற்று வருகிறது.

இங்கிலாந்தில் நடைபெற்ற உலகக்கோப்பை தொடருக்கு பின் டோனி இந்திய அணி கலந்து கொள்ளும் தொடரில் பங்கேற்காமல் , தன்னை தேர்வு செய்ய வேண்டாம் என்று கூறி. இரண்டு வாரம் இந்திய இராணுவத்தில் சேர்ந்து பயிற்சி மேற்கொண்டார்.

அதன் பின் தன் குடும்பத்தினருடன் நேரம் செலவிட்டு வரும் டோனி. நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்ட புகைப்படம் சமூக வலைத் தளங்களில் வைரலாகி வருகிறது.

அதில் தொகுப்பாளர் ஒருவர் , டோனியிடம், நீங்கள் கப்டன் கூல் டோனியா? அப்பாவா கூலாக இருக்கும் டோனியா? மனைவியிடம் கூலாக இருக்கும் டோனியா? என்று கேள்வி எழுப்பினார்.

அதற்கு டோனி சற்றும் யோசிக்காமல் நான் கப்டன் கூல் டோனி தான், என்னை பொறுத்தவரை நாடு தான் முதலில் என்று பதிலளித்தார்.

இதற்கு சமூகவலைத் தளங்களில் டோனிக்கு பாராட்டுகள் குவிந்து வருகிறது. (க)

## பொது உடன்படிக்கையில்...

எதிர்வரும் நவம்பர் 16 ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் சார்பில் பொது நிலைப்பாடொன்றை வெளிப்படுத்தும் நோக்கில், தமிழ்த் தேசியக் கட்சிகளிடையே இணக்கம் ஏற்படுத்தும் வகையில் யாழ்ப்பாண பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட கூட்டம் யாழ். பல்கலைக் கழகத்துக்கு அண்மையில் அமைந்துள்ள 'ப்றைட் இன்' விடுதியில் நேற்று நடைபெற்றது.

யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகளுடன் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் சார்பில் அதன் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான மாவை. சோ.சேனாதிராசா, ஊடகப் பேச்சாளரும், பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன், வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் ஆகியோரும் தமிழ் மக்கள் கூட்டணி சார்பில் அதன் செயலாளரும், வடக்கு மாகாண சபையின் முதலமைச்சருமான சி.வி.விக்னேஸ்வரன், ஊடகப் பேச்சாளர் க.அருந்தவபாலன் ஆகியோரும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் சார்பில் அதன் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செயலாளர் செ.கஜேந்திரன் மற்றும் சட்டத்தரணிகளான வி. மணிவண்ணன், க.சுகாஸ் ஆகியோரும், புளொட் சார்பில் அதன் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான த.சித்தார்த்தன், வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் பா.கஜதீபன் ஆகியோரும், ரெலோ சார்பில் அதன் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன், செயலாளரும் சிரேஸ்ட சட்டத்தரணியுமான ந. சிறீகாந்தா, வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் சபா. குகதாஸ் ஆகியோரும், ஈ.பி.ஆர்.எல்.எவ் சார்பில் அதன் தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

தமிழ் மக்கள் பேரவையின் சுயாதீனக் குழு சார்பில் கிறிஸ்தவ மதகுரு ஒருவரும், சின்மிய மிசன் வதிவிட ஆச்சாரி சிதாகாசானந்தா சுவாமிகளும், யாழ். பல்கலைக்கழக அரசறிவியற்றுறைப் பேராசிரியர் கே.ரி.கணேசலிங்கம், அரசியல் ஆய்வாளர் அ.ஜோதிலிங்கம் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

சந்திப்பின் ஆரம்பம் முதல் பலமான வாதப் பிரதிவாதங்கள் இடம்பெற்றன. சமஸ்டியா? ஒற்றையாட்சியா? என்பது குறித்து தங்களது நிலைப்பாட்டில் மாற்றமேதுமில்லை என்ற நிலைப்பாட்டுடன் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி விடாப்பிடியாக நின்றது.

இடைக்கால அரசியலமைப்பை எதிர்ப்பதான பதம் உடன்படிக்கையில் இடம்பெற வேண்டும் என முன்னணி தொடர்ந்து கேட்டவண்ணம் இருந்ததால் ஏனைய ஐந்து கட்சிகளும் அதை எதிர்த்தன.

கஜேந்திரகுமார் பொன்னம்பலத்துக்கும் மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகளிக்கும் இடையிலான வாக்குவாதம் இடம்பெற்றுக் கொண்டிருந்த போது, ஏனைய கட்சிகளின் பிரதிநிதிகளில் சிலர் தாம் ஒப்பமிட்டு விட்டு போகப் போவதாகத் தெரிவித்தனர். அதன் பின் சல சலப்பு சற்று அடங்கியதுடன் ஏனைய கட்சிகளின் பிரதிநிதிகள் ஒவ்வொருவராக ஆவணத்தில் ஒப்பமிடத் தொடங்கினர்.

சல சலப்பின் பின் இலங்கை தமிழரசுக் கட்சி, தமிழ் மக்கள் கூட்டணி, புளொட், ரெலோ, ஈ. பி. ஆர். எல். எவ் ஆகிய கட்சிகளின் தலைவர்கள் ஒப்பமிட்டுவிட்டு சென்றனர். தமிழ் தேசிய மக்கள் முன்னணி தாம் அனைத்து கோரிக்கைகளுடனும் உடன்படுவதாகவும் இறுதியாக தாம் தெரிவித்த இடைக்கால அறிக்கை தொடர்பான கருத்து அறிக்கையில் சேர்க்கப்படாததால் குறித்த உடன்பாட்டில் கையெழுத்து வைக்காமல் வெளியேறியிருந்தனர். (ம-3,9,10,78)

## தென்மராட்சியில்...

பயங்கரவாத ஒழிப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்ட ஒருவர் வழங்கிய தகவலுக்கு அமைய வரணி குடமியான் பகுதியில் உள்ள வீடு ஒன்றினை நேற்று திங்கட்கிழமை பயங்கரவாத ஒழிப்பு பிரிவினர் சோதனை மேற்கொண்டனர்.

இதன்போது வீட்டு வளவில் புதைத்து வைக்கப்பட்டிருந்த பழமையான கிளைமோர் குண்டு ஒன்று மீட்கப்பட்டுள்ளது. (ம-3.60)

## கோண்டாவிலில்...

கடந்த வாரம் திருகோணமலையின் சேருநுவர பகுதியில் கைதான கிளிநொச்சியை சேர்ந்த முன்னாள் போராளி குடும்பத்திடம் நடத்தப்பட்ட விசாரணையையடுத்தே, இவை மீட்கப்பட்டுள்ளன என பொலிஸ் ஊடக பேச்சாளர் தெரிவித்தார். புதைக்கப்பட்ட நிலையில் அவை மீட்கப்பட்டன. (ம-3)

## யாழ்.இளைஞன்...

யாழ்ப்பாணத்தை பூர்வீகமாக கொண்ட ஷர்மிலன் பிரமணந்தா என்ற 25 வயது தமிழ் இளைஞனே இவ்வாறு உயிரிழந்தவர் ஆவார். (ம-3)

## தென்னிலங்கை...

தெரிவித்துள்ளார்.

யாழில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த அவர், இந்த பணிகளுக்காக தென்னிலங்கையர்கள் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் குற்றம் சாட்டினார்.

குறிப்பாக எதிர்வரும் 17 ஆம் திகதி திறக்கப்படவுள்ள யாழ். சர்வதேச விமான நிலையத்திற்கான பணிகளுக்கு 93 சிங்கள இளைஞர்கள் யுவதிகள் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

ஜனாதிபதி தேர்தல் இடம்பெறவுள்ள சந்தர்ப்பத்தில் கூட தமிழ் மாகாணத்திலேயே எமது இளைஞர் யுவதிகள் புறக்கணிக்கப்படுவதை ஏற்றுக்கொள்ள முடியாது என கூறினார்.

அத்தோடு இந்த விவகாரம் தொடர்பாக தமிழ் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்கள் அழுத்தம் கொடுக்க வேண்டும் எனவும் அவர் கூறினார். (ம-3)

## தமிழரின் பிரச்சினைகளுக்கு...

செயலாளருமான சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

வாராந்த கேள்வியொன்றுக்கு பதில் வழங்கி அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கைஒன்றில் இந்த விடயத்தைக் கூறியுள்ளார். அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தமிழ் மக்களது பிரச்சினைகளை சிங்கள மக்களும் தலைவர்க்ளும் புரிந்துகொள்ள ஆரம்பித்துள்ளனர்.

கடந்த காலங்களில் விடுதலைப் புலிகளுக்கு எதிரான போருக்காக, இலங்கை அரசாங்கம் பாதுகாப்பு செலவினங்களுக்கான நிதி ஒதுக்கீட்டை அதிகளவில் மேற்கொண்டது.

தற்போது அண்மையில் நடத்தப்பட்ட ஏப்ரல் 21 தாக்குதலை அடுத்து, புதிய வகையான பயங்கரவாத அச்சுறுத்தல் ஒன்று உருவாகி இருக்கிறது.

இந்த புதிய, கொடூரமான அச்சுறுத்தலை எதிர்கொள்வதற்காகவே படையினர் தயார்ப்படுத்தப்படுவர் என்பதோடு, தமிழ் மக்களுக்கான தீர்வினை வழங்கிவிட்டால், தமிழ் சமூகத்தில் இருந்து வன்முறைகள் எழுவதை தடுக்க முடியும் என்ற எண்ணத்தை சிங்களத் தலைவர்கள் புரிந்துகொள்ள ஆரம்பித்துள்ளனர்.

இதன் ஊடாக தமிழ் மக்களது பிரச்சினைகளுக்கு விரைவாக தீர்வு கிடைக்கும் சாத்தியம் இருக்கிறது என்று விக்னேஸ்வரன் தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். (ம-3)

## ஆனால் ஒரு...

த இந்து ஆங்கில நாளிதழிற்கு வழங்கிய செவ்வியில் இதனை குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் குறிப்பிடுகையில்,

2015 ஆம் ஆண்டில் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தின் பின்னணியில் இந்தியா அல்லது வேறு எந்த நாடும் பின்னணியில் இருந்தன என்பதற்கு தனிப்பட்ட முறையில் என்னிடம் எந்த ஆதாரமும் இல்லை. ஆனால், அப்போது என்ன தவறுகளை விட்டோம் என்பதை, இப்போது நாங்கள் நன்றாக புரிந்து கொண்டோம். முன்னர் எங்கள் அரசாங்கத்தை மாற்ற அவர்கள் செயற்பட்டிருந்தால், இப்போது நிலைமையை சரிசெய்துள்ளோம் என்றார்.

இந்தியா எங்கள் முதலிட நண்பர் மற்றும் அண்டை நாடு, எனவே அரசியல் மற்றும் பாதுகாப்பு விடயங்களில் நாங்கள் எப்போதும் இந்தியாவுடன் நெருங்கி செயற்பட வேண்டும். ஆனால் பொருளாதார மற்றும் பிற விடயங்களில் நீங்கள் சீனாவை மறக்க முடியாது, என்று அவர் கூறினார்.

தமது ஆட்சியில் அதிகாரப்பகிர்வின் மூலம் தேசிய பிரச்சனை தீர்க்கப்படும் என்றும் தெரிவித்தார். எனினும், புதிய அரசியலமைப்பு ஒன்று அவசியமா என்பதை நாட்டு மக்கள் தீர்மானிக்கட்டும் என்றார். (ம-3)

## மதுவரித்திணைக்களத்தினர்...

னம் சேதமடைந்துள்ளது.

குறித்தசம்பவம் தொடர்பாக தெரிய வருகையில் கிளிநொச்சியில் பாரியபோதைப் பொருள் கடத்தல் இடம்பெறவுள்ளதாக மதுவரித் திணைக்களத்திற்கும் பொலிஸாருக்கும் இரகசிய தகவல் கிடைத்துள்ளது.

குறித்ததகவலின் அடிப்படையில் மதுவரித்திணைக்களத்தின் பொறுப்பதிகாரி, உத்தியோகத்தர் மற்றும் பொது மகன் ஒருவரும் வாடகை வாகனம் ஒன்றில் தேடுதலை மேற்கொள்ள அறிவியல் நகர் காட்டுப் பகுதிக்குள் சென்றுள்ளனர்.

இதேவேளை கிளிநொச்சி பொலிஸ் குழுவினரும் தமக்கு கிடைத்ததகவலின் அடிப்படையில் குறித்த பகுதிக்கு சென்றுள்ளனர். மதுவரித்திணைக்களம் மற்றும் பொலிஸார் ஆகிய இரண்டு தரப்பினர்களுக்கும் இடையே தொடர்பாடலற்ற நிலையில் சிவில் உடையில் சென்றபொலிஸார் வாடகை வாகனத்தில் வந்த மதுவரித்திணைக்களத்தின் வாகனத்தை நிறுத்துமாறு கூறியபோது அவர்கள் வாகனத்தை நிறுத்தாது சென்றுள்ளனர்.

இந்த நிலையிலேயே வாகனத்தின் மீதுபொலிஸார் துப்பாக்கிச் சூடு மேற்கொண்டுள்ளனர்.

இந்தசூட்டுச் சம்பவத்தில் மதுவரித் திணைக்களத்தினருடன் சென்ற மன்னாரைச்சேர்ந்த அன்ரனி துரைநாயகம் பேனாட் பிரசன்னா என்ற குடும்பஸ்தர் காயமடைந்துள்ளார்.

கெப்பரிகொலாவ பிரதேசத்தை சேர்ந்த மதுவரித் திணைக்களத்தின் பொறுப்பதிகாரி உள்ளிட்ட குழுவினரே கிளிநொச்சிக்குபயணித்து பெருமளவு பணத்துடன் போதைப் பொருளைகொள்வனவு செய்பவர்கள் போன்று சென்று காத்திருந்த போதே சிவில் உடையில் சென்ற பொலிஸார் வாகனத்தை நிறுத்த முற்பட்டுள்ளனர்.

இதன்போதே இந்தவிபரீதம் ஏற்பட்டுள்ளது. இச்சம்பவம் தொடர்பானமேலதிக விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-3,9,350)

## எங்களை திட்ட...

கட்டியுள்ளனர் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் குற்றம் சுமத்தினார். பொது இணக்கப்பாடு தொடர்பாக தமிழ்க் கட்சிகளுக்கிடையிலான சந்திப்பு தொடர்பில் ஊடகவியலாளரிடம் பேசிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

நான் மக்களுக்கு எச்சரிக்கிறேன். இந்த ஐந்து கட்சிகளையும் நம்பி வரப்போகும் தேர்தலில் முடிவெடுத்தால், இனத்திற்கு கிடைக்கக் கூடிய உரிமைகளை மட்டுமல்ல, அன்றாட பிரச்சினைகளுக்கு தீர்வு காணக்கூடிய சந்தர்ப்பங்களையும் நாம் இழக்க நேரிடும்.

போலி ஒற்றுமையைக் காட்டி பதவிகளை பெற்று, மக்களை ஏமாற்ற நாங்கள் தயாரில்லை. சிங்கள கட்சிகளும், சிங்கள பேரினவாத தரப்புக்களும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வழங்கத் தயாராக இருந்த மரியாதையைக் கூட, இந்தக் கட்சிகள் தமிழ் தேசிய முன்னணிக்குத் தரவில்லை என்றார். (ம-3)


















# ஐந்து கட்சிகள்...

இலங்கைத் தீவின் தேசிய கேள்வியாக கடந்த பல தசாப்தங்களாக நீடித்து வந்திருப்பதும் மூன்று தசாப்தங்களுக்கு மேலாக நீடித்து நிகழ்ந்த யுத்தத்திற்கு வழிவகுத்தது மான, தமிழ்த் தேசிய இனப்பிரச்சினை நிரந்தரமான தீர்வு என்பது தமிழ்த் தேசிய இனத்தின் அரசியல் அபிலாசைகளை அங்கீகரித்து வடக்கு கிழக்கு மாகாணங்களை உள்ளடக்கிய பிரதேசம் தமிழ்த் தேசத்தின் வரலாற்று ரீதியான வாழ்விடம் என்பதையும் மரபுவழி தாயகம் என்பதையும் அங்கீகரித்து அதற்கு தனித்துவமான இறைமை உண்டு என்பதனையும் அங்கீகரித்து, தமிழ் மக்களுக்கு சர்வதேச சட்டத்தின் கீழ் சுயநிர்ணய உரிமை உண்டு என்பதை அங்கீகரித்து, சமஷ்டி ஆட்சி முறையின் கீழ் ஏற்படுத்தப்பட வேண்டும் எனும் எமது நிலைப்பாட்டுக்கு அமைவாக,

நடந்து முடிந்த யுத்தத்தின் தாக்கத்தாலும் நீடித்துக் கொண்டிருக்கும் விளைவுகளாலும் தமிழ் மக்கள் தொடர்ந்து எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு உடனடியான தீர்வை சாத்தியமான வழிகளில் காண முடியும் என்ற நம்பிக்கையுடனும் எதிர்பார்ப்புடனும் தமிழ் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் அரசியல் கட்சிகளாகிய நாம் இதற்கு கீழ் காணப்படும் கோரிக்கைகளை ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் பிரதான அரசியல் கட்சிகளிடமும் அவற்றின் ஜனாதிபதி வேட்பாளர்களிடமும் முன்வைக்கின்றோம்.

**கோரிக்கைகள்**

- புதிதாக உருவாக்கப்படும் அரசியலமைப்பு ஒற்றையாட்சி முறை மையை நிராகரித்து தமிழ்த் தேசத்தினை அங்கீகரித்து அதற்கு தனித்துவமான இறைமை உண்டு என்பதனையும் தமிழ் மக்கள் சர்வதேச சட்டத்தின் கீழ் சுயநிர்ணய உரிமைக்கு உரித்துடையவர்கள் என்பதையும் அங்கீகரித்து சமஷ்டி ஆட்சி முறைமையின் கீழ் இலங்கையின் தமிழ்த் தேசிய இனப் பிரச்சினைக்கு தீர்வு காணப்பட வேண்டும்.
- இறுதிப் போரில் இடம்பெற்ற போர்க் குற்றங்கள் மற்றும் மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் மற்றும் இனப்படுகொலை என்பவற்றுக்கு முழுமையான பக்கச்சார்பற்ற சர்வதேச பொறிமுறைகளான சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் / சர்வதேச தீர்ப்பாயம் ஊடாக விசாரணைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.
- பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்பட வேண்டும்.
- தமிழ் அரசியல் கைதிகள் அனைவரும் நிபந்தனையின்றி விடுதலை செய்யப்படல் வேண்டும்
- வலிந்து காணாமலாக்கப்பட்டவர்கள் விவகாரத்தில் சர்வதேச பொறிமுறைகளின் கீழ் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்கப்படல் வேண்டும்.
- வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நிலை கொண்டிருக்கும் அரச படைகள் போருக்கு முன் தமிழ் மக்களின் பாவனையிலிருந்த தனியார் மற்றும் அரச காணிகளிலிருந்து வெளியேற்றப்பட்டு அக்காணிகள் அனைத்தும் உடனடியாக விடுவிக்கப்படுவதுடன் மீள்குடியேற்ற நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட வேண்டும்
- வடக்கு கிழக்கு மாகாணங்களில் அரச ஆதரவுடன் இடம்பெற்றுக் கொண்டிருக்கும் சிங்கள மயமாக்கல், பௌத்த மயமாக்கள் மற்றும் சிங்களக் குடியேற்றங்கள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்
- வடக்கிற்கு மகாவலி நதியை திசை திருப்புவது என்ற போர்வையயில் வடக்கு மாகாணத்தில் சிங்கள குடியேற்றங்களை ஏற்படுத்துவதற்கு மாத்திரமே திட்டமிட்டு செயற்படும் சபையாக மகாவலி அதிகார சபை இயங்குவதால் மகாவலி அதிகாரசபையின் நியாயாதிக்கம் வடக்கில் இல்லாது ஒழிக்கப்பட வேண்டும். அத்துடன் கிழக்கு மாகாணத்தில் மகாவலி அபிவிருத்தி திட்டம் என்ற பெயரில் இடம்பெறும் திட்டமிட்ட சிங்கள குடியேற்றங்கள் அனைத்தும் நிறுத்தப்படல் வேண்டும்
- அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்ட மொரகஸ்கந்த நீர்ப்பாசனத்திட்டத்தின் கீழ் வன்னிப் பிரதேசத்தில் திட்டமிட்டு மேற்கொள்ளப்படும் சிங்கள குடியேற்றங்கள் அனைத்தும் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.
- தொல்லியல் திணைக்களம், வனவள திணைக்களம், வனஜீவராசிகள் திணைக்களம் உட்பட பல அரச திணைக்களங்கள் ஊடாக மேற்கொள்ளப்பட்டு வரும் நில, வழிபாட்டு தல ஆக்கிரமிப்புக்கள் அனைத்தும் உடனடியாக நிறுத்தப்படல் வேண்டும். மேற்குறிப்பிட்ட திணைக்களங்கள் ஊடாக ஆக்கிரமிக்கப்பட்ட நிலங்கள் அனைத்தும் ஏற்கெனவே வெளியிடப்பட்டுள்ள அரசிதழ் பிரகடனங்களிலிருந்து விடுவிக்கப்படல் வேண்டும்
- போரினால் பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கு மாகாணங்களில் அபிவிருத்தியையும் இளைஞர்களின் வேலை வாய்ப்புக்களையும் ஏற்படுத்துவதை நோக்காக கொண்டு வெளிநாடுகளில் வாழும் இலங்கையர்களிடமிருந்து நேரடி முதலீடுகளை இலகுவாக பெற்றுக் கொள்வதற்கு ஏதுவாக இங்கு காணிகளையும் மற்றும் நிதிகளையும் கையாள்வதில் இப்போது அவர்கள் எதிர்கொள்ளும் சட்டப்பிரச்சினைகளை தீர்க்க வேண்டும்.
- வடக்கு – கிழக்குக்கான அரச மற்றும் தனியாா துறைகளின் வேலை வாய்ப்புக்களில் அந்தந்த மாகாணத்தைச் சார்ந்த மக்களுக்கே முன்னுரிமை வழங்கப்படல் வேண்டும்.
- வடக்கு – கிழக்கினை போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசமாக பிரகடனப்படுத்தி அதன் அபிவிருத்திக்கான நிதியினை கையாள்வதற்கு வடக்கு கிழக்கில் தெரிவு செய்யப்பட்ட மக்கள் பிரதிநிதிகளின் நெறிப்படுத்தலில் பொதுக் கட்டமைப் பொன்றினை உருவாக்குதல் வேண்டும்.

மேற்சொன்ன கோரிக்கைகளில் உடனடியாகத் தீர்க்கப்பட வேண்டிய விடயங்களுக்கு ஜனாதிபதித் தேர்தல் முடிவடைந்து புதிய ஜனாதிபதி பதவியேற்று மூன்று மாத காலப் பகுதிக்குள் தீர்வு காணப்பட வேண்டும் என்றுள்ளது. (ம-3,9,10)

## நீராவியடி விவகாரம்

# மேன்முறையீட்டு நீதிமன்றில் நேற்று மனுத்தாக்கல்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு - பழைய செம்மலை, நீராவியடிப் பிள்ளையார் ஆலய வளாகத்தில் நீதிமன்ற உத்தரவை மீறி பௌத்த பிக்குவின் உடல் தகனம் செய்யப்பட்டது தொடர்பாக மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சாந்தி ஸ்ரீஸ்கந்தராஜாவினால் நேற்று இந்த மனு தாக்கல் செய்யப்பட்டது.

நீராவியடிப் பிள்ளையார் ஆலய வளாகத்திற்குள் பௌத்த பிக்குவின் சடலத்தை தகனம் செய்வதற்கு முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றினால் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது.

எனினும் தடையுத்தரவை மீறி, ஆலய வளாகத்தில் பௌத்த பிக்குவின் உடல தகனம் செய்யப்பட்டதற்கு எதிராகவே நேற்றைய தினம் மேன்முறையீட்டு நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (ம்-3)

# சர்வதேச தரத்துக்கு அமைய யாழ்ப்பாணம் விமான நிலையம்

(கொழும்பு)

யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையம் சர்வதேச தரத்திற்கு இணங்க, அனைத்து அடிப்படை வசதிகளையும் கொண்டிருக்கும் என்று சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபையினால் சான்று அளிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து தகவல் வெளியிட்ட சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் அதிகாரி ஒருவர்,

"ஆரம்பத்தில் யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையம் பகல் நேரத்தில் மாத்திரம் இயங்கும்.

விமான ஓடுபாதை சமிக்ஞை விளக்குப் பொறிமுறைகள் பொருத்தப்பட்டதும், நாள் முழுவதும் செயற்படக் கூடியதாக இருக்கும்.

அனைத்து எல்லை கட்டுப்பாட்டு முறைகளும் வழக்கம்போல செயற்படுத்தப்படும்.

அத்துடன், சுங்கத் தீர்வையற்ற வசதிகள் உள்ளிட்ட அனைத்து அடிப்படை வசதிகளும் இங்கு கிடைக்கும்" என்றும் அவர் தெரிவித்தார். (ம-3)


**வீடு விற்பனைக்கு**

வட்டுக் கிழக்கு, வட்டுக்கோட்டை குளிப்பன் வீதியில் 1 3/4 பரப்புடைய வீடு சகல வசதிகளுடன் விற்பனைக்கு உண்டு.
விலை பேசித் தீர்மானிக்கலாம். (சி-7915)
தொடர்புக்கு:- 077 803 7876

**காணி விற்பனைக்கு**

தாவடி பிள்ளையார் கோயிலில் இருந்து 200m தூரத்தில் 12 நிலப்பரப்புக் காணி முழுவதுமாகவும் பகுதியாகவும் விற்பனைக்கு உண்டு. (649)
தொடர்பு கொள்ள வேண்டிய இலக்கம்
077 775 6448

**வீடு விற்பனைக்கு**

K.K.S வீதி, கோண்டாவில் உப்புமடம் சந்திக்கு அருகாமையில் 2 பரப்புடன் கூடிய வீடு விற்பனைக்கு உண்டு. விலை பேசித் தீர்மானிக்கப்படும்.
தரகர் தேவையில்லை. (653)
077 563 3401

**வீடு வாடகைக்கு**

யாழ்.பஸ் நிலையத்துக்கு அண்மையில் இரண்டு (02) வீடுகள் வாடகைக்குண்டு.
(பல்கலைக்கழக மாணவர்களுக்கு முன்னுரிமை)
தொடர்பு (சி-7916)
077 602 9784

**பெண் வேலையாள் தேவை**

யாழ்.நகரில் இயங்கும் புடைவைக் கடைக்கு பெண் வேலையாள் தேவை.
அடிப்படைச் சம்பளம் 13500/-
தொடர்பு:- (C-7917)
077 855 4840

**விரைவு பொதிகள் சேவை**

விசேட விலை குறைப்பு



UK - 550 /=Kg
கனடா - 950 /=Kg
ஜேர்மனி - 650 /=Kg
நெதர்லாந்து- 700 /=Kg
இத்தாலி- 700 /=Kg (நிபந்தனைகளுக்குட்பட்டது)
DELIVERY IN 3-5 DAYS
0768226240
யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • நெல்லியடி • கொடிகாமம் • வல்வெட்டித்துறை • பருத்தித்துறை • மானிப்பாய் • திருகோணமலை • சாவகச்சேரி • சுன்னாகம் • மருதங்கேணி
V2 TRAVELS (C-7539)

**பணியாளர் தேவை**



கிளிநொச்சியில் இயங்கும் குரு காட்வெயார் நிறுவனத்துக்கு பணியாளர்கள் தேவை
ஆண், பெண் இருபாலாரும்
சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
இல.175, கரடிப்போக்கு சந்தி, A9 வீதி, கிளிநொச்சி.
077 869 1045 (634)

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்

**றாஜ் நகை மாடம்**

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.
தொடர்பு: றாஜ் - 077 679 6623 (643)

**அமெரிக்க லொத்தர் விசா**

பதிவுகள் ஆரம்பமாகிவிட்டன
2021ல் நீங்களும் அமெரிக்காவில்..
ஒரு உறுதியான முடிவு உங்கள் வாழ்க்கையை மாற்றிவிடும்!
18 வயதிற்க்கு மேற்பட்ட யாரும் தனியாக விண்ணப்பிக்கலாம் 0768226241
இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற அரிய சந்தர்ப்பம்
குடும்பத்தினர்களுக்கு இரண்டு வாய்ப்புக்கள் 02-10-2019 தொடக்கம் 05-11-2019 வரை
வெளிநாட்டில் வாழ ஒரு இலவச சந்தர்ப்பம்! தவறவிடாதீர்கள்!

| யாழ்ப்பாணம் | கிளிநொச்சி | நெல்லியடி | சாவகச்சேரி | திருகோணமலை | புதுக்குடியிருப்பு |
|---|---|---|---|---|---|
| 0768226243 | 0768226240 | 0776699892 | 0768226242 | 0768226237 | 0764550673 |
| மானிப்பாய் | சுன்னாகம் | கொடிகாமம் | பருத்தித்துறை | வல்வெட்டித்துறை | மருதங்கேணி |
| 0768226238 | 0764550670 | 0764550675 | 0768226230 | 0776697960 | 0764550671 |

V2 Travels www.facebook.com/v2tandt (C-7906)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 15.10.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.